# வைரவிழா மலர்

# Diamond Jubilee Souvenir

1955 - 2015

# 60









கருணா நிலையம், கிளிநொச்சி
Karuna Nilayam, Kilinochchi

அதற்கு அரசர்,
**மிகச்சிறியோராகிய என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவருக்கு நீங்கள் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்** என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

மத்தேயு 25:40


And the King will answer them, 'Truly, I say to you, **as you did it to one of the least of these my brethren, you did it to me.'**

*(Matthew 25:40)*

Fr. S.K Daniel
077 288 18 78
rev.danielsk@gmail.com

# கருணா நிலையம், கிளிநொச்சி
# Karuna Nilayam, Kilinochchi

1955 - 2015



# வைரவிழா மலர்
# Diamond Jubilee Souvenir

Published by
60th Anniversary Souvenir Committee

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | வைரவிழா மலர் |
| விடயம் | : | வரலாறு |
| ஆசிரியர் | : | மலர் வெளியீட்டுக்குழு |
| | | செல்வி..S.M.ரெனிக்கா |
| | | அருட்பணி.S.K.டானியல் |
| | | திருஅருட்பணி.S.J.ஜெயவீரசிங்கன் |
| | | அருட்பணி.S.D.P.செல்வன் |
| பக்கங்கள் | : | viii + 122 |
| முதற்பதிப்பு | : | ஒக்ரோபர் 2015 |
| பதிப்புரிமை | : | கருணா நிலையம், கிளிநொச்சி. |
| வெளியீடு | : | கருணா நிலையம், கிளிநொச்சி. |
| கணனி வடிவமைப்பு, அட்டை | : | ஒன் லைன் அச்சகம், வவுனியா. |
| அச்சுப் பதிப்பு | : | ஒன் லைன் அச்சகம், வவுனியா. |

| | | |
|---|---|---|
| Title | : | Diamond Jubilee Souvenir |
| Subject | : | History |
| Editor | : | Souvenir Committee |
| | | Ms.S.M.Renika |
| | | Revd. Fr.S.K.Danial |
| | | Ven.S.J.Jeyaveerasingan |
| | | Revd. Fr .S.D.P.Selvan |
| Pages | : | viii + 122 |
| First Edition | : | October 2015 |
| Copy Right | : | Karuna Nilayam, Kilinochchi |
| Published by | : | Karuna Nilayam, Kilinochchi. |
| Computer Work & Cover | : | On Line Printers, Vavuniya. |
| Printed By | : | On Line Printers, Vavuniya. |

# செவ்வி மியூறியல் வயலட் ஹட்சின்ஸ்

அவர்களுக்கு அர்ப்பணம்

## Dedicated to Ms.Muriel Violet Hutchins



**செவ்வி மியூறியல் வயலட் ஹட்சின்ஸ்**

**Ms.Muriel Violet Hutchins**

கருணா நிலைய தோற்றுனர்

வன்னியின் பணியாளர் தலைமைத்துவ மாதிரி

Founder of Karuna Nilayam

Model Servant hood Leader of Vanni

## கருணா நிலையத்தின் பணிக்கூற்று:

தங்கள் உரிமைப்படுநிலை மதிப்பு மிக்கது
என உணரும் வகையில் அன்பில்
மற்றும் சேவை புரிவதில் திறமுடைய
கிறிஸ்து சமூகமாக விளங்கல் எமது பணியாகும்.

கடவுளின் கொடைகள் எமக்குள் என்பதை
இனங்காணவும், சிறப்பாற்றலை தேடவும்,
எமது உண்மை நிலையின் மேம்பாட்டை பேணவும்
நாம் ஒருவருக்கொருவர் உதவி புரிவோம்.

## MISSION STATEMENT

Our mission is to be an active Christian
community of love and service,
where all feel they belong and are
valued.
we will help each other to recognize the
gifts of God within us, to search for
excellence and to foster the development
of our true self.

# ஆசிரியர் உரை
## Editorial:

ஆண்டு விழாக்கள் முக்கியமாக வெள்ளிவிழா, வைரவிழா, நூற்றாண்டுவிழா போன்றவை வரலாற்றில் மிகவும் முக்கியமானவை. இவை நாம் எங்கே இருந்தோம்? தற்போது எங்கே இருக்கிறோம்? என்பதை ஆழமாக நோக்கச் செய்யும். கடவுளின் திருமுன் நன்றி பகிரல், தவறுணர்தல், திட்டமிடல் என்பவை சமூகமாக செய்யப்பட வேண்டியவை. செல்வி மியூரியல் வயலட் ஹட்சின்ஸ் அவர்களுடன் தொடங்கி இன்றுவரை கருணா நிலையத்தை வழிநடத்தும் கடவுளுக்கு நன்றி பகிர்வது அடிப்படை. "ஒடுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டு கைவிடப்பட்டோரை" இயல்பாக வாழ அழைத்த கருணாநிலையம், இன்றும் அதனை செய்யவேண்டிய அளவுக்கு செய்துவருகின்றதா? என இதயசுத்தியுடன் தேடி தவறுணர்வது இரண்டாவது படி. மூன்றாவது படி எதிர்காலத்தில் எப்படி கருணாநிலையம் இயங்கவுள்ளது? இயங்கவேண்டும்? என்பதை திட்டமிடல் ஆகும்.

"சமகாலத்தில் ஒடுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டு கைவிடப்பட்டோர் யார்?" எனும் வினாவை வினவி விடை தேடுவது கருணாநிலைய சமூகத்தின் இன்றைய பொறுப்பு. 1950களின் பிற்பகுதியில் செல்வி மியூறியல் .வயலட் ஹட்சின்ஸ் அவர்கள் இந்த வினாவை மையமாகக் கொண்டு தேடி அவர்களுக்கு பொருத்தமான பணியை செய்திருக்கிறார். அவரது வழியில் அனைவரும் இயங்கி பொருத்தமான கருணைப்பணியை முன்னெடுக்க வேண்டியது இறை நம்பிக்கை, மனித சேவை சார்ந்த பொறுப்பாகும்.

பாதிக்கப்பட்டோரை, அனாதைகள், பைத்தியக்காரர், குருடர், செவிடர், ஊமை... என பெயரிட்டு அவமானப்படுத்தும் எண்ணப்போக்கு அதிகமாக காணப்பட்ட 1950களில், இப்பணிக்கு "கருணாநிலையம்" என பெயரிட்டமை ஒரு பொருத்தமான வரலாற்றுத் திருப்பம். விசேட தேவைக்குரியவர்களுக்கு கருணைப்பணி தேவை என்பதில் இன்று எந்த மாற்றுச்சிந்தனையும் எழுவதில்லை. மனிதநேய கருத்துருவாக்கமும் செயற்பாடுமே இங்கு வலியுறுத்தப்படுகிறது.

கருணா நிலைய சமூகத்துடன் தொடர்புடைய நீங்கள் ஒவ்வொருவரும் இந்த வைரவிழா மலர் மூலம் பகிர்ந்திருக்கும் வாழ்த்து செய்திகள், ஆக்கங்கள் அனைத்தும் உங்களது காத்திரமான வகிபாகத்தை, பங்கை தெளிவாக முன்வைத்துள்ளன.

கருணா நிலையத்தின் ஊடாக வளமான வாழ்வை பெற்றவர்களுள் சிலரின் ஆக்கங்கள் இம்மலரில் மணம் வீசுகின்றன. பலரின் ஆலோசனைகள் தேடல்களை உருவாக்கியுள்ளன. முக்கியமாக இங்கு பயன்பெற்றோர் மற்றவர்களுக்கு பயனளித்து வாழ்கின்றனர் என்பது தான் மகிழ்ச்சியை தருகின்றது.

"ஒடுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டு கைவிடப்பட்டோரை" இயல்பாக வாழ அழைக்கும் கருணாநிலையத்தில் சிலரை சேர்க்கலாம். கருணாநிலையத்தில் இருக்கும் வசதிகளை அதிகரிக்க சிலர் உதவலாம். கருணா நிலையம் பொறுப்புடன் இயங்க சிலர் தம்மால் இயன்ற பங்களிப்பை வழங்கலாம், விமர்சனமிகு ஆலோசனைகளை முன்வைக்கலாம். இவை அனைத்தும் நல்லவை, பாராட்டப்பட வேண்டியவை. எனினும் இவை அனைத்துக்கும் மேலாக, ஒருவர் அல்லது ஒரு சிலர் "ஒடுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டு கைவிடப்பட்டோரை" இயல்பாக வாழவைக்க தம்மை அர்ப்பணித்து இயங்கும் போதுதான் வாழும் கருணாநிலையங்களை காணலாம். அதுதான் இன்றைய அவசர தேவை.

அனைவரும் "வாழும் கருணா நிலையங்களாகி, ஒடுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டு கைவிடப்பட்டோரை" இயல்பாக வாழ வைக்க, உழைக்க எமது ஒத்தாசை எப்போதும் உண்டு.

இந்த வைரவிழா மலர் வெளியீட்டுக்கு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் நன்றிகள்.

அருட்பணி செ.டே.பரிமள செல்வன்
ஆசிரியர் குழு

## உள்ளடக்கம் Contents:


01. கருணா நிலையத்தின் வரலாறு 01

02. பேராயர் உயர் அருட்பணி டிலோராஜ் கனகசபை அவர்களின் வாழ்த்துச் செய்தி 03

03. கருணா நிலைய முதல்வர், யாழ் குருமுதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி 04

04. கருணா நிலைய காப்பாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி 05

05. கருணா நிலைய குரு அவர்களின் வாழ்த்துச் செய்தி 06

06. பேராயர் உயர் அருட்பணி கென்னத் பெர்னான்டோ அவர்களின் வாழ்த்துச் செய்தி 09

07. நுவரெலிய குருமுதல்வர் அவர்களின் வாழ்த்துச் செய்தி 10

08. அருட்பணி ஐசக் செல்வரட்ணம் அவர்களின் வாழ்த்துச் செய்தி 11

09. அருட்பணி. ஜே. நோர்மன் ஜெயச்சந்திரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி 12

10. அருட்பணி. S.I.பாலகுமார் அவர்களின் வாழ்த்துச் செய்தி 14

11. அருட்பணி. சாள்ஸ் டேவிட் அவர்களின் வாழ்த்துச் செய்தி 15

12. அருட்பணி. மனோரூபன் அவர்களின் வாழ்த்துச் செய்தி 17

13. அருட்பணி. அ.ஸ்டீபன் அவர்களின் வாழ்த்துச் செய்தி 18

14. கருணா நிலைய இல்லத்தாய் செல்வி. எஸ்தர் நே.சீனித்தம்பி அவர்களின் வாழ்த்துச் செய்தி 20

15. கருணா நிலைய முன்னாள் காப்பாளர் திருமதி.லீலா எமேர்சன் அவர்களின் வாழ்த்துச் செய்தி 21

16. கருணா நிலைய முன்னாள் காப்பாளர் திருமதி தயா மோகன் அவர்களின் வாழ்த்துச் செய்தி 24

17. அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி 26

18. நிலைய நன்னடத்தை அலுவலர் இ.இராஜன் அவர்களின் வாழ்த்துச் செய்தி 27

19. கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய அதிபர் மு.இரவீந்திரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி 28

20. கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் அவர்களின் வாழ்த்துச் செய்தி: 29

21. CBM நிறுவன தென்னாசிய பிராந்திய முதல்வர் Dr.சரா வகீஸ் அவர்களின் வாழ்த்துச் செய்தி: 30

22. இங்கிலாந்து, நம்பிக்கை சேவையினரின் வாழ்த்துச் செய்தி: 31

23. இங்கிலாந்து, சுண்டுக்குளி நம்பிக்கை நிதிய தலைவர் அவர்களின் வாழ்த்துச் செய்தி: 32

24. சரமண்டா லங்கா நிறுவனத்தின் அமைப்பின் வாழ்த்துச் செய்தி: 33

25. திரு.தேவ், திருமதி.ரதிகா குடும்பத்தினரின் வாழ்த்துச் செய்தி: 34

26. முன்னாள் திர் முகாமையாளர் (CSI) திரு.சு.இரத்தினவேல் அவர்களின் வாழ்த்துச் செய்தி: 35

27. கிளிநொச்சி ஜெபாலய பாஸ்டர் சி.சந்தனப்பிள்ளை அவர்களின் வாழ்த்துச் செய்தி: 36

28. கிளி/கிளிநொச்சி ம.மவி முன்னாள் அதிபர் நா.சோதிநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி: 37

29. அகில இலங்கை சமாதான நீதவான் டாக்டர். க. திருலோகமூர்த்தி அவர்களின் வாழ்த்துச் செய்தி: 39

30. கிளிநொச்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வி.ஆனந்தசங்கரி அவர்களின் வாழ்த்துச் செய்தி: 40

31. வடக்கு மாகாணசபை கல்வி அமைச்சர் கௌரவ த.குருகுலராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி: 42

32. கருணா நிலைய பழைய மாணவி செல்வி. மு.ஜினி அவர்களின் வாழ்த்துச் செய்தி: 44

33. கருணா நிலைய பழைய மாணவி செல்வி. ஜெ.ஜெயசுகிதா அவர்களின் வாழ்த்துச் செய்தி: 45

34. கருணா நிலைய பழைய மாணவி செல்வி. ஆ.அஜந்தினி அவர்களின் வாழ்த்துச் செய்தி: 46

35. கருணா நிலைய பழைய மாணவி செல்வி.கி.அனுஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி: 47

36. கருணா நிலைய பழைய மாணவி திருமதி.அ.ரோசிகா அவர்களின் வாழ்த்துச் செய்தி: 48

37. கருணா நிலைய பழைய மாணவி செல்வி.நா.ஜனனி அவர்களின் வாழ்த்துச் செய்தி: 49

38. கருணா நிலைய பழைய மாணவி செல்வி.செ.மேகலா அவர்களின் வாழ்த்துச் செய்தி: 50

39. கருணா நிலைய பழைய மாணவி திருமதி.இரா.ஜானகி அவர்களின் வாழ்த்துச் செய்தி: 51

40. திரு.எம்.சி.பிரான்சிஸ் அவர்களின் அவர்களின் வாழ்த்துச் செய்தி: 52

41. Karuna Nilayam : Of patient hope..... 54

42. கருணா நிலையம் : பொறுமையான நம்பிக்கையும்..... 56

43. பசுமையில் ஓர் புரட்சி 59

44. "கருணையின் மழை பொழி தாயே! 60

45. கருணா நிலையத்தின் கனிய நினைவுகள் 61

46. என் விடுதி வாழ்வு..... 63

47. 08.02.2009 அதிகாலை இரண்டு மணி 66

48. என்னை வளர்த்தெடுத்த என் இல்லம் 67

49. என் இஷ்ட தேவதை 68

50. Unforgettable experiences during my stay at Karuna Nilayam 70

51. பிறப்பெடுத்து வாழும் அம்மா எங்கள் ஹட்சின்ஸ் அம்மா 71

52. நினைவுகள் 73

53. காவியம் பேசிடும் ஓர் தாய்மை 74

54. "எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந் நன்றி கொன்ற மகற்கு" 75

55. இன்றைய கருணா நிலையம் 76

56. சமாதான இல்லத்தில் அன்னையின் நினைவுகள் 77

57. In as much as you did for one of the least of these brothers of mine, you did for me" 78

58. என் இல்லம் 80

59. ஆழிப்பெரு வெள்ளத்தில் உறவிழந்து.... 81

60. ஏக்கம் 82

61. என் வாழ்வில் ஏணிப்படிகள் 83

62. மியூரியல் வயலட் ஹட்சின்ஸ் அம்மா உம்பணி இறைபணி: 84

63. கருணா நிலையமும் நானும் ஒன்றாக இருப்பதாக உணர்கின்றேன்... 86

64. Incarnated Humanization of a Missionary: Ms. M. V. Hutchins in Wanni, Sri Lanka 88

65. கருணா நிலையத்தில் பணியாற்றிய காப்பாளர்கள், பொறுப்பமைக் குருக்கள் பற்றிய விபரம் 94

66. வரலாற்றுப் பதிவுகள் 95

# கருணா நிலையத்தின் வரலாறு

## A brief history of Karuna Nilayam:

“எனக்கு யாருமில்லையே...” என யாரும் விரக்தியுறாமல், குறிப்பாக பெண்கள், நம்பிக்கையுடன் வாழ கருணைமிகு அன்பை பகிர்ந்துவரும் ஒரு இல்லமே கருணா நிலையம். கைவிடப்பட்டவர்கள், தள்ளிவைக்கப்பட்டோர், பெண்குழந்தைகள், கர்ப்பிணித்தாய்மார், விசேட தேவைக்குட்பட்டோர், ஒதுக்கப்பட்டோர், பாதுகாப்பற்றோர், வன்முறைக்குட்படுத்தப்பட்டோர், பாதிப்புக்குள்ளானோர், மனக் காயங்களுக்குள்ளானோர், ஏழைகள்... என மனித நேயம், கருணை மறுக்கப்பட்டோர் இயல்பாக வாழ உருவாகியுள்ள “இல்லாரின் வீடே” கருணாநிலையம். “சாத்தியமற்றவை” என பலரும் நினைத்த சந்தர்ப்பங்களிலும் “வாழ்வு சாத்தியமானது” என்பதற்கு சான்றாக இறையருளின் செயற்பாட்டை சவால்கள் மத்தியிலும் வெளிப்படுத்தும் “இயேசு சமூகமே” கருணாநிலையம். அறுபது ஆண்டுகால வரலாறும் கருணைப்பகிர்வை பதிவு செய்துள்ளது.

1950களின் பிற்பகுதியில் காணப்பட்ட பாதிப்புகள் நிறைந்த பெண்களின் துன்பவாழ்வியல் கருணாநிலைய உருவாக்கத்துக்கு காரணமாகியது. பெண்கள் பலர் கைவிடப்பட்டு ஆதரவின்றி துன்புற்றனர். திருமணமாகமலே சில பெண்கள் கர்ப்பமுற்றிருந்தனர். இத்தகையோர் மகப்பேற்றுக்கு ஏற்ற வசதிகளின்றி திகைத்தனர். பெண் குழந்தைகளின் பிறப்பு இவர்களுக்கு மகிழ்ச்சியை தரவில்லை. வீடற்றவர்களாக அனாதைகளாக பலர் துயருற்றனர். பாதுகாப்பின்றி வறுமையால் பலரும் இடர்பட்டனர். இச்சூழலில் விசேடதேவைக்குரியோர் (விழிப்புலன், செவிப்புலன் அற்றோர், பேச்சற்றோர்...) தள்ளி வைக்கப்பட்டிருந்தனர். மனநிலை பாதிக்கப்பட்டோர் இன மத வேறுபாடுகளுக்கு அப்பால் பலராலும் கைவிடப்பட்டு துன்பத்திலேயே வாழ்ந்தனர்.

திருச்சபை தூதுப்பணி மன்றத்தின் (Church Missionary Society) நற்செய்தி அறிவிப்பாளராக 10.11.1927 இல் இலங்கை வந்திருந்த செல்வி மியூரியல் வயலட் ஹட்சின்ஸ் (Ms. Muriel Violet Hutchins) அவர்களின் அர்ப்பணிப்பு மிக்க விசுவாச வாழ்வே கருணா நிலைய கருணைப்பணிக்கு காரணம். 07.03.1899 இல் வேல்ஸ்சில் பிறந்த இவர் 1926 இல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக முதுகலைமானிப் பட்டதாரியானார். இவர் ஆசிரியராக கொழும்பு (1927), சுண்டுக்குளி (1928-1930), கோப்பாய் (1930-1941,1945-1954), உடுவில் (1941), நல்லூர் (1942-1945) போன்ற இடங்களில் கற்பித்து ஓய்வுபெற்றார் (31.03.1954). ஓய்வின்பின் இங்கிலாந்து திரும்பினாலும் அங்கு இளைப்பாற முடியவில்லை இறை அழைப்பின் ஏவுதலாலும் உந்துதலாலும் இலங்கை திரும்பி கிளிநொச்சியில் கருணா நிலையத்தை தொடங்கினார். அன்று நிலவிய சூழலில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த சிறியளவில் இறைபணியை பற்றுறுதியோடு தொடங்கினார்.

1955 இல் 15 இளம் பெண்களுடன் கருணா நிலையப்பணி ஆரம்பமானது. கருணா நிலைய வளவின் மேற்குப்பக்கம் மட்டுமே அவர்களது பாவனையில் இருந்தது. மீதிப்பகுதி காடாக இருந்தது. யானைகள் வந்து செல்வது வழக்கமாக இருந்தது. 1958, 1977 இனக்கலவரத்தினால் அகதிகளாக்கப்பட்ட பலருக்கும் உதவினார். கலவரத்தால் பாதிக்கப்பட்டோர் குடியேறிய தருமபுரம் கிராமத்துடன் அதிக தொடர்பு வைத்திருந்தார். பல பெண்களும் சிறுவரும் வளமான வாழ்வை பெற்றனர். முரசுமோட்டை நவஜீவனம் அமைப்பின் அருட்பணி A.C.தம்பிராஜா அவர்கள், சகோதரி பேக்கர் அவர்கள் என்போருடன் நல்ல உறவு நிலவியது. ஒரு ஈருருளியில் (Bicycle) அனைத்தையும் பார்த்தார். ஒரு சீமெந்து பையையும் சைக்கிளில் ஏற்றிவந்தார். தையல் வேலை, தும்பு வேலை, கோழி வளர்ப்பு, பயிர்ச்செய்கை... என்பவை தொழிற்பயிற்சிகளாக காணப்பட்டன. இவை கருணா நிலையத்தை நடத்த உதவின. நிதி வருமானத்தை கடந்து சமூகத்தால் தள்ளிவைக்கப்பட்டோர் மூலம் இயங்கிய இவர்களின் வாழ்வு பலருக்கும் சவாலானது. இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் பலர் கருணா நிலையத்துக்கு வந்து வளமான வாழ்வில் பங்கெடுத்தனர். பாதிக்கப்பட்டோரை கவனித்தல், கட்டடங்களை அமைத்தல், நிதியை தேடுதல்... என அனைத்தையும் செல்வி ஹட்சின்ஸ் ஒழுங்கமைத்திருந்தார். 29.10.1980இல் கருணா நிலைய வெள்ளிவிழா நடைபெற்றது. கருணா நிலையத்தின் வளர்ச்சிக்காக கடவுளுக்கு நன்றி செலுத்தப்பட்டது.

செல்வி ஹட்சின்ஸ் அவர்களது பணி பல காப்பாளர்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டது. திருமதி. அரசகுலசிங்கம் ராணி அவர்கள் 1984 இல் காப்பாளரானார். அவரை தொடர்ந்து திருமதி. எமேசன் லீலா. செல்வி. முருகேஸ் ஜீவா, திருமதி. டெறன்ஸ் மோகன் தயா, செல்வி. ஜெயரட்ணம் கிளாடிஸ், செல்வி. இராஜரட்னம் கேதீஸ்வரி என்போர் தொடர்ந்தனர். தற்போது அதனை செல்வி. செபஸ்ரியாம்பிள்ளை மேரி றெனிக்கா அவர்கள் தொடர்கிறார். வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்திலும் காணப்பட்ட சூழ்நிலைக்கேற்ப கருணா நிலையத்தின் பணி தொடர்கிறது. செல்வி ஹட்சின்ஸ் அவர்கள் தொடங்கிய "பாதிக்கப்பட்டோருக்கான இயல்புவாழ்வை ஏற்படுத்தல்" என்பது சவால்கள் மத்தியிலும் உறுதி செய்யப்படுகிறது என்பதற்கு வரலாறே சான்று.

யாழ் குருமுதல்வர்களாக பணியாற்றிய திரு அருட்பணி.J.A.R.நவரட்ணம், S.D.ஹேரசிங்டன் , J.J.ஞானப்பிரகாசம், டொனால்ட் J.கனகரட்ணம், J.சர்வானந்தன், S.P.நேசகுமார் என்போரது காத்திரமான பங்களிப்புகள் கருணாநிலையப் பணியை சிறப்புறச் செய்தன. இதனை திரு அருட்பணி.S.J.ஜெயவீரசிங்கன் அவர்கள் இன்று தொடர்கின்றார்.

போரும் இடப்பெயர்வும் கருணா நிலையத்தையும் பாதித்தது என்பது உண்மை. போர், சுனாமி, இடப்பெயர்வுகள் மத்தியில். "பாதிக்கப்பட்டோருக்கு வாழ்வு" உறுதி செய்யப்பட பற்பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1990 இல் இடப்பெயர்வுக்குள்ளான கருணா நிலைய சமூகம் இரண்டு மாதங்கள் இலங்கை தென்னிந்தியத் திருச்சபையின் பண்ணையொன்றில் வதிய வேண்டியிருந்தது. 1996 இல் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி பெருநிலப்பரப்பு நோக்கி இடம்பெயர்ந்த பலருக்கும் கருணா நிலையம் அடைக்கலம் கொடுத்தது.

04.03.1996 இல் செல்வி ஹட்சின்ஸ் அவர்கள் அவரது வாழ்க்கைப் பயணத்தை நிறைவு செய்தார். கருணா நிலைய சமூகம் அவரது விருப்பப்படி அவரது உடலை தகனம் செய்து சாம்பலை இரணைமடு குளத்தில் தூவியது. "தனது நினைவாக சிலைகள் எதுவும் நிறுவப்படக்கூடாது" எனும் அவரது விருப்பப்படி அவருக்கு சிலைகள் எதுவும் வைக்கப்படவில்லை. அவரது நினைவுகள் இன்றும் கருணா நிலையத்தை இயக்கிக் கொண்டிருக்கின்றன.

ஜெயபுரத்துக்கு 1996 இல் இடம்பெயர்ந்த கருணா நிலையம் 2003 இல் கிளிநொச்சிக்கு திரும்பியது. 2004 இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட பலருக்கு முக்கியமாக மாணவர்கள் கல்வியை தொடர மனக்காயங்களை அகற்றி முக்கியமான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2008இல் திரும்பவும் போரினால் முல்லைத்தீவு மாவட்டம் நோக்கி இடம்பெயர்ந்த கருணா நிலையம் 2009 இல் வவுனியாவில் முகாம் வாழ்க்கைக்கு உட்பட்டது. 2009 செப்ரெம்பரில் முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டு 2009 ஒக்ரோபரில் யாழ்ப்பாணம் சென்றனர். 2010 ஒக்ரோபரில் இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு திரும்பினர்.. போரினால் அனைத்து வன்னி மக்களும் 2009இல் முழுமையாக பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர 2010 பிற்பகுதியிலிருந்து கருணா நிலையத்தின் மீள்குடியேற்றம் தொடர்கிறது. உடைந்து போன கருணா நிலையம் திரும்பவும் மீளகட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. மீள்வாழ்வை மனதிற்கொண்டு பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. திராட்சைத்தோட்டம், கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு, முன்பள்ளி, தொழிற்பயிற்சி - கணனி, ஆற்றுப்படுத்தல் என்பவை ஏற்கனவே தொடர்ந்துவரும் மனோவியல் ரீதியாக பாதிக்கப்பட்டோருக்கான இல்லப் பணிகள் (சமாதான இல்லம் Peace Dorm) மாணவர்களுக்கான கல்வியூட்டலுடன் தொடர்கின்றன.

அருட்பணி S.D.P. செல்வன்

## பேராயர் உயர் அருட் பணி டிலோராஜ் கனகசபை அவர்களின் வாழ்த்துச் செய்தி:
## Message from the Rt. Revd. Dhiloraj Canagasabey, Bishop of Colombo:



In the life and history of the Anglican church in our land there are some stories of sheer courage, dedication and hope that continue to inspire and motivate people long after their 'authors' have passed on.

One such is the story of the life and work of Muriel Violet Hutchins linked inextricably with Kilinochchi and Karuna Nilayam- the abode of Karuna or Mercy.

Her history is well known. A classics scholar at Oxford, arriving in this country in 1927 and retiring after a long teaching career, then going on to found Karuna Nilayam, Kilinochchi, in1995 where she lived through all the terrible ups and downs of the conflict in the North until her death in 1996.

Her life and example, her modal of simplicity, voluntary poverty and of selfless service to disturbed women and destitute young girls of the North are remembered with love and gratitude.

As you celebrate your $60^{th}$, let me convey my thanks and deep appreciation to all those who continue in the footsteps of Miss Hutchins and serve with dedication, and to the donors, clergy and lay people who contribute to the work of Karuna Nilayam in many ways.

I assure you of my warmest thoughts, prayers and support.

Rt.Revd Dhiloraj R.Canagasabey<br>
Bishop of Colombo,<br>
Church of Ceylon,<br>
$10^{th}$ June 2015.

யாழ் குருமுதல்வர். கருணாநிலைய முதல்வர் திருஅருட்பணி. சா.ஜெ.ஜெயவீரசிங்கன்
அவர்களின் வாழ்த்துச் செய்தி:

Message from the Ven. S.J.Jeyaweerasinghan , Archdeacon of Jaffna and Director of Karuna Nilayam



My dear people of God,

It gives me great pleasure to open a few lines on the $60^{th}$ miles stone of Karuna Nilayam, the great masion of Hutchins Amma(07.03.1899 to 04.03.1996)

"It is not how much we do, but how nuch love we put in the doing. It is not how much we give but how much Love we put in the giving" ,Mother Teresa-1950.

Five years later in 1955 our own mother Teresa of Kilinochchi and Vanni Hutchins Amma; put all these words into Action when she founded Karuna Nilayam. We can write many things about Karuna Nilayam and Hutchins Amma, but as a tribute I would like to bring out a few points on Hutchins Amma.

1. A selfless being
2. Disciple of Christ
3. Apostle to Kilinochchi and the North
4. A Torch bearer to the down trodden, specially to women and girls
5. Indigenization and inclusive spirituality

This is Karuna Nilayam and all these qualities of Amma are reflected in Karuna Nilayam. Last but not least I take this opportunity thank God and all who have been involved in the mission and ministry of Karuna Nilayam in past and present. We commit her future into Gods hands.

With best wishes

Ven.Jayanth Jeyaveerasingan
Archdeacon of Jaffna
Director of Karuna Nilayam

கருணாநிலைய காப்பாளர் செல்வி செ.மேரி றெனிக்கா அவர்களின் வாழ்த்துச் செய்தி:

Message from Ms. S. Mary Renika, Warden of Karuna Nilayam:



'அறுகு போல் தளைத்து
ஆல் போல் நிழல் பரப்பி
அக்டோபர்- 10 வைரவிழா'

இன்று அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் வறுமை, அனாதையாக்கப்பட்ட சிறுவர்களும் கைவிடப்பட்ட பெண்களும் கட்சின்ஸ் அம்மையாரின் எண்ணத்திரைக்குள் வந்ததால் உருவாக்கப்பட்ட இல்லம் தான் கருணாநிலையம் ஆகும். தம் எதிர்காலம் பற்றி சிந்திக்காத எம்மவர்களுக்கு ஒரு சவாலாக அமைந்தது தான் அம்மையாரின் சிந்தனை என்றால் அது மிகையாகாது.

ஏழை, அநாதைச் சிறுவர்களின் எதிர்காலத்தை ஒளி மயமாக்க எமது நிறுவனமானது இன்று முன்பள்ளிக் கல்வி தொடக்கம் பல்கலைக்கழக கல்வி வரை கல்வியில் வசதி வாய்ப்புக்களையும் வழிகாட்டல்களையும் வழங்கி நிற்பதோடு வருடந்தோறும் பல்கலைக்கழக கல்விக்கு எமது இல்லத்திலிருந்து மாணவரை அனுப்பிவைக்கிறது என்பதை பெருமையுடன் சொல்லி நிற்கிறேன்.

சுயதொழில் பயிற்சியாக கணணிக் கல்வி முதல் தையல் பயிற்சி, கால்நடை வளர்ப்பு பயிற்செய்கை என்பவற்றை வழங்கி நிற்பதோடு எமது இல்லத்தை சாராத வறிய; கைவிடப்பட்ட பெண்களுக்கும் இப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றதை நோக்கும் போது அம்மாவின் கனவுகளும் அழியாமல் பேணப்பட்டு வருகின்றது என்பதையும் கூறுகின்றேன்.

பல இன்னல்கள் இடப்பெயர்வுகள் மத்தியிலும் தலை நிமிர்ந்து நின்று இன்று வைர விழாக் காணும் கருணாநிலையமானது எந்த நோக்கிற்காக ஸ்தாபிக்கப்பட்டதோ அந்த நோக்கை அடைந்து கொண்டிருக்கின்றமையானது அன்னையின் ஆசீர்வாதமே ஆகும்.

எனது சேவைக்காலத்தில் இவ் இல்லத்திற்கு ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் உதவிகளையும் வழங்கிய பல நல்ல உள்ளங்களை மறக்க முடியாது. அனைவருக்கும் ஆண்டவன் கிருபை கிடைக்கட்டும்.

நல்ல உள்ளங்களின் அயராத முயற்சி, ஈகைத்தன்மை என்பவற்றால் கட்டியெழுப்பப்பட்டு ஆன்றோர், பெரியோர்களின் நேரடி வழிப்படுத்தலின் கீழ் இருந்து எம் நாட்டிலும் வெளி நாடுகளிலும் எமது நிலையத்தின் புகழ் பேசப்படுவதை கேள்வியுறும் போது பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

வைர விழாக் காணும் இக்காலத்தில் காப்பாளராக நான் இருப்பதை நினைத்து பெருமைப்படுகிறேன். அன்னையின் கனவு நனவாகி தொடர்ந்து பயணிக்க உழைக்கும் உள்ளங்களோடு நானும் ஒருத்தியாக.........

செல்வி. செ. மேரி றெனிக்கா
காப்பாளர்
கருணா நிலையம்,
கிளிநொச்சி.

கருணாநிலைய குரு அருட்பணி சி.கி.டானியல் அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Revd.Fr.S.K.Danial, Chaplain of Karuna Nilaiyam:

## கருணா நிலையத்தின் வாழ்வியல் ஓட்டத்தில் இறுதி இடப்பெயர்வு காலம்



2007 சித்திரை மாதம் திருப்பணிக்காக வன்னிப் பெருநிலப்பரப்பினுள் கால் பதித்துக் கொண்ட காலம். யுத்தத்தின் தாண்டவம் அதிகரித்துக் கொள்ளத் தொடங்கியது. பணிக்களம் போர்க்களமாகிய சூழல், இடப்பெயர்வுகள் திசை தெரியாத குருட்டாட்டமானது, மேற்கு திசையான மன்னார் பகுதி நோக்கி நகர்வதே மேலென மக்களில் பலர் முனைப்புக் கொள்ளத் தொடங்கினர்.

1996 ஜூன் மாதத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வில் ஜெயபுரத்தில் எமக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டரை ஏக்கர் நிலப்பரப்பை சுத்தம் செய்து ZOA நிறுவனத்தின் பங்களிப்புடன் கொட்டகை அமைத்து 07. 03. 2008 இல் எமது சமாதான இல்லத்தினரை (PEACE DORM) அழைத்துச் சென்று குடியமர்த்தினோம்.

காலம் உருண்டது நிலமை மாறியது இராணுவ ஆக்கிரமிப்புப் போர் மன்னாரிலிருந்தே ஆரம்பித்தது 2008.07.20இல் மீண்டும் கிளிநொச்சிக்கு முன்னேறினோம். ஆனால் தொடர்ந்தும் கிளிநொச்சி நகர் பாதுகாப்பானதாக அமையவில்லை எறிகணைத் தாக்குதல்கள் அதிகரித்திட தருமபுரத்தை நோக்கி நகர்ந்தோம். புனித லூக்கா ஆலய வளாகத்தில் கொட்டகைகள் அமைத்து வாழத் தொடங்கினோம்.

2009. 01. 10 தருமபுரம் வைத்தியசாலையருகில் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்க மக்கள் தருமபுரத்திலிருந்து புறப்பட்டனர். வைத்தியசாலை நிர்வாகத்திடம் மன்றாடி அவர்களின் தொலைபேசியில் எமது கொழும்பு ஆயரில்லத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தியபோது தற்போதுள்ள பேராயர் டிலோராஜ் அவர்கள்தான் கதைத்தார். "நிலைமை மோசமடைகின்றது நாம் முல்லைத்தீவு நோக்கி நகர்கின்றோம், ஒரு மாத காலத்திற்குள் உங்களுடன் தொடர்பு கொள்ள கிடைக்காது போனால் எங்களுக்காக அல்ல எங்கள் ஆன்மாக்களுக்காக மன்றாடுங்கள்". என்று சொல்லிவிட்டு சாவு எப்போதும் வரலாம் முடிந்த வரை முயல்வோம் எனும் எண்ணத்துடன் பயணம் தொடர்ந்தோம்.

3 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள விசுவமடு தென்னிந்தியத் திருச்சபையின் வளாகத்தில் ஐந்து நாட்களே நின்றோம், இராணுவம் தருமபுரத்தை அடைய எறிகணைகள் எம்மையண்மித்த பகுதிகளில் விழத் தொடங்கியது. இனியும் இங்கிருப்பது சாத்தியமில்லை என்ற நிலையில் பயணத்தை தொடர்வதற்கு முற்பட்ட போது அது அவ்வளவு இலகுவாக இருக்கவில்லை. வாகனங்களும், மக்களும், கால்நடைகளுமாக வீதி நெரிசல் நிறைந்ததாக மாறியிருந்தது. நடந்து செல்வதும் உந்துருளிகளும் ஈருருளிகளுமே இலகுவான தெரிவாக இருந்தது. இந் நிலையில் தென்னிந்திய திருச்சபையின் சகோதரப்பணியாளர் அருட்பணி தி. டிக்சனும் நானும் பிள்ளைகள் இவ்விருவராக உந்துருளியில் ஏற்றிக் கொண்டு எட்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள எமது திருச்சபை அன்பர் திரு. வே. பூபால்ராஜ் அவர்களின் வளாகத்திற்கு மாற்றினோம்.

பாதுகாப்பு அகழிகள், மலசல கூடங்கள், கிணறு என்று அந்த வளாகத்தில் கருணா நிலைய குடும்பத்தோடு, திருச்சபைக் குடும்பங்கள், அறிந்தவர், தெரிந்தவரென 500க்கு மேற்பட்டோர் குடியமர்ந்தனர். சூழவிருந்த வளவுகளில் மக்கள் அதிகமாகக் குடியேறினர், இப்போது ஒரு முகாமைப் போல மாறிக்கொண்டிருந்தது. உடையார்கட்டு வடக்கு பாதுகாப்பான பிரதேசம் என்று இலங்கை அரசினால் அறிவிக்கப்பட்டது, நாங்களிருந்த பகுதியும் பாதுகாப்பு பிரதேசத்திற்குள் உள்வாங்கப்பட்டிருந்தமையால் ஒரு மகிழ்வு, ஆனால் நிலமை மாற்றமடைந்தது. கொத்துக் குண்டுகள் வளாகத்தினுள்ளே வீழ்ந்தன, வீதிகளில் சாவின் கொடுமை அதிகரித்தது மனிதர்களும், விலங்குகளும்

அருகருகே பிணமாக விழுந்தது, மக்கள் முல்லைத்தீவு நோக்கி நகர்ந்தனர். உடல், உளம் ஊனமடைந்தவர்களுடன் எங்கே எப்படி நகர்வது? கேள்விக்கணைகள் வந்து கொண்டே இருந்தது. பிள்ளைகள் உயிரச்சம் அதிகரித்த நிலையிலிருந்தனர்

2009.02.08இல் நடு இரவில் செபத்துடன் அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கி பயணம் தொடர்ந்தோம். பாதி வழியில் இருதரப்பினருக்கும் (விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசாங்கத்தினருக்கும்) சண்டை மூண்டது. துப்பாக்கிச் சன்னங்களும் எறிகணைகளும் உயிரைப்பறிக்க எம்மை நோக்கி விரைந்தன. உயிர்காக்க வயல் வெளிகளில் வீழ்ந்து படுத்தோம். சத்தம் சற்று ஓய சுதாகரித்து எல்லாரும் வந்து விட்டார்களா என தேடிப்பார்த்த போது ஒரு சிலரைக்கானவில்லை. திரும்பவும் நடந்து வந்த பாதையில் தேடி திரும்பிச் சென்று அடுத்த அணியினரை அழைத்துக் கொண்டு இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதியை அடைந்தோம். விரைவாக முன்னோக்கிச் செல்லுமாறு கட்டளை பிறப்பித்துக் கொண்டிருந்தது இராணுவம்.

இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் கடந்து சென்ற போது ஒரு பணியாளரையும் இரண்டு உயர்தர மாணவிகளையும் காணவில்லை. சத்தமிட்டு தேடி அலைந்து ஒருவாறு மீட்டுக் கொண்டு பயணம் தொடர்ந்தோம். பின் பிரமந்தனாறு பாடசாலையில் இயங்கிக் கொண்டிருந்த இடைமாறல் முகாமில் இருந்து எம்மை ஏற்றி அனுப்பிக் கொண்டிருந்த போது மனித வெடிகுண்டு தாக்குதலில் மயிரிழையில் தப்பினோம். இரத்தத்தில் சதைப்பிணங்களாக வந்தவர்கள் சிதறிக் கிடந்ததைப் பார்த்த போது இதயம் வெடித்து விட துடித்தது. அரை உயிரில் இருந்தவர்களை அள்ளிக் கொண்டு இராணுவ வைத்தியசாலை நோக்கி பேருந்தில் பயணித்தோம். காயப்பட்டவர்களை பரந்தனில் தற்காலிகமாக இயங்கிய வைத்தியசாலையில் இறக்கிவிட்டு ஓமந்தை மகா வித்தியாலயத்திற்கு அகதிகளாக வந்திறங்கினோம். ஒற்றை உடையில் இரத்தவாடையில் நாளைக் கழித்தோம். மறுநாள் காலையில் சந்தித்த தன்னார்வ பணியாளரிடம் பேராயருக்கு செய்தியை அனுப்பிவிட்டுக் காத்திருந்தோம். தகவல் கிடைத்ததும் இராணுவ உயர் அதிகாரி மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக்க என்பவர் ஊடாக எமது இருப்பை பேராயர் டுலிப் சிக்கேரா உறுதிப்படுத்திக் கொண்டார். மறுநாள் வவுனியா பட்டானிச்சூர் முஸ்லீம் மகா வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டோம். யாழ்ப்பாண குருமுதல்வர் திரு அருட்பணி.S.P.நேசகுமார் அவர்களும், அருட்பணி. பிரியஜயந் அவர்களும் எம்மைக் காணவந்தார்கள். கண்ணீரும் விசும்பி அழுத உரையாடலுமாகவே அது இருந்தது. கண்ணீரைத்தவிர வேறு மொழி எதுவுமே அங்கு காணப்படவில்லை.

2009.02.16 இல் பேராயர் டுலிப் எம்மைக் காண வவுனியா வந்தார். மேஜர் சாந்த காகல்ல அவர்கள் பேருந்து ஒன்றில் எம்மை ஏற்றி, வவுனியா தூய ஆவியானவர் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். பிள்ளைகள் எல்லாரும் 'பிஷப் ஐயா' என்று சொல்லி கதறிய நிலை கண்டு எம்மை அழைத்து வந்த மேஜரின் கண்களும் குளமானது. ஒரு மணி நேரம் மௌனமும் கண்ணீரும் விம்மல்களும் உரையாடும் மொழிகளாயிருந்தன. தூய நற்கருணை வழிபாடு ஒன்றை செய்து ஆற்றுப்படுத்தி மீண்டும் அகதி முகாமிற்கு கண்ணீரோடு அனுப்பி வைத்தார் பேராயர் தந்தை.

போதுமான வசதிகள் இல்லாத காரணத்தினால் மறுநாள் (2009.02.17) வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்கு மாற்றப்பட்டோம். எம்மை சந்திக்க வந்த மேஜர் ஜயசூரிய அவர்கள் சமாதான இல்லத்தவர்களையும் (மாற்றுத்திறனாளிகள்) அருட்பணி ஞா.மனோரூபன் அவர்களையும் முகாமிலிருந்து வெளியேற அனுமதியளித்தார். அவர்கள் வவுனியா தூய ஆவியானவர் ஆலயத்தில் தங்க ஒழுங்குகள் செய்யப்பட்டன. இந்நாளில் மாற்றுத்திறனாளிகள், வயோதிபர்கள் போன்றோருக்கான பணிவிடைகளைச் செய்வதிலே எங்களை ஈடுபடுத்தினோம். தொடர்ந்து 2009.08.09 இல் மருதமடுவில் அமைந்துள்ள வலயம் 7 முகாமிற்கு மாற்றப்பட்டோம்.

வனாந்தர வெளியும் சுட்டெரிக்கும் வெயிலும் கூடார வாழ்வும் வாழ்வின் விரக்திக்கு இட்டுச் செல்வது போல் தோன்றியது. 2009.08.17 இல் பேராயரின் கட்டளையை ஏற்று முகாமிலிருந்து விடுவிக்கப்பட்டேன். நான் மட்டும் விடுவிக்கப்பட்டது ஏனோ மனதை உறுத்திக் கொள்ள, வவுனியா மாவட்ட நீதிபதியைச் சந்திப்பதற்காக, சிறுவர் நன்னடத்தை உத்தியோகஸ்தர்களோடு, மனு ஒன்றைக் கொடுக்க நீதிமன்றம் சென்றேன். மனுவை ஏற்றுக் கொண்ட நீதிபதி மாணவர்களை விடுவிப்பதாக வாக்குறுதி கொடுத்தார்.

2009.10.03 இல் மாணவர்களை விடுவிப்பதற்காக நீதிமன்ற கட்டளையோடு மாணவர்களை வைத்திருந்த மருதமடு முகாமிற்குச் சென்றோம். அதிகாரிகளோடு உரையாடி அன்றே மாணவர்களையும், பணியாளர்களையும் விடுவித்து கொண்டு வவுனியா தூய ஆவியானவர் ஆலயத்திற்குச் சென்று ஆண்டவருக்கு நன்றி சொன்னோம்.

தொடர்ந்தும் முதலியார் குளத்திலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கான திருப்பணிகளைத் தொடர்ந்தோம். எமது இடப்பெயர்வு பயணத்தில் எம்மோடு பயணித்த ரெனாட்சன், சாம் துசாந்தன், வரதன், ஜேம்ஸ், சாந்தபுரத்தைச் சேர்ந்த நடா, தாஸ் என்போரை மறக்க முடியாது.

நெஞ்சிற்கு வலிகளையும் கண்ணீரையும் தந்த இடப்பெயர்வின் பயணப் பாதைகள் எமக்கு கற்பித்த புதிய அர்த்தங்கள் வாழ்வின் ஆதாரங்களாக இருப்பின் அதுவே இறைவனுக்கு உகந்த வழிபாடாகும். எம்மை வாழ வைத்த இறைவனுக்கே எல்லாப் புகழும் துதியும் உரித்தாகுக.

அருட்பணி.S.K. டானியல்
பொறுப்பமைக் குருவானவர்,
கருணா நிலையம்,
கிளிநொச்சி.

பேராயர் உயர் அருட்பணி கென்னத் பெர்னான்டோ அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from the Rt. Revd. Kenneth James Fernando:

**May God be praised for God's many mercies to Karuna Nilayam for 60 long years.**



We will all remember the great service recdered to Karuna Nilayam by Miss Muriel Hutchins who is the founder of the Home. Miss Hutchins must have found it very difficult to leave her home in England and settle down in the very different environment of Jaffna. But she loved the people of Jaffna, very specially its children and women, and served them with extraordinary love and care.

She must have found it very difficult to live with the social distinctions of Jaffna society and set out with a will be break them. She sought a community of brothres and sistres. She served both the Kopay community and after that and for a much longer time, the people of Kilinochchi. She greatly appreciated the culture of the people and that is why she incorporated even a Gopuram in the Chapel she built there. She mastered Tamil and spoke the language with great fluency.

Karuna Nilayam has had its ups and downs during its long history and has lived very successfully through allthe challenges it has had to face, particulary in the recent past. The Karuna Nilayam community stood up against all the troubles and problems it experienced with the courage and faith that only God could give.

Now that the trains run to Jaffna and there is a very convenient railway station so close to the Home we hope that more and more people will be able to visit Karuna Nilayam and support its work and life.

Karuna Nilayam is one of the great achievements and a cause for pride in the Diocese of Colombo.

May God continue to bless Karuna Nilayam and all those who live and work there.

Bishop Kenneth Fernando
Former Bishop of Colombo.

நுவரெலிய குருமுதல்வர் திருஅருட்பணி செ.பி. நேசகுமார் அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from the Ven. Selliah Philp Nesakumar , Archdeacon of Nuwara Eliya:

## KARUNA NILAYAM A JOURNY WITH SHALOM



I take great pleasure in sending my greetings to this publication in view of the 60th Anniversary of Karuna Nilayam Kilinochchi.

I too have beautiful memories that will linger afresh in my heart and mind and I give thanks to God for every child ,adult and mother who came out of the portals of Karuna Nilayam with a formation of character and values in which process the Karuna Nilayam was engaged in , enabling the fragrance of their lives to become a blessing unto many.

I had the golden opportunity to be with Miss Muriel Hutchins-the founder , in her last days in 1996 during the displacement. I was there with the displaced people as a displaced clergyman. Also as the Archdeacon of Jaffna during my 10 year period, I have given my best to uplift the standard of Karuna Nilayam.

Karuna Nilayam Community went through the valley of death during the 2009 war and we always remember with gratitude the dedication and the commitment of Rev.S.K.Daniel, Rev.G.Manoruban, Miss Mary Renika- Warden,and Miss Esther Seenithamby and the staff who were with the children and mentally retarded women, when they were shifted from pillar to post and even during their stay in the detention camp in Chedikulam, Vavuniya and until they were safely resettled at Karuna Nilayam. With God's mighty help and the spirit of sacrifice of Miss Muriel Hutchins we were able to reconstruct Karuna Nilayam after the war .

We want every child to enjoy her childhood, to achieve her full potential so that when she leaves the portals of Karuna Nilayam, she would be filled with the values of the Gospel ,discipline, knowledge, skills and qualifications etc acquired so that they would give her the best chance of success to face the future with confidence.

What does future hold for these children? Nobody can really predict the future but we have laid the foundation for future improvement.

One of the key values of Karuna Nilayam is that each child is an individual and an equal notwithstanding race, caste, language and religion.

I wish Karuna Nilayam – Kilinochchi, all the blessings in its journey into the future.

Ven.S.P.Nesakumar
Archdeacon of Nuwara Eliya

அருட்பணி ஐசக் செல்வரட்ணம் அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Revd. Fr.Isacc Selvaratnam:



இறைமகன் இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்,

கருணா நிலையத்தின் வைரவிழாவில் வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். கருணா நிலையம் ஒரு ஸ்தாபனம் அல்ல, அது ஒரு உலகம், கருணா நிலையம் என்றால் ஹட்சின்ஸ் அம்மா, ஹட்சின்ஸ் அம்மா என்றால் கருணா நிலையம்.

ஒக்ஸ்வோட் பல்கலைக்கழகத்தில் முதல் பெண் பட்டதாரியான அம்மா, கிளிநொச்சி மண்ணை தன் தாயகமாகக்கொண்டார்.

சமுதாயத்தால் தள்ளிவிழுத்தப்பட்டவர்களை இருகரம் கொண்டு தாங்கி புதுவாழ்வளித்தவர். ஆலய வழிபாட்டில் கர்நாடக இசைமூலம் நற்கருணை வழிபாட்டை நடத்திய ஒரே இடம் பரி.பவுல் ஆலயம் கிளிநொச்சி தான். நான் எனது இறையில் கல்வியை முடித்து 1975ம் ஆண்டு கிளிநொச்சி பரி.பவுல் ஆலயத்திற்கு அனுப்பப்பட்டபோது கருணாநிலையமும் அம்மாவும் என்னை அன்போடு வரவேற்றார்கள்.

1983ம் ஆண்டு இனக்கலவரம் வந்தபோது அகதிகளாக வந்த மக்களை கிளிநொச்சியில் அம்மா ஏற்றுக்கொண்டார். அவருக்கு உதவியாக நான் கோப்பாயிலிருந்து அனுப்பப்பட்டேன். மீண்டும் அம்மாவோடு பணிபுரியும் பாக்கியம் பெற்றேன். துப்பாக்கி வேட்டுக்களும், குண்டுமாரி பொழிந்த வேளையிலும் கருணா நிலையத்தின் பிள்ளைகள் கலங்கி திகைத்த வேளையில் அசையாத கன்மலையாக நின்று விசுவாசத்தை ஊட்டியவர் அம்மா. அவரது வாழ்க்கை அறநெறிபாடிய வீரகாவியம். அம்மாவுக்கு உறுதுணையாக இருந்து அவரோடு ஊழியம் செய்தவர்களை மறக்கமுடியாது. கருணா நிலையம் தொடங்கிய போது அது காடு, இப்பொழுது அது மாவட்டம். கருணா நிலைய ஆரம்ப காலத்தில் நவஜீவன தம்பிராஜா போதகரும், அவர் மனைவி அருள் அக்காவும் அம்மாவுக்கு பக்க பலமாக இருந்தார்கள். இந்தவேளையில் அவர்களை நினைவு கூருவது அவசியம்.

கருணா நிலையம் இன்றும் என்றும் இறைத்தொண்டும், சமூகத்தொண்டும் ஆற்ற ஆண்டவர் அருள்புரிவாராக !

என்றும் அன்புடன்,
அருட்பணி. ஐசாக் செல்வரட்ணம்
THE ANGLICAN CHURCH OF ST. PAUL, L'AMOREAUX
(Associate Priest)

அருட்பணி. ஜே. நோர்மன் ஜெயச்சந்திரன் அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Revd. Fr.J.Norman Jeyachchandran:



கருணா நிலையத்தின் 60ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறும் நிகழ்விற்கு வாழ்த்துமடல் அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இன்று நான் ஒரு அருட்பணியாளராக இருப்பதற்கு முக்கிய காரணம் கருணா நிலையத்தை உருவாக்கியவரும் அதன் ஸ்தாபகருமாகிய காலம் சென்ற செல்வி மியூரியல் ஹட்சின்ஸ் அம்மையார் என்றால் அது மிகையாகாது. என்னைப் பொறுத்தவரை எனது வாழ்க்கை பயணத்தை திசை திருப்பி திருப்பணி புரிய என்னை வழிநடத்தியவரும் வழிகாட்டியவரும் இவரே.

1970ம் ஆண்டின் ஆரம்ப காலப்பகுதியில் கருணா நிலையத்தின் பரி.பவுல் ஆலயத்தின் ஒரு சாதாரண வழிபாட்டாளனாக இருந்தேன். 1976ம் ஆண்டில் அருட்பணி. ஜோசுவா இரத்தினம் அவர்கள் பரி.பவுல் ஆலய குருவானவராக பணியாற்றினார். இக்காலப்பகுதியில், முதற்தடவையாக பரி.பவுல் ஆலயத்தின் வாலிபர் சங்கம் உருவாக்கப்பட்டது. இக்காலகட்டத்தில் வாலிபர் சங்கத்தின் பணியும் வழிபாட்டில் பங்களிப்பும் விரிவுபடுத்தப்பட்டது. இவ்வாலிபர் சங்கத்தின் தலைவராக அடியேனை அனைவரும் ஏகமனதுடன் தெரிவுசெய்தனர். இது கடவுளின் வழிநடத்துதல் என்றே நான் நினைக்கிறேன். துரதிஷ்டவசமாக அருட்பணி. ஜோசுவா இரத்தினம் அவர்கள் 31.08.1976 இல் இடமாற்றம் பெற்று மலையகத்துக்குச் சென்றுவிட்டார்.

நிரந்தர வதிவிட குருவானவர் இல்லாத காரணத்தால் அருட்பணி A.C.E.கோயில்பிள்ளை அவர்கள் மாதத்தில் இரு ஞாயிற்றுக் கிழமைகளில் வவுனியா பரிசுத்த ஆவியானவரின் ஆலயத்தில் இருந்து வருகை தந்து வழிபாட்டை நடாத்திவிட்டுச் செல்வார். இதனால் பரி.பவுல் ஆலயத்தின் வழிபாடுகள், ஜெபக்கூட்டம் நடாத்துதல், வேறு வேதப்படிபுகள் நடாத்துதல், பட்டிமன்றங்கள் நடாத்துதல், சபை மக்களைச் சந்தித்தல் போன்ற ஆவிக்குரிய பணிகளில் வாலிபர்சங்கம் தன்னை முழுமையாக அர்ப்பணித்து உற்சாகமாக செயல்பட்டுவந்தது. இக்காலகட்டத்தில் ஆராதனைகேற்ற ஆயத்தங்கள் செய்வதும் செல்வி ஹட்சின்ஸ் அம்மையார் (வெள்ளைக்கார அம்மா) அவர்களின் ஆலோசனையின் படியும் வழிநடத்துதலின் படியும் கருணா நிலைய பிள்ளைகளின் ஒத்துழைப்புடனும் எவ்வித குறைபாடும் இன்றி வழிபாடுகள் மிகவும் சிறப்பாக நடைபெற்றன. அருட்பணியாளர் சமூகம் கொடுக்காத ஏனைய இரு ஞாயிற்றுக்கிழமைகளில் வாலிபர்சங்கமும், கருணா நிலைய பிள்ளைகளும், வெள்ளைகார அம்மாவுடன் இணைந்து வழிபாட்டை நடத்துவோம்.

இதன் பின்னர் 1976ம் ஆண்டு புரட்டாசி மாதம் முதல் 1977ம் ஆண்டு ஆனி மாதம் வரை அருட்பணி. ஜூபிலி பொன்னையா அவர்கள் பரி.பவுல் ஆலயத்தின் வதிவிட பொறுப்புக்குருவானவராக பணியேற்றார். இவரும் வாலிபர் சங்கத்தின் வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றி வாலிபர் சங்கத்தினை நேர்த்தியாக உற்சாகப்படுத்தி வழிநடத்தினார். 1977ம் ஆண்டு ஆடி மாதம் இனக்கலவரம் ஆரம்பித்தது. இக்காலகட்டத்தில் கொழும்பில் இருந்தும், மற்றும் இலங்கையின் பல்வேறு பாகங்களில் இருந்தும் இடம் பெயர்ந்து வந்த மக்கள் கிளிநொச்சியிலும் மற்றும் பல்வேறு இடங்களிலும் நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டார்கள். இவ்வேளையில் செல்வி.ஹட்சின்ஸ் அம்மையாரும் நானும், வாலிபர்சங்கத்தின் உறுப்பினர்களும் இந்த நலன்புரி முகாம்களில் இரவு பகலாக பணிபுரிய வேண்டிய தேவை இருந்தது. இது ஒரு தலைமைத்துவ பயிற்சியாக மாத்திரம் அல்லாது, உடைந்த உள்ளங்களின் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வதற்கும், அம்மக்களுக்கு வேண்டிய ஆறுதலையும், ஆலோசனைத் திருப்பணியை செய்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்தது. இப்பணிகளில் செல்வி. ஹட்சின்ஸ் அம்மையாரின் தலைமைத்துவப் பணியும், ஆலோசனைத் திருப்பணியும் நொந்துபோன உள்ளங்களுக்கு ஆறுதல் கொடுத்த அவரின் வார்த்தைகளும் அணுகு முறைகளும் ஆச்சரியமாக இருந்தன.

இங்கிலாந்து தேசத்தை சேர்த்த பட்டதாரியான இவர் அழகுத் தமிழில் சரளமாகபேசி மிகவும் கனிவாக அனைவருடனும் பழகியவிதம் நொந்து, உடைந்து போன, கவலையுடனும் கண்ணீருடனும்

இருந்த அநேகருக்கு மிகவும் ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அம்மா ஒரு தமிழ்ப் பண்டிதை என்பதை இவ்விடத்தில் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். இதன் பின்னர் 1979ம் ஆண்டு ஆரம்பத்தில் என்னை இறையியல் கல்லூரிக்கு அனுப்புவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் எல்லாவற்றையும் அம்மா அவர்களே செய்தார். இதன்படி 1979ம் ஆண்டு ஆணி மாதம் 18ம் திகதி இலங்கை இறையியல் கலூரியில் இணைந்து கொண்டேன்.

பின்னர் குருப்பட்டம் பெற்று பரி. கன்னி மரியாள் ஆலயத்தில் சபை குருவானவராக நான்கு வருடங்கள் பணிபுரிந்து கொண்டிருக்கும் பொது அம்மாவின் வேண்டுகோளுக்கும் விருப்பத்துக்கும் இணங்க அன்று குருமுதல்வராக இருந்த சாம் D.ஹேராஷிங்டன் அடிகளார் என்னை கிளிநொச்சி பரி.பவுலின் (கருணா நிலையம்) ஆலயத்திற்கு பொறுப்புக் குருவானவராக பதவியேற்குமாறு பணித்தார். இதன்படி 1988ம் ஆண்டு தை மாதம் முதற்கொண்டு பரி.பவுல் ஆலயத்தின் பொறுப்புக் குருவானவராகவும் கருணா நிலையத்தின் ஆவிக்குரிய ஆலோசகராகவும் (Chaplain) பணிபுரிந்தேன். அம்மாவின் இறை தரிசனமும் அவரது பணியும் எத்தனையோ இடர்கள், தடைகள், யுத்தத்தினால் ஏற்பட்ட அவலங்கள் இழப்புகள், இடப்பெயர்வுகள் இவை அனைத்தையும் கடந்து ஆண்டவரின் பெரிதான கிருபையினாலும், அனேக குரு முதல்வர்கள், அருட்பணியாளர்கள், காப்பாளர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரின் பங்களிப்புடன் தொடர்ந்தும் நடைபெறுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் கூறவிரும்புகிறேன். மேலும் தற்போதைய யாழ். குரு முதல்வர் ஜெயந் ஜெயவீரசிங்கன் அவர்களின் தலைமைத்துவத்துடனும், வதிவிட பொறுப்பு குருவானவர் S.K.டானியல் அவர்களின் வழிகாட்டலிலும், அர்ப்பணிப்பு நிறைந்த தற்போதைய காப்பாளர் செல்வி. மேரி றெனிக்கா அவர்களின் நிர்வாக திறமையுடனும் மற்றும் எஸ்தர் அக்கா போன்ற முதிர்ந்த அனுபவம் உள்ளவர்களின் பங்களிப்புடனும் கருணா நிலயம் மிகவும் சிறப்பாக தன்பணியை ஆற்றிவருகிறது.

அம்மாவின் தரிசனமும் தூர நோக்கும் இன்று உடலாலும் உள்ளத்தாலும் பாதிப்புக்குள்ளான அனேக பிள்ளைகளுக்கு அடைக்கலமும் ஆறுதலும் கருணையும் காட்டிவரும் ஒரு இல்லமாக இருப்பதைக்கண்டு. மனமகிழ்ச்சி அடைகிறேன்.

வாழ்க கருணா நிலையம்! வளர்க அதன் பணி! தொடரட்டும் அம்மாவின் தரிசனம்!

இப்படிக்கு,<br>
கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு நண்பர்,<br>
அருட்பணி ஜே. நோர்மன் ஜெயச்சந்திரன்.

அருட்பணி. ச.ஐ.பாலகுமார் அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Revd. Fr.S.I.Balakumar:



வன்னி பெருநிலப்பரப்பில், இயற்கை எழில் மிகுந்த சோலைகள் நிறைந்து காணப்படும் கிளிநொச்சி நகரிலே, துன்பத்தில் வாழும் மக்களின் துயர் கண்டு, கருணை கொண்டு, கரம் நீட்டும் கருணா நிலையத்தின், அகவை அறுபதிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கருணா நிலையம், கருணைக்கு நிலையம், கண்ணீருக்கு நிலையம், கரம் தவறியவர்களுக்கு நிலையம், காப்பாற்ற நாதியற்றவருக்கு அடைக்கல நிலையம், என்ற அர்த்தத்துடன் ஹட்சின்ஸ் அம்மாவால் ஆரம்பிக்கப்பட்ட இந்நிலையத்தில், அவ் அம்மையார் உயிரோடிருந்த காலத்தில் 1994-95 ஆண்டுகளில் கருணாநிலைய முகாமையாளராகவும், பொருளாளராகவும், குருவானவராகவும் நான் ஊழியம் செய்வதற்கு இறைவன் தந்த பெரிய கிருபைக்காக இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றேன்.

இந்நிலையம் எந்நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டதோ அந்நோக்கம் இறுதிவரை நிறைவேற்றப்பட்டு கொண்டே இருக்க வேண்டும். அம்மையாரின் தூர தரிசனம் எங்களுக்கூடாக எப்பொழுதும் தூய உள்ளத்தோடு செயல்பட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும். உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது என்பது போல அவர் உறங்கினாலும் அவரது சேவைகள் எப்பொழுதும், அநேகரை விழித்தெழச் செய்யத்தக்கதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அம்மையார் விட்டுச் சென்ற கருணைப் பணியை தொடர்வதற்கு நாம் கருணைப் பாலங்களாக இருப்போம்.

இந்த உன்னத சேவை செய்யும் போது சவால்களைக் கண்டு அஞ்சாமல் அருட்தந்தை வில்லியம் கேரி கூறிய வார்த்தைகளை நாம் ஜெபத்தோடு நினைவிலே நிறுத்தினால் எதிர்பார்ப்புக்கள் யாவும் எளிதாக அமையும்.

"இறைவனுக்காக மகத்தானவைகளை முயற்சியுங்கள்
இறைவனிடமிருந்து மகத்தானவைகளை எதிர்பாருங்கள்"

அருட்பணி எஸ்.ஐசக் பாலகுமார்.
பரி. பேதுருவின் ஆலயம்
கொழும்பு-15.

அருட்பணி. சாள்ஸ் டேவிட் அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Revd. Fr.Charles David:



Dear Family of Karuna Nilayam

My Family and I rejoice with you as you celebrate sixty years of Ministry in Kilinochchi among Children and mentally disturbed ladies.

As you celebrate the 60th Anniversary our minds go back to the Golden Jubilee we celebrated 10 years ago when we were serving with you at which Bishop Duleep and Mrs. Geetha De Chickera were our chief guests who added to our joy. In fact I remember that the Children and the Staff eagerly await Bishop Duleep's visit as the Children knew that they will get an opportunity to go out shopping for which the Bishop sponsored in addition to a good ice cream feed. In the year 2006 we also celebrated the Golden Jubilee of the Church of St. Paul which is also situated within the compound of the Karuna Nilayam.

We have many wonderful memories of Karuna Nilayam. Our first interaction was in the year 2003 when Revd. Cyril Roche was the Vicar of the Kilinochchi Parish and the Chaplain of the Home. We succeeded him in the year 2004. That was the time when the Children were disturbed due to the un - expected death of the then Warden. The Children were so scared and once they ran at a hearing of a sound and even broke the glass door of the hall. However the Children forgot that incident very soon and continued their life happily there. We met many wonderful staff members and Children. The youngest of the lot baby Shalini was only six years old and she was our baby. I remember how the house mothers cared for them.

Since there were over sixty Children and around eight staff I had a permanent congregation for the Parish. I did not have any problem in keeping the Church clean and preparing for Sundays. Further they almost filled the Church every Sunday.

In the year 2004 Tsunami hit the coastal area of Mullaithivu and Uduthurai and I remember how Ven S. P. Nesakumar, the then Archdeacon of Jaffna and the Director of the Home immediately opened the premises for the family and the Friends of Karuna Nilayam to take shelter. During this period this place became extremely busy as we accommodated many people not only those who were affected but also those many groups that came from all over the world to help the victims and their families. I really appreciated the manner in which the entire Community of Karuna Nilayam responded to this crisis.
We also remember the time we white washed the kitchen and the dining area, rearranged the Dorm, and cooked special food and how we celebrated festivals and birthdays. It was truly a time of fun and laughter.

I also remember the time we had spent with the inmates of the "Peace Dorm" where the mentally disturbed ladies were housed. We loved to see each other and talk about various topics. They loved to look after goats and had given them Christian names. They also liked gardening, knitting and singing. They were always ready to pray for us. We really miss them, their love and concern. Esther aunty we remember you with gratitude for your dedication towards these ladies.

Fr. Nesakumar used to be in the Home at least once a week and looked into the affairs of the Home. He once brought two deer to the Home to add colour and life; however we did not have the ability to look after them for a long time.

There were many such Homes in the Kilinochchi district and we had an Association that linked us all. I was privileged to be the Chairperson of this Association. We shared our knowledge and experience. This association with the support of "Annai Illam", a local NGO trained the staff to deal with the traumatized Children and ladies. I remember with gratitude Fr. Reginald, Director of "Annai Illam" being a good friend of our Home, advising our House Mothers and providing professional support to deal with few difficult Inmates of the Peace Dorm.

I was met by the Warden, Ms. Renika, and she explained the history and the operational structure of the home. I was taken around the home and was able to see the living conditions of the children, the elders, the cattle and the vineyard. I was impressed by their resourcefulness to produce Wine and market them.

The home is well managed under the leadership of the Warden, who is also a victim of the war, and Fr. Daniel. They have been a source of strength to this home and are always there to listen to new ideas in making this home a better place for the children and elders.

It has been my pleasure and Saramanda (Switzerland) to be able help Karuna Nilayam in the projects we have undertaken, namely Building construction (Saramanda House), donation of cattle, construction of Cattle shed and the sponsorship of 3 O/L & A/L students.

We wish all the staff of Karuna Nilayam, Ms. Renika, Fr. Daniel and most of all Ven. Jayanth under whose able guidance this home has given love, care and shelter to these people, who have suffered enough and more during the internal conflict.

May all of you continue the good work for many more years to come. Congratulations on your $60^{th}$ anniversary.

Mr.S.Subash Chandran
Consultant
Saramanda Lanka (Gte) Ltd
Director
Centre for Advancement of Resource Mobilization.

திரு.தேவ், திருமதி.ரதிகா குடும்பத்தினரின் வாழ்த்துச் செய்தி:
Message from Mr.Dave & Mrs.Radhika Family:



It is a joy for us to join you to give thanks and praise God for His goodness and mercy over Karunanilayam the past 60 years!

We are very thankful to God for giving us the opportunity to share the love of God with each one of you through the camps we have had 2011-2015. Looking back over the years, it is with great joy and fondness in our hearts that we cherish the memories of our dear girls. We feel truly blessed for the times we've had, sharing, caring, loving, teaching and encouraging one another.

Children, each one of you are like butterflies in our lives. You bring such colour both inside and out and we have seen you be transformed from a difficult emotional stage to freedom by the grace and love of God. You have blossomed so beautifully and our prayer is that each one of you will know that God loves you, He created you with a purpose and a plan and looks forward to fulfilling the plan He has for your life.

There is much warmth in the home due to the love and commitment of Rev.Daniel & his family, the dear Warden Renika and the caregivers. Thank you for supporting the camps which we believe has blessed the children and us. We are also grateful to the staff at YFC and the many volunteers and well-wishers who have helped us the past five years. May God bless you.

Congratulation on the $60^{th}$ anniversary and blessings for many more to come. May God continue to guide and lead you as you work for His kingdom and give Him all glory.
In His name,

Dave, Radhika, Ryan & Renee

*I praise you because I am fearfully and wonderfully made; your works are wonderful, I know that full well. Psalm 139:14*

முன்னாள் திட்டமுகாமையாளர் (தென்னிந்திய திருச்சபை) திரு.சு.இரத்தினவேல் அவர்களின் வாழ்த்துச் செய்தி:

Message from Mr.S.Ratnavel, Former Project Manager (CSI):

**"God help those who help themselves, God help those who help others"**



நான் கருணா நிலையத்தை நினைவு கூரும் போது இந்த இரண்டு ஆங்கில வாக்கியங்களும் என் கண் முன் காட்சியளிக்கின்றன. கருணாநிலையத்தின் 60 ஆண்டுகள் எனது வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத வருடங்கள் இவ்வருடம் எனது 80வது பிறந்த நாளை கருணா நிலையத்தின் பிள்ளைகளுடன் கொண்டாட ஆண்டவர் கிருபை அளித்தார் . அவருக்கே எனது முதற்கண் நன்றிகள்.

காலம் சென்ற செல்வி மியூரியல் கட்சின்ஸ் அம்மாவின் வாழ்க்கை வரலாறு என்னையும் இந்த ஏழைப்பிள்ளைகளைப் பராமரிக்க ஊக்கம் கொடுத்தது நானும் காலம் சென்ற வண கலாநிதி அத்தியட்சர் அம்பலவாணர் அவர்களும் மானிப்பாயில் அருள்மனை எனும் ஆண்கள் இல்லத்தை 1979 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி ஆரம்பித்த பொழுது நான் சுழிபுரத்தில் ஓர் அரசாங்க பாடசாலையில் ஓர் ஆசிரியராக கடமையாற்றியதும் எல்லாம் இப்பிள்ளைகளுக்காகவே அர்ப்பணித்தேன் பலர் வறுமையைப்பற்றி நன்கு பேசுவார்கள் ஆனால் ஒரு சிலரே அதை ஒழிக்க தங்களை அர்ப்பணிப்பார்கள் . இந்த அர்ப்பணிப்பை எமது தாயார் காலம் சென்ற கட்ஷின்ஸ் அம்மையாரின் வாழ்க்கையிலே நான் நேரடியாக கற்றுக்கொண்டேன் கல்வியிலே லண்டன் மாநகரின் ஒக்ஸ்போர்ட் சர்வாகலாசாலையில் சிறந்த கல்விப்பட்டத்தைப் பெற்ற அம்மையார் இப்படியாகத் தம்மை தாழ்த்தி ஏழைகளுக்கு தன் வாழ்நாளை அர்ப்பணித்தார்.

இந்த அம்மாவின் அர்ப்பணிப்பை நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் 1955 இலிருந்து 1957 வரை மாணவனாக இருந்த பொழுது நேரில் கண்டதும் அல்லாமல் மனித நேயத் தொண்டுகள் என்றால் என்ன என்பது பற்றி அவருடன் கலந்துரையாடினேன் . இவர் அந்தக்காலங்களில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் நடைபெறும் தென்னிந்திய திருச்சபைக் கொண்டாட்டங்களுக்கு வன்னியில் இருந்து சில பெண் பிள்ளைகளை அழைத்து வருவார் அவர்களை அழைத்து வரும் போது தான் ஓர் மேல் சட்டை மாத்திரம் அணிந்து கொள்வார்.


அவருடன் வரும் பிள்ளைகள் மேல் சட்டை பாவாடை அத்துடன் ஒரு அரை தாவணியையும் அணிந்து இருப்பார்கள் இந்த விழா ஒரு நாள் முழுவதும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறும். அந்நாள் முழுவதும் இந்த பிள்ளைகள் அம்மையாரின் சட்டையை பிடித்துக் கொண்டுதான் திரிவார்கள்.
அந் நாட்களில் நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஒரு விடுதி மாணவனாக இருந்து 10ம் ஆண்டில் கல்விகற்றுக் கொண்டு இருந்தேன்.

இந்த அம்மையாரின் அர்ப்பணிப்புத்தான் நானும் ஓர் ஆசிரியராக வந்த பொழுது இப்படியான ஊழியத்தை செய்ய வேண்டும் என்ற ஊக்கம் எனக்களித்து. யாழ்ப்பாணம் தென் இந்தியத் திருச்சபையின் அத்தியட்சகர் காலம் சென்ற வண கலாநிதி D.Jஅம்பலவாணருடன்இனணந்து 1995ஆம் ஆண்டு வரை தொண்டாற்றி வந்தேன் இக்காலங்களில் தான் தென் இந்திய திருச்சபையின் மானிப்பாய் அருள்மனை ஆண்கள் இல்லம் உடுவில் இளையதம்பி பெண்கள் இல்லம் முருகண்டி பெண்கள் இல்லம் முறிப்பு ஆண்கள் இல்லம் முதலிய இல்லங்களை ஆரம்பித்து வைத்தோம்.

யுத்த காலங்களில் இந்த கருணா நிலையப்பிள்ளைகளுடைய வளாகத்தில் இருந்து அவர்களுக்கு வேண்டிய சில உதவிகளை செய்ய என்னால் முடிந்தது.கருணா நிலையப்பிள்ளைகளுடன் யுத்த காலங்களில் பல இடங்களுக்கு இடம் பெயர்ந்து அனுபவித்த கஸ்டங்களை கண்டேன். இப்பொழுதுகளில் கருணா நிலையம் புதுப் பொலிவுடன் இயங்குவதையும் காண்கின்றேன். இப்படியான ஒரு அம்மையாரினை ஆண்டவர்வன்னிக்கு அனுப்பியதற்கும் அவரை வரவேற்ற அங்கிலிக்கன் திருச்சபைக்கும் நன்றி கூறுகின்றேன்.

திரு.சுப்பையா இரத்தினவேல்
முன்னாள் திட்ட முகாமையாளர்
தென் இந்திய திருச்சபை.

## கிளிநொச்சி ஜெபாலய பாஸ்டர் சி.சந்தனப்பிள்ளை அவர்களின் வாழ்த்துச் செய்தி:
## Message from Paster S.Santhananapillai, Church of Prayer, Kilinochchi:



1968ஆம் ஆண்டு நான் வீதியால் சென்று கொண்டிருந்தபோது மதிப்புக்குரிய கட்சின்ஸ் அம்மையார் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்தார். அன்று முதலாவதாக அவரைக் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பின்பு 1979ஆம் ஆண்டு கட்சின்ஸ் அம்மையாரை நேரடியாக சந்திக்கும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. அத்துடன் கருணா நிலைய ஆலயத்தில் வழிபாடு நடத்தவும் வாய்ப்புக் கிடைத்தது.

பின்பு 1983 ஆம் ஆண்டு ஜெபாலய மிஷன் திறப்பு விழாவில் கட்சின்ஸ் அம்மையார், அவரது வாழ்த்துச் செய்தியில் சுவிசேஷ செய்தியை பரப்புவதற்கு கிளிநொச்சி மாவட்டத்தில் இது ஒரு மையமாக இருக்கும் என குறிப்பிட்டிருந்தார். 47 கிராமங்கள் அவருடைய செய்தியில் பயன்பெற்றன.

எனவே கருணா நிலைய வைரவிழாவை நினைவு கூரும் இவ்வேளையில் அப்படிப்பட்ட மிஷணறி பணியாளரை வாழ்த்தி கருணா நிலையம் பணி தொடர வாழ்த்துகிறேன்.

"ஏனெனில் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் இரக்கம் மிகு இறைவன்.
அவர் உங்களைக் கைவிட மாட்டார். அழிக்கவும் மாட்டார்.
உங்கள் மூதாதையரோடு அவர் ஆணையிட்டுச் செய்த
உடன்படிக்கையை மறக்கவும் மாட்டார்."
- இணைச்சட்டம் 4:31

பாஸ்டர். சி.சந்தனப்பிள்ளை
தலைமைப் போதகர்,
ஜெபாலய திருச்சபை,
கிளிநொச்சி.

கிளி/கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய முன்னாள் அதிபர் நா.சோதிநாதன் அவர்களின் வாழ்த்துச் செய்தி:

Message from N.Sothinathan, Former Principal of Kn/Kilinochchi Mathiya Maha Vidyalayam:



1958 முதல் கருணா நிலையத்திற்கு அருகில் நிரந்தரமாக வாழ்ந்து வந்தாலும் எனது வாழ்க்கைத் துணையாக கருணா நிலையப் பெண் ஒருவரை ஏற்றுக் கொண்டதாலும் இவர்களுடைய செயற்பாடுகளைத் தொடர்ந்து கண்டு கொள்ளும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. கருணா நிலைய நிறுவனர் செல்வி ஹட்சின்ஸ் அம்மையாரின் தொடர்பு அயலவர் என்ற முறையில் முன்னரே கிடைத்துவிட்டது. பின்னரான நீண்ட காலத்தில், பல இடங்களில், பல விடயங்களில், தொடர்ந்து உரையாடவும் வசதி கிடைத்தது. இவ்வாறான நிலைமைகளில் கருணா நிலையம் அமைந்த நோக்கம், அந்நிறுவனத்தை நடத்தம் முறைமை என்பவற்றையும் அறிந்து கொள்ளும் வாய்ப்புக் கிடைத்தது.

ஹட்சின்ஸ் அவர்கள் யாழ்ப்பாண கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராக இருந்து நல்ல முறையில் நடத்தியவர். பின்னர், நல்லூர் ஆசிரியர் கலாசாலை அதிபராக இருந்தவர். இக்கடமைகளால் யாழ்ப்பாணப் பாரம்பரியத்தை நன்கு அறிந்தவர். தமிழில் பேசவும் எழுதவும் கற்றுக் கொண்டவர் என்பதனால் பல விடயங்களை அவதானித்து அறிந்து கொண்டார். ஆனால், அன்றைய யாழ்ப்பாண நிலைக்கு மாறாக, பெண்கள் கல்வி கற்று, தொழில் பல செய்து, சமவுரிமையோடு வாழ வேண்டும் என்று பாடுபட்டவர். ஜனநாயகப் பண்புகளை கடைப்பிடிப்பவர். சீர்திருத்தவாதியாக சிந்தித்து செயல் பல செய்தவர்.

இத்தகைய கொள்கை கோட்பாடுடன் கருணா நிலையத்தை வழிநடத்தியவர். மனிதப் பண்புகளை யாவரும் கடைப்படிக்கச் செய்தவர். பெண் உரிமையைப் பேணிய அதே வேளை யாழ்ப்பாணப் பாரம்பரியத்தைப் புறந்தள்ளாதவர். விடுதியில் வளர்ந்த பெண்கள் சொந்தத் தீர்மானங்களை எடுத்து, சுயமாக வாழ்ந்து, கடின உழைப்பால் உயர்ந்து, நீதி நியாயம் நிலை பெறப் பாடுபட வேண்டும் என்று எண்ணியவர். தான் நிறுவனராக இருந்த போதும் விடுதியில் உள்ள பெண்களை மேற்பார்வை செய்யும் பெண் ஒருவரை நியமித்து முகாமை செய்தவர்.

காலை மாலை வேளைகளிலும், வழிபாட்டு வேளைகளிலும், கிறஸ்தவ மத நம்பிக்கையை வாழ்வில் நடைமுறைகளை எடுத்து விளக்குபவர். மிக எளிய சொற்களில் யாவரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் விளக்கம் இடம் பெறும். இத்தகைய உரைகள் விடுதியில் உள்ளவர்களை சிந்திக்கவும் வாழ்க்கையில் கடைப்பிடித்து அமைதியான வாழ்க்கை வாழவும் வழிவகுத்து, முரண்பாடுகளையும், அன்பான சொற்களால் அமைதிப்படுத்திவிடுவார். அவர்களுக்கு விருப்பமானது உலாப் போதல், விளையாட்டு, தொழில் முயற்சிகள் என்பவற்றில் ஈடுபடுவதாகும். இந்நிகழ்வுகளின் போது தானே முன்னின்று வழிநடத்துவார். இதே போன்று அன்பாகவும் பண்பாகவும் ஊர் உறவுகளைப் பேணுவார்.

கிளிநொச்சியில் மூத்த சிந்தனையாளர்கள் தவத்திரு யோகர் சுவாமிகள், வணபிதா A.C.தம்பிராசா அடிகள், அப்புஜி சி. கதிரவேலு அவர்கள், செல்வி ஹட்சின்ஸ் அம்மையார் போன்ற சான்றோர்களை மண்ணின் வேர்கள் என்று கண்டுள்ளனர். இது இம்மண்ணில் ஏற்புடைய ஒரு கருத்து. இதில் ஒரு வித்தியாசம் என்னவென்றால் இவர்களில் மூவர் ஆண்கள் ஒருவர் மட்டும் பெண். அவர் தான் ஹட்சின்ஸ் அம்மையார். இந்த ஆண்கள் யாவரும் யாழ்ப்பாணப் பண்பாட்டைக் கொண்டவர்கள். ஆனால் ஹட்சின்ஸ் மட்டும் பல்லாயிரம் மைல் கடந்து வந்து இங்கு கல்விப் பணியாற்றியவர். ஓய்வு பெற்ற பின், கிளிநொச்சிக்கு வந்து கருணா நிலையம் அமைத்தார். இவர் கிளிநொச்சியில் ஆற்றிய சமூகப்பணி சமய, இனம், தரம், காணாத தனிப்பணி என்பதை நிறுவியுள்ளது. இவருடைய காலத்தில் இவருடன் பழகிய

பலர், இவற்றை மதித்து ஏற்றுநடந்துள்ளனர். அவருடைய தன்னலமற்ற பணி கிளிநொச்சியில் காலம் காலமாக நிலவவும் நிலைபெறும்.

இவர்கள் கருணா நிலையம் அமைத்த காலத்தில் இவ்விடத்தின் வடக்குப் பகுதியொன்றைத் தவிர ஏனைய பகுதிகளில் அடர்ந்த பெருங்காடு சிறுத்தை, யானை, பன்றி, கரடி என்பன தனியாகவும் கூட்டமாகவும் நடமாடும். விடுதியில் உள்ளவர்கள் பயந்துவிடுவர். இவர் தன் அறையை விட்டு வெளியே வந்து ஹரிக்கேன் லாந்தரைப் பிடித்துக் கொண்டு அவர்களை அமைதியாக இருக்கும்படி கூறுவார். சிறிது நேரத்தில் காட்டு மிருகங்கள் விலகிவிடும். இவர் ஒரு பெரிய கூடை கொண்ட ஈருருளியை வைத்திருந்தார். அதில் தான் எங்கும் போவார். பெருஞ்சுமைப் பொதிகளை ஏற்றிக் கொண்டு ஓடி வருவார். தன்னுடைய வேலை யாவற்றையும் தானே செய்வார். யாரையும் எதிர்பார்க்கமாட்டார்.

பின்னர் நான் கல்விப் பணிக்கு வந்த பின் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் வணபிதா தம்பிராசா போதகருடன் சேர்ந்து கிளிநொச்சியின் கல்வி வளர்ச்சி பற்றி பாராளுமன்ற உறுப்பினர்களோடு கலந்தரையாடுவார். திரு. கா. பொ. இரத்தினம் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த போது கிளிநொச்சியில் ஒரு பெண்கள் பாடசாலையை அமைக்க எண்ணினார். அதற்கு கருத்துக்கள் கூற ஹட்சின்ஸ் அம்மாவையும் அழைத்திருந்தார். அவர் அதை ஒரு கூட்டமாக நடத்த எண்ணாமல் ஒரு கலந்துரையாடலாக நடத்தும்படியும், அதில் இன்றைய நிலையில் கிளிநொச்சியில் ஒரு பெண்கள் பாடசாலை தேவை இல்லை என்பதையும் தெரிவித்தார். பாராளுமன்ற உறுப்பினர் அவரது உரையைக் கேட்டு அந்த நடவடிக்கையை பிற்போட்டார்.

கருணா நிலையப் பிள்ளைகள் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றனர். அவர்கள் ஊடாக கருணாநிலையத்தை அறியவும் முடிந்தது. அவர் பின்னாளில் நோயாளியாகி கருணா நிலையத்திலேயே வாழ்ந்தார். அவர் இங்கிலாந்துக்குச் செல்ல விரும்பவில்லை. அவருடைய காலத்தில் இரண்டொரு முறை தான் இங்கிலாந்துக்குப் போயுள்ளார். மற்றக் காலங்களிளெல்லாம் இங்கு தான் இருந்தார். இந்த மக்களுக்காவே தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவர் சேலை கட்டுவதில்லை. ஏன் என்று கேட்ட போது அவ்வாடைக்கு செலவு அதிகம் அதை மிச்சப்படுத்தி இந்தப் பிள்ளைகளுக்கு உதவலாம் என்று சொன்னார். அவரிடம் கல்வி கற்று ஆசிரியரான பின்பும் அவருடைய பணிக்கு உதவுவதாகவே என் பாரியார் கூறுவார். என் தொழிலுக்கும் வாழ்க்கைக்கும் என் மனைவி பெரிதும் உதவுபவராகவே வாழ்ந்தார். இவர் ஹட்சின்ஸ் அம்மையாரின் வாக்கை பண்புகளைக் கூறி என்னை வழிப்படுத்தினார்.

வாழ்க ஹட்சின்ஸ் சிந்தனைகள்
வளர்க அவர் நற்பண்புகள்

திரு.நா. சோதிநாதன்
முன்னாள் அதிபர்
கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம்,
கிளிநொச்சி.
11.06.2015

அகில இலங்கை சமாதான நீதவான் டாக்டர். க. திருலோகமூர்த்தி அவர்களின் வாழ்த்துச் செய்தி:

## Message from Dr.K.Thirulogamoorththi JP



கிளிநொச்சி மாவட்டத்தில் உருவான மூத்த சமய, சமூக, கல்விச் சேவை நிறுவனம் கருணா நிலையம் ஆகும். இதன் பணிகள் காலத்தால் அழியாதவை.

கிளிநொச்சி மாவட்டத்தின் குறிப்பாக வன்னிப் பெருநிலப்பரப்பில் மூத்த சமய, சமூக, கல்விச்சேவை நிலையமான கருணா நிலையம் இன்று தனது 60தாவது ஆண்டு விழாவினை கொண்டாடுகிறது.

கிளிநொச்சி நகரில் ஏ9 வீதியில் தேவாலயம், விடுதி, பாடசாலை முதலான இன்னோரன்ன அமைவிடங்களுடன் மிக நீண்ட காலமாக சமயப்பணிகளுடன் பல்வேறுபட்ட சேவைகளை அன்றும் இன்றும் முன் எடுத்துவரும் பிரதான நிலையம் தான் இக்கருணா நிலையம்.

இக்கருணா நிலையத்தை மேற்கு நாட்டிலிருந்து வருகை தந்த ஹட்சின்ஸ் அம்மையார் ஸ்தாபித்தார். நான் சின்னஞ் சிறுவனாக இருந்த காலம் முதல் ஹட்சின்ஸ் அம்மையாரை எனக்கு நன்கு தெரியும். அக்காலத்தில் கிளிநொச்சி நகரில் தனது பணிகளுக்காக துவிச்சக்கர வண்டியை செலுத்திச் செல்லும் காட்சி மிக மிக அழகானது. துவிச்சக்கர வண்டியை பெண்கள் செலுத்திச் செல்லாத அக்காலத்தில் அம்மையார் தனது துவிச்சக்கர வண்டியில் பயணிப்பார்.

கருணா நிலையத்தை முதலில் சமயப் பணிகளிற்காகவே ஸ்தாபித்தார். பின்னர் சாதாரண நலிவுற்ற மக்களது நல்வாழ்வை நோக்காகக் கொண்டு சமூக நிறுவனமாகவும் இந்நிலையத்தை மாறியமைத்தார்.

இக்கருணா நிலையத்திற்கு அங்கிலிக்கன் ஆயர் கெனத் பெர்ணாண்டோ உட்பட புகழ்பூத்த பல மதகுருமார்கள் வருகை தந்து அருள் ஆசி வழங்கியுள்ளனர். ஆயர் கெனத் பெர்னான்டோ கருணா நிலையத்திற்கு ஒரு முறை வருகை தந்தார். அப்போது கொடிய யுத்த காலம் குண்டு மழையின் மத்தியில் வருகை தந்த ஆயருடன் நானும் சிங்கள மாஸ்டர் ராஜ்குமாரும் உடன் இருந்தோம். உரியவர்களுடன் கலந்துரையாடிய ஆயர் அமைதி, சமாதானம், போன்றவை தொடர்பிலும் பொது மக்கள் நலன் குறித்தும் குறிப்பாக சிறார்கள் மாணவர்கள் நலன் குறித்தும் கவனம் செலுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களை வலியுறுத்தினார்.

கருணா நிலைய ஸ்தாபகர் ஹட்சின்ஸ் அம்மையார் தனது இறுதி மூச்சுவரை கருணா நிலையத்தை உலக புகழ் மிக்க நிறுவனமாகக் கட்டி வளர்த்தார்.

கல்வியிலும் சமய நெறி முறைகளிலும் ஒழுக்கம் மிக்க சமுதாயத்தை கட்டி வளர்க்க பக்தி மார்க்கத்தை கடைப்பிடித்தார். கிளிநொச்சி வாழ்மக்களுடன் மதபேதமற்று தமது பணிகளை முன் எடுத்தார். இதன் பலன் இன்று கருணா நிலையம் ஆலவிருட்சமாக பெரு வளர்ச்சி கண்டுள்ளது.. கிளிநொச்சி நகரின் ஒரு அடையாள சின்னமாக இன்று கருணா நிலையம் திகழ்கிறது.

பல யுத்த இடப் பெயர்வுகளையும் சொல்லொணா துயரங்களையும் சுமந்து தன்நம்பிக்கையுடன் கருணா நிலைய விடுதியில் தங்கி இருந்த மாணவர்களையும் ஏனையோரையும் பாதுகாத்த பெருமை கருணா நிலைய அருட்தந்தைகளையும் நிர்வாகிகளையும் சாரும்.

சமய, சமுதாய, கல்வி மற்றும் மாணவர் விடுதி சேவைகளுடன் பன்முக மக்கள் நல்வாழ்வு சேவைகளை முன் எடுத்து வரும் கருணா நிலையத்திறகும் எனக்கும் நெருங்கிய தொடர்புகள் உண்டு.

இங்குள்ள சிறுவர் கல்விச் சேவை நிலையம் (முன்பள்ளி) மிகவும் தரமான முன்பள்ளிச் சேவைகளை முன் எடுத்து வருகிறது. இச்சிறார்களது விளையாட்டு நிகழ்வுகளை நானும் எமது பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சி. சிறீதரனும் விருந்தினர்களாகப் பங்கு கொண்டு பார்த்து மகிழ்ந்தோம். சிறுவர்களின் நிகழ்வுகள் அற்புதமானது. இங்குள்ள விடுதிப் பொறுப்பாளர், ஆசிரியர்கள், நிர்வாகிகள் அனைவருக்கும் தன்னலம் கருதாது தம்மை அர்ப்பணித்து சேவை புரிவது நெஞ்சை நெகிழ வைக்கிறது. கருணா நிலைய சேவைகள் மேலும் மேலும் சிறப்படைய இறை ஆசி வேண்டி நிற்கிறேன்.

டாக்டர். க. திருலோகமூர்த்தி
அகில இலங்கை சமாதான நீதவான்
மரண விசாரணை அதிகாரி
மூத்த ஊடகவியலாளர்

கிளிநொச்சி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ வீ.ஆனந்தசங்கரி அவர்களின் வாழ்த்துச் செய்தி:

Message from Hon. V.Aananthachankari, Former Member of Parliment, Kilinochchi:



**ஈழத்தின் அன்னை திரேசா மியூரியல் ஹட்சின்ஸ் அம்மையாரே!!!**

1960ஆம் ஆண்டு என்று எண்ணுகின்றேன்... அந்நாட்களில் இன்று சர்வதேச விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டு வருகின்ற ரொட்டிக்கோ பார்க் என அழைக்கப்பட்டு வந்த மைதானம். அதன் எதிரே அமைந்திருந்த பொதுச் சந்தை நிரம்பி வழிந்தது. ரொட்டிக்கோ மைதானமும் வழக்கம் போல் சனிக்கிழமைகளில் பொதுச்சந்தையாக மாறியிருந்தது. அந்த நாட்களில் வாரம் ஒருமுறை அதுவும் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் இன மத பேதமின்றி தம் உற்பத்திப் பொருட்கள், வேறு விலைப்படக் கூடிய பொருட்கள், தேங்காய் தென்னங்கிடுகு போன்று பலதரப்பட்ட பொருட்களுடன் அனைவரும் முதல்நாள் இரவே கூடிவிடுவார்கள். இரவிரவாக பலதரப்பட்ட பொருட்களை பேரம்பேசி வாங்கியும், விற்பனை செய்துகொண்டும் இருப்பார்கள். அன்றைய கிளிநொச்சியாக நான் குறிப்பிட்ட காலப்பகுதி ஏறக்குறைய 55 ஆண்டுகளிற்கு முன்பாகும். அப்படிப்பட்ட ஒரு சனிக்கிழமை எனது அரசியற் கட்சியின் வாரப்பதிப்பான சமதர்ம பத்திரிகையுடன் நானும் வேறு பல தோழர்களுடன் பத்திரிகை வியாபாரம் செய்து கொண்டிருந்தேன்.

என் வாழ்வில் அது ஒரு முக்கியமான நாளாகும். ஓர் வெள்ளைக்கார மூதாட்டி தனது துவிச்சக்கர வண்டியில் ஒரு பை சீமெந்தை பின் ஆசனத்தில் ஏற்றிக்கொண்டு வண்டியை ஓடாது உருட்டிக் கொண்டு செல்வதைக் கண்டு பிரமித்து போனேன். எனது தோழன் ஒருவன் குறித்த மூதாட்டியினால் முன்னெடுக்கப்பட்டு வந்த பொதுச்சேவை தொடர்பில் விளக்கிக் கூறினார். குறித்த மூதாட்டி பிரித்தானிய பெண்மணி ஆவார். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் பல ஆண்டுகள் ஆசிரியராக கடமையாற்றி இளைப்பாறிய பின் தன் தாய் நாட்டுக்கு திரும்பிப் போகாது ஊரில் உள்ள சொத்துக்களை பணமாக்கி அரசிடம் ஒரு காணியைப் பெற்று "கருணா நிலையம்" என்ற பெயருடன் பொதுசேவையை முழுமையாக ஆரம்பித்தார். ஆதரவற்றவர்கள் அதுபோன்ற பல துன்பங்கள் மத்தியில் ஆதரவு தேடி வந்தோருக்கு அபயம் அளித்து பலவித தொண்டுகள் அளிக்கின்றார். நம்மக்கள் நாட்டின் எப்பகுதியில் இருந்து வந்தாலும் அபயம் கொடுத்த பெரியார் இவர்.

அன்னை பற்றி பக்கம் பக்கமாக எழுதமுடியும். சில சம்பவங்கள் இரசிக்க கூடியவை. அன்று அவர் சீமெந்து பையுடன் துவிச்சக்கர வண்டியை உருட்டிச் சென்றது அந்த சுமையை வைத்து துவிச்சக்கர வண்டியை அவரால் ஓட்ட முடியவில்லை என்பதாலேயே. அத்தகைய வழியில் சேமித்து பணத்தை மீதப்படுத்திக் கொண்டவர். அவரின் உழைப்பு மக்களுக்கே என்ற தத்துவம் அவருடையது.

1965ஆம் ஆண்டு நான் கரைச்சி கிராம சபை தலைவராக தெரிவு செய்யப்பட்டேன். மின் அமைப்பு பட்டணப் பகுதிக்கு மாத்திரமே சிபார்சு செய்யப்பட்டிருந்தது. கடைசி மின்கம்பம் அன்றைய பஸ்தரிப்பு நிலையம், புகையிரத நிலையம் ஆகியவற்றுக்கு நிறுவப்பட்டிருந்தது. அம்மையார் கேட்காமலேயே யாரும் சொல்லாமலும் நான் அதிகாரிகளுடன் வாதாடி மின் கம்பத்தினை கருணா நிலையம் வரை நீடித்து கொடுத்து இன்பம் கண்டேன். அம்மையார் அவர்களுக்கு அதிக மகிழ்ச்சி அளவிட முடியாத ஆனந்தமாய் இருந்தது. அன்றைய சூழலில் ஹட்சின்ஸ் அம்மையாருடன் ஏற்பட்ட சுவையான நிகழ்ச்சிகள் பல. அவற்றைக் கூறினால் வாசகர்கள் கண்டிப்பாக மகிழ்வார்கள்.

பொதுப்பணியில் பல ஆண்டுகள் ஈடுபடுகையில் பெரியவர்களை கௌரவபடுத்துவது வழமையாக இருக்கும். மேலும் பல சாதனைகள் செய்ய இது உதவுமென கருதி அம்மையாரை கௌரவிக்க எண்ணினேன். அவருக்கு தெரியாமலேயே ஹட்சின்ஸ் அம்மையார் அவர்களை சமாதான நீதிவானாக்கி மகிழ வைக்கலாம் என தோன்றியது. அவரது பெயரை சமாதான நீதிபதியாக நியமிக்க வேண்டி நீதி அமைச்சருக்கு சிபார்சு செய்தேன். பல நாட்களாகியும் அம்மையாரிடம் இருந்து ஒரு வார்த்தை தன்னும் எனக்கு வரவில்லை. என்னால் சிபார்சு செய்யப்பட்ட ஏனையோருக்கு நியமனம் கிடைத்துவிட்டது. நீதி அமைச்சரிடம் கடும் கோபம் கொண்டேன்.

நானும் ஏ.கே.இராசேந்திரம் எனும் அதிபர் அவர்களும் ஹட்சின்ஸ் அம்மையாரை சந்திக்க சென்றோம். பல விடயங்கள் பற்றி பேசினோம். இடையில் ஆங்கிலத்தில் அம்மையாரைக் கேட்டேன் "அம்மா நீதி அமைச்சில் இருந்து ஏதாவது கடிதம் வந்ததா" என்றேன். அவர் அமைதியாக ஆம் வந்தது அதை அதற்குள் போட்டுவிட்டேன் என்று குப்பைக் கூடையை காட்டினார். இருவரும் இடிந்து போய் அம்மையாரை மிகவும் மன்றாடிக் கேட்டும் அதை அவர் ஏற்க மறுத்துவிட்டார். அம்மா வாருங்கள் நீதிபதியின் அறைக்குள்ளேயே சென்று சத்தியப்பிரமாணம் எடுக்கலாம் என்று மன்றாடினேன். அவரது வாழ்வில் அவர் பிடிவாதமாக இருந்தது இந்த ஒரு விடயத்தில் தான். அன்னையாரிடம் விடைபெற்று வெளியே வந்தோம். அவரின் பெருந்தன்மையை பாராட்டிக் கொண்டு இருவரும் பிரிந்து சென்றோம். நான் வீடு போய் சேரவில்லை இராசேந்திரம் மாஸ்டர் தொலைபேசி மூலம் தெரிவித்தார் நீங்கள் வாருங்கள் அம்மா சம்மதித்து விட்டார் என்று. மிக்க மகிழ்ச்சியுடன் மறுநாள் காலை ஜீப் வண்டியில் ஏற்றிச் சென்று சத்தியப்பிரமாணம் செய்ய வைத்தோம். விடயம் முடிந்த பின்பு ஆசிரிய நண்பரைக் கேட்டேன் எவ்வாறு அம்மையாரை சம்மதிக்க வைத்தீர்கள் என்று, சிரித்துக்கொண்டு அவர் சொன்னார் "எம்பி கவலையுடன் போகிறார் பாராளுமன்றத்தில் எவ்வாறு நீதி அமைச்சருக்கு முகம் கொடுப்பது என்று கேட்கிறார்" என்று கேட்டதும் மறு வினாடி சம்மதம் தெரிவித்து விட்டதாக கூறினார். கிளிநொச்சி மாவட்டம் பற்றி யாருடன் பேசினாலும் அம்மையாரை குறித்து நினைவூட்டாத காலம் கிடையாது. அம்மையார் ஒரு கிறிஸ்தவ பெண்மணி. ஆனால் எதுவித இனமத பேதமும் இன்றி செயற்பட்டமைக்கு இந்து கலாசார பாணியில் அவர் அமைத்து வந்த தேவாலயம் இன்றும் சான்று பகர்கின்றது.

நாட்டு நிலைமை சீரின்மையால் அம்மையாரை பல ஆண்டுகள் காண முடியவில்லை. ஆனால் அம்மையாரின் இறுதிக் காலத்தில் நான் கிளிநொச்சி வந்தபோது அம்மையாரை சந்தித்தேன். அப்போது என் பெயரை உச்சரித்ததாக தெரிகிறது. அது உண்மையா? பிரமையா? என்று தெரியவில்லை. எது எப்படியானாலும் அம்மையார் என் வாழ்வில் மறக்க முடியாத ஜீவன் மட்டுமல்ல, "ஈழத்து திரேசா" என்றாலும் மிகையாகாது.

எனது வாழ்வில் கற்றுக்கொண்ட அனுபவங்களிலும், பழகிக்கொண்ட மனிதர்களிலும் உயர்ந்த நிலையில் என்னால் உதாரணமிட்டு காட்டக் கூடிய ஹட்சின்ஸ் அம்மையாருக்கு கிளிநொச்சி மக்கள் மட்டுமல்ல, இலங்கை நாடும் அம்மையாரின் சரித்திரத்தினை மறக்கக் கூடாது என்பதற்கு சாட்சியாக சிலை ஒன்றினை அமைக்க வேண்டும் என்பது எனது நீண்ட கால எதிர்பார்ப்பாகும். என்னுடைய வாழ்க்கையில் அம்மையாருக்கு சிலை அமைப்பதற்கான காலம் கிடைக்காவிடினும், கிளிநொச்சி மக்கள் ஈழத்து அன்னை திரேசாவாக எண்ணக்கூடிய ஹட்சின்ஸ் அம்மையாரின் வரலாற்றினை எம் அடுத்த சந்ததியினருக்கு எடுத்துக்கூறும் வகையில் வரலாற்று சான்றாக சிலை அமைக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

நன்றி

கௌரவ வீ.ஆனந்தசங்கரி
(மு.பா.உறுப்பினர், கிளிநொச்சி)
தமிழர் விடுதலை கூட்டணி செயலாளர் நாயகம்.

வடக்கு மாகாணசபை கல்வி அமைச்சர் கௌரவ த.குருகுலராஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி:

Message from Hon. T. Gurukularajah, Minister of Education, Northern Provincial Council:



எனது உள்ளத்திலிருந்து....

பாரச்சிலுவைதனைச் சுமந்து அவதிப்படுகிறவர்களுக்கும், சமூகத்தின் கொடூரக்கரங்களின்பால் தாக்கப்பட்டு, அவதிப்பட்டு, வேதனையுற்ற நலிந்த பெண்களுக்கும், நிலை தடுமாறி வாழ்க்கைப் பிடியிழந்து தவித்த கன்னியர்களுக்கும், புகலிடம் ஏதுமின்றி கரம் கொடுக்க ஆதரவின்றி இல்லலுற்ற பெண்களுக்காகவும் வெளிநாட்டிலிருந்து தமிழர் தாயகம் பால் ஈர்க்கப்பட்டு வந்த "கன்னித்தாயால்" உருவாக்கப்பட்ட அன்பின் பரிணாமம் ஆலமரமாய் விசாலமாகி காட்சி தரும் நேசக்கரங்களின் அடைக்கலம் தான் "கருணாநிலையம்".

"கல்லூரிக்கு உயிரிருந்தால் கல்வெட்டில் எழுதிவிடும் அம்மாவின் கீர்த்தனம்" இவ்வரியே இந்த நினைவுப் பதிவேட்டை எழுதும் முன் என் கண்முன்னே விரிந்து மறைகிறது.

1955ம் ஆண்டுக் காலப்பகுதியில் பற்றைக்காடாய் சந்தத்தினாலேயே அச்சுறுத்தும் யானைக் காட்டில் ஒருபெண், பெண்களுக்கு அடைக்கலம் கொடுக்க நினைப்பது எவ்வளவு சாத்தியம்? வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கும் பெண்கள் மத்தியில் "தேவனினால் மண்ணுக்கு அனுப்பப்பட்ட கன்னித் தேவதை" "ஹட்சின்ஸ் அம்மா" அதை சாத்தியமாக்கினார். அபலைகளுக்கு அடைக்கலம் அளித்தார். ஆதரவற்றோருக்கு தன் நேசக்கரம் பற்றினார், எமக்கெல்லாம் இன்னோர் "அன்னை திரேசா" ஆனார்.

புண்பட்ட நெஞ்சங்களுக்கு புடமிட்ட புண்ணிய தேவதையினால் உருவாக்கப்பட்ட கருணை இல்லம் இன்று அறுபதாம் ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. அநாதை இல்லங்களை யாரும் உருவாக்கிக் கொள்ளலாம், ஆனால் அநாதைகளோடு அநாதையாக செல்வம் துறந்து, வறுமையை ஏற்று வாழ்வோர் யார் உள்ளார்கள்? அந்த வினாவிற்கு தன்னை விடையாக அர்ப்பணித்தவர் ஹட்சின்ஸ் அம்மா.

அம்மாவிடம் நான் நெருங்கிப் பழகா விட்டாலும் அவரது சேவை, தேவனிடத்தில் உள்ள பற்று இவை யாவற்றையும் கண்டு வியந்திருக்கின்றேன். எனது தந்தை 'நவஜீவனம்' என்ற ஆறுதல் இல்லத்தை நடத்தி வந்த காலப்பகுதியில் வெள்ளைக்கார அம்மாவுடன் சிறந்த தொடர்பாடலைக் கையாண்டுள்ளார். அணியும் ஆடைகளில் கூட வேற்றுமை பாராட்டாது அடைக்கலம் புகுந்தோர் அணியும் ஆடை வகைகளையே தானும் அணிவது உலக இன்பங்களில் ஆசையுற்ற நம்மவர் மத்தியிலிருந்து ஹட்சின்ஸ் அம்மாவை வேறுபடுத்திக் காட்டுகின்றது.

1996.03.04ந் திகதி எல்லோருக்கும் நேசக்கரம் நீட்டிய வெள்ளைப்பாட்டி தேவனிடத்தில் ஐக்கியமானார். ஆதரவளித்த அன்னையின் கரங்கள் சோர்ந்து மண்ணில் விழுந்தமை கண்டு கிளிநொச்சி நகரமே கண்ணீர் வடித்தது. அன்பின் அடைக்கலமாய் வாழ்ந்த ஹட்சின்ஸ் அம்மாவின் இறுதி யாத்திரையின் போது திரண்ட மக்கள் வெள்ளத்தை காண்கையில் அனைவர் மனங்களிலும் அம்மா நீங்கா இடம் பிடித்தமை புலனாகியது. மக்களோடு மக்களாக அம்மாவின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்டேன். அம்மாவின் அடைக்கலம்

கொடுக்கப்பட்டவர்கள் மீண்டும் தங்கள் நேசத்தாயை காண்போமா? என்று கலங்கித் தவித்தமையை அவர்களின் கண்ணீர் பறைசாற்றியது. எங்கிருந்தோ வந்து புறந்தள்ளப்பட்ட கிளிநகரத்து மக்களுக்கு அடைக்கலம் அளித்த வெள்ளைப்புறா நீள்துயில் கொண்டாலும் கருணா நிலையம் மண்ணில் வாழும் நாள் முதல், கிளிநொச்சி நகரத்தில் புறந்தள்ளி விடுபவர்கள் இருக்கும் வரையும், புறந்தள்ளப்பட்ட, கைவிடப்பட்ட அபலைகள் வாழும் வரை வெள்ளைக்கார அம்மாவினால் விட்டுச் செல்லப்பட்ட நினைவலைகள் உயிர் வாழும்.

இன்றும் நலிவடையாது அறத்தில் சரிவடையாது கருணையின் இல்லமாய் "கருணா நிலையம்" காட்சி தருவதைக் காண்கையில் "வருத்தப்பட்டு பாரம் சுமப்பவர்களே! என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்ற தேவனின் கூற்றினை மெய்யாக்க வந்த தேவதையின் கனவு நனவாகியுள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

கருணா நிலையம் இடப்பெயர்வின் தாக்கத்தை சுமந்து நின்றாலும் அடைக்கலம் அளிக்க தவறவில்லை, அநாதைகளை ஏற்க பின்நிற்கவில்லை. தனது சேவையில் எந்த குறைவுமின்றி தேவனிடத்தில் அடைக்கலம் தேடி வந்த அபலைகளின் ஏக்கங்களைத் தீர்த்து சமூதாயத்தில் அவர்கள் வாழ நல்வழி காட்டி இறை சிந்தனை உள்ளவர்களாகவும், தேவனின் வாழ்க்கைப் பாதையை விட்டு தடம் மாறாத வண்ணம் வாழ வழிசமைத்த இன்றும் பாரச்சிலுவை சுமப்பவர்களுக்கு இளைப்பாறுதல் தரும் அடைக்கல இல்லமாய் காட்சி தருகின்றது "கருணா நிலையம்".

தனது அறுபதாம் ஆண்டில் காலடி பதிக்கும் இல்லம் தனது சேவையை குறைவின்றி வழங்க வாழ்த்துவதோடு, நினைவுப் பதிவேட்டை வழங்குவதற்கு சந்தர்ப்பம் தந்த நிர்வாகத்தினருக்கு இச்சந்தர்ப்பத்தில் நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

கௌரவ.த.குருகுலராசா
கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும்
இளைஞர் விவகார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.

கருணாநிலைய பழைய மாணவி செல்வி. மு.ஜினி அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Miss. M.Jiny, Old Student of Karuna Nilayam:



## வாழ்க என்றும் நீ!

எனக்கு சொந்தமான சில வரிகள்
இங்கே உங்களுக்காக.......
அன்றொரு காலம்......
போர் மேகங்கள் புடை சூழ
தீக்கணைகள் பூமியை நனைக்க..
புழுவாய்த் துடித்துப் போனது என் உறவுகள்..
இருப்பதற்கு இடமில்லை
உண்பதற்கு உணவின்றி
பிரிந்த உறவுகளை கைவிட்டு
யாரை யார் தேற்றுவது..?
எங்கும் அவலம்!
அமைதியை இழந்த எமக்கு
நமக்காக யாருமில்லை எனும்
வேளையில் ஆதரவாய் உதவிக்
கரம் நீட்டினாள் என் அன்னை
கருணா நிலையம் உன் பணிக்காக
கடவுளுக்கு நன்றி கூறுகின்றேன்.

என் சிறுவயதுக் காலத்தை அரவணைத்து
கல்வி வாழ்க்கையை சீர்திருத்தியவள்
நல்ல உறவுகளுடன் உறவாடி
சமூகத்திலும் பண்பாய் நடந்து
பலர் போற்றும் பெருமைகளை நானின்று
பெற்றிட அன்று ஊன்று கோலாய்
உதவிக்கரம் நீட்டியவள் என் அன்னை
கருணா நிலையம்

அறிவை வளர்த்திட
திறமையை பெருக்கிட
பாரில் பெருமை பெற்று
எனக்காக சுய கௌரவத்தை
நான் பெற்றிட வழி சமைத்த
என் கருணா நிலையத்துக்கு எனது
மனமுவந்த நன்றிகளை கூறுகின்றேன்.

இன்னும் என்னைப் போன்ற பலரின்
வாழ்வையும் நீ சீர்படுத்தி
பாரில் ஆயிரம் ஆயிரம் புகழ்களை
பெற்றிட நீ வழிவகுக்க வேண்டும்
என் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
உனது இப்பணி இலக்குகளை
நிறைவேற்றிட இன்று நானும்
உன்னுடன் இணைந்து கரம் கோர்க்கின்றேன்

தொடரும் பயணத்தில்......
வாழ்க என்றும் நீ

செல்வி-ஜினி முத்துக்குமார்
பழைய மாணவி

கருணாநிலைய பழைய மாணவி செல்வி. ஜெ.ஜெயசுகிதா அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Miss. J.Jeyasukitha, Old Student of Karuna Nilayam:



## கருணா நிலையம்

காரிருள் மேகம்
கலை கொண்டு வந்தது போல்
கண்கள் மிரண்டு நிற்க
கரை புரண்ட சுனாமியால்
கலங்கிப் போன எம்மை
கரம் கொடுத்து அணைத்தது
கருணா நிலையம்.
புதுமையான உலகம்
புரியாத முகங்கள்
அறியாத அரவணைப்பு - இவை
அனைத்தையும் தாண்டிய
அன்பு உள்ளங்கள்
சின்ன சின்ன சண்டைகள்
சிறு நாழிகையிலேயே மன்னிப்புக்கள்
அதட்டல் இல்லா கண்டிப்பு – என
அரவணைத்தது அன்னையைப் போல
தத்தித் திரிந்த வயதிலிருந்து
தவித்துப் பயின்ற கல்வியின்
அடுத்த நகர்வான பல்கலையைக் காண
ஆசையோடு அனுப்பியது கருணாநிலையம்
வாழ்க்கையில் பல வடிவங்களை
வகை வகையாய் புரியவைத்த
எம் கருணாநிலையத்தை
என்றுமே எண்ணிடுவோம்
எப்போதும் கை கொடுப்போம்.

செல்வி. ஜெயராமன் ஜெயசுகிதா
பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.

கருணாநிலைய பழைய மாணவி செல்வி. ஆ.அஜந்தினி அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Miss. A.Ajanthiny, Old Student of Karuna Nilayam:

## கருணா நிலையத் தாய் வாழ்க...

கரையோடு அலை புரளும்
கடலோரம் நாம் வாழ்ந்தோம்
கடல் வந்து எமைக்கொல்ல
திக்கற்று நாம் திரிந்தோம்
கல்விகற்க இடமுமில்லை
கல்வி பயில மனமுமில்லை
பிரிந்து போன உறவுகளின்
பாச அலைகள் நெஞ்சுக்குள்ளே
பரிதவித்து நான் நின்ற வேளை

கருணையாய் எனை அணைத்தாய்
கருணாநிலையத் தாய்
எம் மனநிலை மாற்றி
மகிழ் கல்வி தானும் தந்து
நிறைவிலா இவ்வுலகில்
நிலையாக நாம் வாழ்ந்துவிட
ஏகிய பல்கலைக்கழக
வாழ்வதனைப் பெற்றிடவே
வழிசமைத்தாள் தாய்

அன்பினைத் தந்தாள் தாய்
அறிவினைப் பொழிந்தாள் தாய்
பாரினிலே நாமுயர
பண்புதனை உயர்த்திவிட்டாள்
சென்ற இடம் நாம் சிறக்க
செழுமைக் கல்வி தானும் தந்த
கருணாநிலையத் தாய் வாழ்க....
கலை, கல்வி செழுமை பெற வாழ்க....

செல்வி. ஆனந்தராசா அஜந்தினி
தமிழ்த்துறையாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

கருணாநிலைய பழைய மாணவி செல்வி.கி.அனுஜா அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Miss.K.Anuja, Old Student of Karuna Nilayam:



## பெரு விருட்சம்

இறையரசின் அழைப்பினிலே
இங்கிலாந்தில் இருந்து
வன்னிக்கு வந்த
கன்னித் தேவதை இட்ட
விதையொன்று இன்று
பெரு விருட்சமாகி நிற்கிறது

எதிர்கால நம்பிக்கை இழந்து நிற்கும்
நிர்க்கதியானோரின்
நிம்மதியான வாழ்விற்காய்
விழுதுகள் பரப்பியே
அரவணைத்துக் காக்கின்றது

பசித்தவர் முகம் பார்த்து
பழம் தரும் சோலை இது
இருப்பவற்றை தனக்கென எண்ணாது
கொடுக்கின்ற கோயில் இது
தினம் துடிக்கும் உயிர் கண்டு
ஆறுதல் அளிக்கும் அன்னை இது

அன்னை தந்தை இழந்து நிற்கும்
சிறார்கட்கு அறிவூட்டி பண்பூட்டி
அவனியிலே சான்றோராய் ஆக்கிடும்
கலாசாலை இது

நிர்க்கதியானோரின் நிகழ்கால வாழ்விற்கும்
கேள்விக்குறியான எதிர்கால வாழ்விற்கும்
நம்பிக்கை ஒளி வீசி காக்கின்ற சோலை இது

தன் நிழலில் இருப்போர்க்கு மட்டுமன்றி
தன் நிழல் நாடி வருவோர்க்கும்பல உதவி அளித்து
பல கலைகள் பயில உதவிடும்உதவும் கரமிது

அறுபது ஆண்டுகள் கடந்தாலும்
குன்றின் மேலிட்ட தீபமாய்
கருணை ஒளி வீசும்
கருணா நிலையத்தின் புகழும் சேவையும்
அவனியெங்கும் பரவட்டுமே.

செல்வி. கிருஷ்ணா அனுஜா
பொருளியல் துறை
(2ம் வருடம்)
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்

கருணாநிலைய பழைய மாணவி திருமதி.அ.ரோசிகா அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Mrs. A.Roshika, Old Student of Karuna Nilayam:



## இல்லத்தின் நினைவுகளில்....

நிழல்கள் இங்கே பிரிகின்றது
நிஜங்கள் எங்கோ தொடர்கின்றது............
காட்சிகள் நம் முன் கரைந்தாலும்
நினைவாய் மனதில் நனைகின்றது
நம் இல்லத்தின் இனிய நினைவலைகள்.....
சுழல்கின்ற புவிதனில்
அரவணைக்க யாருமின்றி தவித்தவேளை – எமக்கு
அடைக்கலம் தந்த எம் கருணைத் தாயே
உம் நாமம் என்றும் என் நினைவுகளில்....
காண்கின்ற உலகமே துன்பத்தால் துவண்ட வேளை
உம் கரம் கொண்டெமையேந்தியவளே!
ஒன்றாய் நின்றோம்... உறவுகள் கற்றோம்...
காலத்தின் கோலத்தால்
கலைக்கப்பட்டது எம் கூடு
நாம் பேசிய வார்த்தைகளெல்லாம் காதிலொலிக்கிறது
இணைந்திருந்த வேளையெல்லாம் நெஞ்சிலினிக்கிறது
சின்னஞ் சிறுவர்கள் போல் நாம் போட்ட சண்டையெல்லாம்
என் கண் முன்னே விரிகிறது
சமையலறை சாப்பாடும் மாமரத்து பதுங்கு குழிகளும்
நித்தம் என் மனதில் ஊசலாடுகிறது
இக்கவியை வடிக்கையிலே
கண்கள் பனிக்கிறது
மீண்டும் வருமா? இக்காலம்....
வாழ்வை உண(ய)ர்த்திய கருணா நிலையமே!
வாழ்க உம் புகழ்! வளர்க உம் பணி!
இவ்வையகம் உள்ளவரை.......

திருமதி. ரோசிகா அமுதாஸ்
முகாமைத்துவப் பிரிவு,
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

கருணாநிலைய பழைய மாணவி செல்வி.நா.ஜனனி அவர்களின் வாழ்த்துச் செய்தி:

Message from Miss.N.Janani, Old Student of Karuna Nilayam:



## புகலிடமே நீ வளர்க

கல்வி எனும் கடலில் நாம்
கரை தெரியாப் படகானோம்
கருணை இல்லத் தாயே நீ
கரை சேர்க்கும் துடுப்பானாய்

பெற்ற தாயும் உற்ற தந்தையும் போல்
சுற்றம் என சொந்தம் பல நீ தந்தாய்
குற்றம் தனைக் கண்டித்து
குறைபோக்கி நிறைவாய் எமை உருவாக்கினாய்

தாய் மடியின் சுகங்கள் பல
உனதடியில் கண்ட வேளை
குழந்தையென நாம் புரிந்த
குறும்புகளும் கொஞ்சமல்ல

ஒரு கூட்டுக் கிளியென – உன்
ஒற்றை நிழலில் தங்கிய அந்தக்காலங்கள்
ஓராயிரம் ஜென்மம் தாண்டினாலும்
ஓய்ந்திடா எம் மனங்கள் எங்கும்

துயருறும் நெஞ்சங்கள்
புகலிடமாய் நீ புரியும் பணிகள்
புவியெங்கும் கிளை பரப்பி புகழ் பல நீ பெற
புன்னகையுடன் வாழ்த்துகிறேன் நான் இங்கு......

செல்வி. நாகலிங்கம் ஜனனி
வவுனியா வளாகம்
யாழ்ப்பாணம்.

கருணாநிலைய பழைய மாணவி செல்வி.செ.மேகலா அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Miss.S.Mehala, Old Student of Karuna Nilayam:



# எமையெல்லாம் ஒன்றிணைத்து

எம் துயர் துடைத்த – எம்
கருணை இல்லமாம் கருணா நிலையத்தை
நினைக்கையிலே – என்
எண்ணமெல்லாம் சிறகடித்து பறக்கிறது

துயரங்கள் பல சுமந்த – என்
உள்ளத்திற்கு ஆறுதல் இல்லாத
அந்த துயரமான தருணத்திலே
என் உயிரையும் உடலையும்
ஒன்றிணைத்து காத்த இல்லமே
உன் சேவைகள் மிளிர வாழ்த்துகின்றேன்....

துன்பங்கள் எத்தனையிருந்தாலும்
அத்தனையும் பனி போல
கரைந்த காலங்களை நினைக்கின்றேன்
மரத்தடி நிழலும்
பெரியோரின் அறிவுரையும்
அன்பும் கண்டிப்பும்
மறக்கத்தான் முடியுமா?
பல நினைவுகளை சுமந்தபடி
சில நிமிடம் நினைத்தாலும்
கண்ணீர் வடிக்காமல்
இருக்கத்தான் முடியுமா?
என்றென்றும் எமை காத்த
கருணை இல்லமே – உன்
கடன் தீர்க்க காத்திருக்கின்றேன்
வாழ்க உன் சேவை பூமியிலே.....

செல்வி. செல்வம் மேகலா
தமிழ்த்துறை
கல்வியியற் கல்லூரி, அட்டாளைச்சேனை.

கருணாநிலைய பழைய மாணவி திருமதி.இரா.ஜானகி அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Mrs.R.Janahi, Old Student of Karuna Nilayam:



# தாய் வீடு

1979ஆம் ஆண்டு அன்று என் தாய் என்னைத் தத்தெடுத்த நாள். என் பயத்தோடு கூடிய அழுகையின் மத்தியிலும் என்னை அணைத்து அன்பு முத்தமிட்டு அணைத்துக் கொண்டார். அவர்தான் ஹட்சின்ஸ் அம்மையார். அங்கே அம்மையாரின் அரவணைப்பில் தான் எத்தனை உறவுகள். அத்தனை பேரும் ஒற்றுமையோடு இருந்தனர்.

ஒரு வருட கால ஓட்டத்தில் பக்கபலமாக ராணி அமரகுலசிங்கம் அவர்கள் வந்து கருணா நிலையப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்கள். அவர்களும் இள வயதுள்ளவராக இருந்தாலும் கொஞசம் கூட தயக்கம் இன்றி தன்னை அம்மா என்றே எல்லோரும் அழைக்கும்படி அன்புக் கட்டளை இட்டார்கள். அதன் பின் ஹட்ச்சின்ஸ் அம்மையாரின் இல்லம் எல்லா வகையிலும் மிகவும் செழிப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்ததென்றால் மிகையாகாது.

எப்படியென்றால் ராணி அம்மாவின் கையின் கீழ்த்தான் நாம் வளர்க்கப்பட்டோம். சகலமும் ஒழுங்காகவும் கிரமமாகவும் நடந்தது. சகலருக்கும் ஏற்ற வகையில் முறைகள் அமைக்கப்பட்டு வழி நடத்தப்பட்டது. பாடசாலைப் பிள்ளைகள் ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பப்பட்டார்கள். O/L நன்றாக சித்தி பெற்றவர்கள் யாழ் சுண்டுக்குழி மகளிர் பாடசாலைக்கு சென்று கல்வியைத் தொடர்ந்தார்கள். அந்த சந்தர்ப்பம் எனக்கும் கிடைக்கப் பெற்றது. நானும்O/L இல் நல்ல பெறுபேறுகளைப் பெற்றேன். ஆசிரியர் பயிற்சிக்கு அனுப்பப்பட்டேன்.

பாடசாலைக் கல்வியை முடித்தவர்களுக்கு கலைகள் கற்றுக் கொடுக்கப்பட்டது. தோட்டத்துறை வேலைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. விடுமுறை நாட்களில் விளையாட்டுக்கள் சொல்லிக் கொடுக்கப்பட்டது. கிறிஸ்மஸ் நாட்களில் புத்தாடைகளுடன் நாடக, நடன பாடல் போட்டிகளும், கரோல் கீதங்களும் சந்தோசத்திற்கு அளவே இல்லை. இன்று நினைத்தாலும் கண்களின் ஓரத்தில் நீர்த்துளி எட்டிப் பார்க்கத்தான் செய்கிறது.

இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக நாம் தேவனைப் பற்றிய பக்தியிலும் பயத்திலும் வளர்க்கப்பட்டோம். இதில் எம் ஆலய போதகர் 'செல்வரட்ணம்' அவர்களின் பங்களிப்பு அளவற்றது. ஒவ்வொரு domatory staff உம் முக்கியமானவர்கள். றோசலின் அன்ரி, சந்திரா அன்ரி, டெய்சி அன்ரி, ரீட்டாக்கா, தேவி அன்ரி, ராஜேஸ் அன்ரி, எஸ்தர் அன்ரி, ஜீவாக்கா, ஜெயம் அன்ரி, சிராணி miss அனைவரும் அன்புடன் எம்மை வழிநடத்தினார்கள்.

எம் எல்லோரையும் உருவாக்கிய இவர்கள் எல்லோருக்கும் என் மனம் நிறைந்த நன்றியும், இயேசு கிறிஸ்த்துவின் நாமத்தில் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.

எங்கள் கூடு கலைவதற்கு நாட்டுச் சூழல் காரணமாகிவிட்டது. அதில் என் பிரிவு 1989இல் இடம்பெற்றது.

இயேசு கிறிஸ்த்துவின் கருணையால் கருணா நிலையம் செழிப்புற வளர மீண்டும் எனது வாழ்த்துக்கள்.

திருமதி.ஜானகி ராஜதுரை
கெக்கிராவ.

திரு.எம்.சி.பிரான்சிஸ் அவர்களின் அவர்களின் வாழ்த்துச் செய்தி:
Message from Mr.M.C.Francis, Former Board Member of Karuna Nilayam:



*I have great pleasure in sending my greetings and blessings to Karuna Nilaiyam, its Director Archdeacon Jeyaveerasingham, The Board of management, the Warden, faithful staff and workers and to the past and present residents. I visited the institution in May this year and was happy to see it's progress. I consider it as a model women institution which caters for women of all ages who require help in need. I appeal to all churches, well wishers and benefactors to support and assist the institution in all their undertakings. Let Karuna Nilayam shine as beacon of Kindness and Mercy. Let us also remember at this time the work and sacrifice of the founder Ms Hutchins. I wish dedicated women to emulate this Lady who sacrificed a happy life in her birth country and spent her life among us for the benefit of women and children in need.*

## Karuna Nilaiyam 1955 --1990

Karuna Nilaiyam was a missionary venture started in 1955. Ms Hutchins a missionary whose desire when she came to Ceylon in 1927 was to serve in a jungle undeveloped area. Her desire was partially fulfilled at Kopay when she was in charge of girl's orphanage boarding house. In 1954 she retired from teaching and went back to Wales. But her desire to serve under-privileged women made her return. Archdeacon Navaratnam fulfilled her desire by requesting her to serve in Kilinochchi area. This was a project supported by the Jaffna Church missionary association.

Ms Hutchins undertook the project depending on her meager pension and monetary help from her friends. With the help received from friends from the south a Church and a dorm were built. Engineer C. Canagaraja from Kopay helped her in the construction work. She admitted orphan children, destitute women and unwed mothers and cared for them like a mother. From 1955 to 1978 she was the warden , manager , accountant and marketing officer. Her annual x'mas letter to Churches and friends in Sri Lanka and in foreign countries brought in donations. Rosaline acca and Chandra were her main helpers. During these years the residents were trained in house keeping, sewing, coirwork etc. She would take the finished goods to schools and offices and sold them herself. Traders from Kilinochchi area also came to KN and purchased the articles to help her.

In 1975 she had difficulties in providing facilities for all children. On the advice of Rev Thambiraja she requested help from the Kindernote Hilfe. KNH gave the grant for a children dormitory and monthly grant for the children.

In 1978 at the AGM of the JCMA, I was elected treasurer. At that meeting KN report was read. Archdeacon Horsington discussed about the progress and called for suggestions, how a smooth transfer of administration be done so that the good work of Ms Hutchins be carried on after her. I agreed to visit KN weekly and help in account keeping through which, JCMA could know the donors and how Miss Hutchins managed the home.

In 1979 Ms Hutchins $80^{th}$ birthday was celebrated. JCMA sent an appeal to Churches and friends with a suggestion to institute Miss Hutchins fund. In March 1979 Rs 200000 was deposited

with the Diocese. During my regular visit I discussed with Ms Hutchins about the take over of management during her lifetime, so that she could remain as a mentor and train the new administrator. She agreed and the Archdeacon on my advice appointed A Board of management. The members were: Archdeacon Director President, M C Francis Executive Secretary, Miss Hutchins, Rev Thambiraja, Rev Isaac Selvaratnam, Messrs Rajendran, C E Anandarajan and Sam Lewis. After the untimely death of Anandarajan, Dr Devasakayam was appointed to the Board.

The Board appointed Miss Rani Jeyaratnam as Warden, Mrs Jeeva Ratnaraja was appointed accountant and Ms Esther Seenithamby as caretaker of Peace dorm caring mentally handicapped residents. Fr Isaac, the Parish Priest of St Paul's church was of help in the smooth transfer of administration. In the first year of administration we celebrated the Silver Jubilee of KN. The church was renovated and wings were added to accommodate more worshippers. The Old dorm was remodeled. The roof was raised and the veranda was extended to serve as a dining cum study hall. A fund was raised by an appeal and a Jubilee fund of Rs 200 000 was collected and deposited with the Diocese.

The Board brought in several changes under the new management. A respectable salary scale was introduced. A gratuity fund was initiated for the workers to which workers and the management contributed. Nursery school was started. With the help of CBM a multipurpose hall was built. NORAD also helped in other building projects. Mr Jeyaveerasingham, a PWD engineer was in charge of planning and supervising the building constructions. Nursery school was inaugerated and Miss Pararajasingham was appointed as assistant warden in charge of education. The Board also decided to send capable students to Chundikuli Girls College to pursue higher studies. Ms Vijayaluxumy and Thanaluxmy were successful and entered the Jaffna University. The present warden conveyed to me that about 26 girls have graduated between 1980 and 2015.

Warden Rani married while she was warden but continued to serve for six years and retired after a child was born. Mrs. Emerson, a retired teacher along with her husband Stanley a retired health officer took over the administration in 1988 and did an excellent service until she retired. After 1980 KN also passed through difficult war situations but Ms Hutchins remained with the children and gave a moral support. She managed her pension separately and helped the residents of Kilinochchi in need by giving financial aid until she died in 1996. After Mrs Emerson Miss Jeyachandran and Mrs Thayamohan shared the wardenship for a few years. Miss Mary Renika who was a resident of KN is the present warden from 2003She is ably supported by the Chaplain Rev S.k.Daniel and Archdeacon Jeyaveerasinghan. Archdeacon Nesakumar as director during the difficult years was responsible in managing and rebuilding KN after taking over a war damaged KN. KNH and CBM helped him financially in his undertaking to rebuild the institution.

M C Francis
Executive Secretay
Karuna Nilaiyam Board of Management from 1979 to1980

# Karuna Nilayam

**"Of patient hope, and quiet brave endurance,**
**With childlike trust, that fears nor pain nor death"**

**An Oasis of Mercy**

One of the spaces Geetha and I loved to visitduring my Episcopacywas KarunaNilayam. Even though travel at that time was difficultand exhausting,the warm and welcoming energy of 60 plus girls and their house mothers and the innocent joy of 17 mentally challenged ladies at the peace dorm, made all the difference. At that time KN was indeed an oasis of mercy and kindness in a desert of suspicion and fear.

**One Family**

From the time we would arrive till we left we shared in the fullest community of thegirls and ladies; laughing, talking, eating, doing concerts, praying and going for walks. Our standard joke was that we were the children and the girls our teachers. The little ones in particular took great joy in teaching us Tamil; giggling when we made mistakes and encouraging us on. The ladies loved to sing for us, making sure that we clapped vigorously. On arrival and departure we would spontaneously kiss each one of the girls and ladies. In this caring space away from home, Geetha and I were father and mother to them all.

**A light to lighten the darkness**

During those anxious days of death and displacement,our little community of mercy taught us lessons 'of patient hope and quiet brave endurance, with childlike trust….' Three times destroyed and three times displaced,those who belonged and continued at KN displayed the remarkable resilience of their founding mother Muriel Hutchins whose picture accompanied them and spirit inspired them wherever they went.

The character of KN was most tested when the girls were displaced and in refugee camps. At one camp they were identified as the girls who 'helped others.' On another occasion the commanding officer commented half seriously that their vibrant presence could convert the whole camp to Christianity. When on a third occasion an understanding military officer bent the rules to bring them all in a bus to see us at the vicarage at Vavuniya there were only tears and hugs. These little lights in the darkness were nevertheless vulnerable and wounded children.

**The cost of life and death**

When we met after the horrendous experience of Vellamullivaikkalthere was no place for a prepared sermon. All that was possible was to stoop and wash thefeet of our girls and then eat a simple meal prepared by them in the tradition of the Lords supper. It was on this occasion that a window opened to the profound meaning of the feet washing. To touch and wash the feet of our girls which had carried them from place to place in search of security and life over the recent months, was the nearest we could get to demonstrate the un-demonstrable; our solidarity in the trauma of the past and recommitment in the journey ahead towards dignity, justice and hope.

Several of our girls died in the protracted war and violence. News of their deaths brought unbearable grief. Their innocence paid theprice for the greed and hatred of those who provoked and fed our protracted civil war. The most we can do today is to seek their forgiveness and remember them by nameat this anniversary and from time to time thereafter when the community meets at worship. May these little ones be filled with laughter and joy in the eternal kindness and mercy of their heavenly Fathers'house.

**Co-Workers with God**

This message will be incomplete without grateful acknowledgement of the vocations of four persons who, among the many who served KN, made lasting contributions to the life and journey of KN.

- Our founder Muriel Hutchins, who gave her life for her girls and who walked the streets of Kilinochchi bare footed to sell brooms in exchange for food. She is still remembered by the people of all communities as a Saint who lived among them. Her vision and sacrificial life cannot be easily erased or forgotten.

- Arch Deacon Nesakumar, who provided for every need of the girls and ladies from clothes and books to food and medication and courageously protected them from intimidation from all sides. It was his idea to integrate the girls with the ladies; a visionary move that has brought mutual blessings and a model for other homes. Fr. Nesa single-handedly built and rebuiltthe destroyed buildings and implemented whatever career guidance opportunities were possible in the then climate of deprivation and conflict. One of his greatest joys was to see our girls enter the University. If not for him, KN would today be a closed chapter of our history.

- Renika, our self-effacing warden who understood the girls like a mother and refused to accept the post of warden even though she was de-facto in this position. Her calm and caring presence sustained the hospitality and hope of KN. Like Ruth she went where the girls went, even into the depths of risk and danger and stayed where the girls stayed in-spite of the scarcity of everything. Her life was a sign that there was always room at the table for an extra plate and that the grace of the day was just enough to cope with the anxieties it brought.

- Esther Aunty, who nourished and held the ladies of the Peace Dorm in her arms and heart at all times. She knew the details of each ladie's medication and went around 18 hours of the day equipped simply with a heart of gold and a vivacious smile. Even in the best of times and places having a person of her calibre and temperament in a caring position would be an extraordinary gift. That we had her for the mentally challenged ladies of Peace Dorm during times of severe social crisis was a sure sign of God's covenant with KN.

**Memory and gratitude**

It is such people who encourage and remind us that God is at work among us. We owethem a debt we will never be able to repay.

This short reflection is consequently a tribute to all who served the cause of KN and in particular our girls who died during the protracted war and violence of those sad and tragic days.

With Peace and Blessings to all

+ Duleep<br>
Former Bishop of Colombo.

# கருணா நிலையம்

"பொறுமையான நம்பிக்கையும், அமைதியான துணிச்சல் மிக்க சகிப்புத்தன்மையுடன் கூடிய, வேதனைக்கோ அல்லது மரணத்திற்கோ அச்சமடையாத குழந்தைத்தனமான நம்பிக்கை"

**கருணையின் சோலை**

எனது ஆயராளுகையின் போது கீதாவும் நானும் பயணம் செய்ய விரும்பும் இடங்களில் ஒன்றாக கருணா நிலையம் விளங்கியது. பயணம் செய்வது அக்காலங்களில் கடினமானதும் சோர்வடையச் செய்வதாக காணப்பட்டாலும், 60 இற்கும் மேற்பட்ட பெண்கள் மற்றும் அவர்களில் இல்ல அன்னைகள் இதமான வரவேற்பும் சமாதான இல்லத்தில் தரிசித்திருந்த 17 பெண்களின் அப்பாவித்தனமான மகிழ்ச்சியும், அனைத்தையும் மாற்றியது. சந்தேகம் மற்றும் அச்சத்தின் பாலைவனத்தில் கருணை மற்றும் இரக்கத்தின் சோலையாகவே உண்மையில் அப்பொழுது கருணா நிலையம் திகழ்ந்தது.

**ஒரு குடும்பம்**

நாம் அங்கு சென்றதில் இருந்து அவர்களை விட்டு செல்லும் வரை நாம் பெண் சிறார்கள் மற்றும் பெண்களின் முழுச் சமூகத்தோடு: சிரித்து, கதைத்து, உணவருந்தி, கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து, செபித்து நடைகளுக்குச் சென்று மகிழ்ந்தோம். நாம் சிறார்களாக இருந்து பெண்களை எமது ஆசிரியர்களாக கருதுவது எமது நிலையான நகைச்சுவையாக அமைந்தது. இதில் சிறார்கள் குறிப்பாக, எமக்குத் தமிழ் மொழியினை கற்றுக் கொடுப்பதில்: நாம் தவறு மேற்கொண்ட போது நகைத்தும் எம்மை ஊக்குவித்தும் பெருமகிழ்ச்சியடைந்தனர். நாம் விறுவிறுப்பாக கைதட்டுவதை உறுதி செய்யும் விதத்தில் பெண்கள் எமக்கு பாட்டிசைத்து மகிழ்விக்க விரும்புவர். வருகையின் போதும் மீளத் திரும்பும் போதும் ஒவ்வொரு பெண்சிறார்களையும் பெண்களையும் நாம் முத்தமிட்டுச் செல்வோம். எமது வீட்டில் இருந்து தூரமாக உள்ள இந்த பராமரிப்பு இடத்தின் அனைவருக்கும் கீதாவும் நானும் தாயாகவும் தந்தையாகவும் காணப்பட்டோம்.

**இருளை அகற்றுவதற்கான ஓர் ஒளி**

மரணம் மற்றும் இடப்பெயர்வின் பதட்டமான அக்காலப்பகுதியில், கருணையின் வடிவான எமது சிறிய சமூகம் எமக்கு "பொறுமையான நம்பிக்கை மற்றும் அமைதியான துணிச்சல் மிக்க சகிப்புத்தன்மை, குழந்தைத்தனமான நம்பிக்கை...." போன்ற பாடங்களைக் கற்பித்தது. மூன்று முறை அழிக்கப்பட்டும் மூன்று முறை இடப்பெயர்க்கப்பட்டாலும், கருணா நிலையத்திற்கு உரித்தான அதனுடன் தொடர்ந்து இருந்தவர்கள் கருணா நிலையத்தின் ஸ்தாபக தாயாகிய மியூரியல் ஹட்சின்ஸ் அவர்களின் சிறப்பான ஆற்றலை வெளிக்காட்டினர் என்பதோடு அவர்களை மியூரியல் ஹட்சின்ஸ் அவர்களின் படத்தினை தம்முடன் தாம் சென்ற இடமெல்லாம் எடுத்துச் சென்றதோடு அவரின் ஆவி அவர்களுக்கு ஊக்குவிப்பையும் வழங்கியது.

பெண்கள் இடம்பெயர்க்கப்பட்டு அகதி முகாம்களில் விடப்பட்ட போதே கருணா நிலையத்தின் குணாதிசயம் பெரிதும் பரீட்சைக்குள்ளாக்கப்பட்டது. ஒரு முகாமில் 'மற்றவர்களுக்கு உதவும்' பெண்கள் என இனங்காணப்பட்டனர். இன்னொரு தருணத்தில் கட்டளை அதிகாரி பகுதி அக்கறையுடன் இவர்களின் துடிப்பான சமூகம் முகாமிலுள்ள அனைவரையும் கிறிஸ்தவர்களாக மாற்றிவிடும் என்ற கருத்தை முன்வைத்தார். மூன்றாவது தருணத்தில் புரிந்துணர்வுள்ள இராணுவ அதிகாரி ஒருவர் விதிகளை வளைத்து அவர்கள் அனைவரையும் ஓர் பஸ் வண்டியில் எம்மைக் காண என வவுனியாவிலுள்ள எமது திருப்பணியாளர் இல்லத்திற்கு அழைத்து வந்தபோது அங்கு கண்ணீரும் அரவணைப்புமே காணப்பட்டது. இருளில் இருக்கும் இந்த சிறு ஒளிகள் ஒரு காலத்தில் பாதிக்கப்பட்ட காயமடைந்த குழந்தைகளாக இருந்தனர்.

**வாழ்வு மற்றும் சாவின் விலை**

வெள்ள முள்ளிவாய்க்காலின் பயங்கரமான அனுபவத்தின் பின்னர் நாம் சந்தித்த போது தயார் செய்யப்பட்ட அருளுரையினை வழங்க ஓர் இடம் இருக்கவில்லை. சாத்தியமாக இருந்தது

என்னவென்றால் எளிமையான நிகழ்வில் எமது பெண்களின் பாதங்களைக் கழுவி அதன் பின்னர் ஆண்டவரின் இராப்போசன பாரம்பரியத்தை நினைவு கூறி அவர்களால் தயாரிக்கப்பட்ட எளிமையான உணவை உட்கொள்ளவே முடிந்நது. இந்த சந்தர்ப்பத்தின் போதே பாதம் கழுவுதலின் ஆழமான அர்த்தத்திற்கான வழி திறந்தது. அண்மைய மாதங்களாக பாதுகாப்பையும் வாழ்வையும் தேடி இடத்திற்கு இடம் தம்மை எடுத்துச் சென்ற எமது பெண்களின் பாதங்களை தொட்டுக் கழுவுவதே, விளக்க முடியாததை விளக்க எம்மால் செய்யக் கூடிய மிக நெருக்கமான விடயமாக இருந்தது. கடந்த கால அதிர்ச்சியில் எமது ஒருமைப்பாட்டையும் கண்ணியம், நீதி மற்றும் நம்பிக்கையை நோக்கிய எமது பயணத்தில் எமது மீள் அர்ப்பணிப்பையும் எடுத்துக்காட்டுகின்றது.

நீடித்த யுத்தம் மற்றும் வன்முறையில் எமது பெண்களில் பலர் மரணித்தனர். அவர்களின் மரணம் குறித்த செய்தி தாங்கமுடியாத வருத்தத்தினை ஏற்படுத்தியது. நீடித்த சிவில் யுத்தத்தினை தூண்டி வளர்த்தவர்களின் பேராசைக்கும் வெறுப்புக்கும் அவர்களின் அப்பாவித்தனம் விலையைச் செலுத்தியது. அவர்களின் மன்னிப்பை நாடி இந்த நினைவாண்டில் பெயர் பெயராக நினைவுகூறி காலத்திற்குக் காலம் அதற்குப் பின்னர் நடைபெறும் வழிபாடுகளில் சமூகம் சந்திக்கும் போது அவர்களை நினைவு கூறுவதே இன்று எம்மால் அவர்களுக்கு செய்யக்கூடிய மிகச் சிறந்த விடயமாகும். தமது இறை பிதாவின் இல்லத்தில் நித்திய இரக்கம் மற்றும் கருணையின் சிரிப்பிலும் மகிழ்ச்சியிலும் இந்த சிறார்கள் என்றும் குறைவற்று இருப்பார்களாக.

**கடவுளோடு உடன் உழைப்பாளர்கள்**

கருணா நிலையத்தில் பணியாற்றிய பலருள், கருணா நிலையத்தின் வாழ்விலும் பயணத்திலும் நீடித்த பங்களிப்பை செய்த நான்கு நபர்களின் பணிகளை நன்றியுடன் ஒப்புக்கொள்ளவில்லை எனில் இந்த செய்தி பூரணமடையாது.

- உணவிற்கு மாற்றீடாக தும்புக்கட்டையை விற்க வெறும் காலுடன் கிளிநொச்சி வீதியோரங்களில் நடந்து தமது பெண்களுக்காக தமது வாழ்வைக் கொடுத்த எமது ஸ்தாபகரான மியுரியல் ஹட்சின்ஸ் அவர்கள். அங்கு வாழ்ந்த அனைத்து சமூகத்தின் மக்கள் அனைவராலும் இன்னமும் புனிதராக இவர் நினைவு கூரப்படுகிறார். அவரது தரிசனமும் தியாக வாழ்வும் இலகுவாக அழிக்கப்படவோ அல்லது மறக்கப்படவோ முடியாது.

- அனைத்து தரப்பில் இருந்து வந்த அச்சுறுத்தலில் இருந்து துணிவாக அவர்களை பாதுகாத்து பெண்சிறார்களுக்கும் பெண்களுக்கும் தேவையான ஒவ்வொரு தேவைகளையும் கண்டறிந்து ஆடைகள் மற்றும் புத்தகங்கள் முதல் உணவு மற்றும் மருந்து வரை வழங்கிய குருமுதல்வர் நேசகுமார் அவர்கள். பரஸ்பர ஆசிகளையும் மற்றைய இல்லங்களுக்கு மாதிரியாகவும் அமைத்த தரிசன நோக்காகிய சிறுமிகளை பெண்களோடு இணைக்கும் எண்ணம் இவருடையதாகும். திருப்பணியாளர் நேசகுமார் அவர்கள் தனியாக அழிக்கப்பட்ட கட்டிடங்களை மீளக் கட்டியதோடு அப்போதைய இழப்பு மற்றும் மோதல் சூழலில் சாத்தியப்பட்ட தொழில் வழிகாட்டல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தார். எமது பெண்கள் பல்கலைக்கழக அனுமதியினை பெறுவதைக் காண்பதே அவரது பெரு மகிழ்ச்சிகளில் ஒன்றாக அமைந்தது. அவர் இல்லையென்றால் இன்று, கருணாநிலையம் எமது வரலாற்றில் மூடப்பட்ட அத்தியாயமாக இருந்திருக்கும்.

- தாயினைப் போன்று தமது பெண்களை புரிந்துகொண்ட சுய-ஆற்றல் மிக்க காப்பாளராக எமது றெனிக்கா இந்தப் பதவியில் அனைத்து பணிகளை ஆற்றிய போதும் பதவியினை அவர் ஏற்க மறுத்தார். அவளது அமைதியான காப்பாளரின் அக்கறையுடன் கூடிய பிரசன்னம் கருணா நிலையத்தின் விருந்தோம்பலையும் நம்பிக்கையினையும் தக்க வைக்கின்றது. ரூத்தினைப் போன்று பெண் சென்ற இடம் தாமும் சென்றார். இடர் மற்றும் ஆபத்து நிலைகளின் போதும் அனைத்தும் குறைபாடாக இருந்த போதிலும் அவர்களுடன் தரித்திருந்தார். மேலதிக தட்டிற்கு

தமது மேசையில் இடமுள்ளது என்பதற்கும் கொண்டு வந்த கவலைகளை சமாளிக்க நாளிற்கான கிருபை போதும் என்பதற்கு அடையாளமாக அவரது வாழ்வு காணப்பட்டது.

- எல்லா வேளைகளிலும் தமது கரங்களிலும் மனதிலும் அமைதி ஓய்வறையின் பெண்களைத் தாங்கி சத்தூட்டம் வழங்கிய எஸ்தர் ஆன்டி. ஒவ்வொரு பெண்ணினதும் மருந்துத் தேவையினை அறிந்திருந்த அவர் நாளில் 18 மணி நேரமும் பொன்னாலான இதயம் மற்றும் கலகலப்பான சிரிப்போடு வலம் வருவார். சிறப்பான நேரம் மற்றும் இடங்களிலும் கூட அவரது தரத்திலும் மனோ நிலையிலும் பராமரிப்பு பணியில் செயற்படுவது கூடுதல் கொடையாகவே காணப்படும். தீவிர சமூக பிரச்சினையின் போது அமைதி ஓய்வறையில் மனநலம் பாதிக்கப்பட்ட பெண்களை பராமரிக்க அவர் இருந்தது கருணா நிலையத்தோடு கடவுளிற்கிருந்த உடன்படிக்கையின் நிச்சயமான அறிகுறியாகும்.

**நினைவு கூரலும் நன்றிகளும்**

இத்தகைய நபர்களே கடவுள் எம்மோடு இருந்து பணியாற்றுகின்றார் என்பதை நினைவுபடுத்தி ஊக்குவிக்கின்றனர். அவர்களுக்கு மீளச் செலுத்த முடியாத வகையில் நாம் அவர்களுக்கு கடமைப்பட்டுள்ளோம்.

இந்த குறும் பிரதிபலிப்பானது, கருணா நிலையத்தின் காரணத்திற்காக பணியாற்றிய அனைவருக்காகவும் குறிப்பாக அப்போதைய சோக மற்றும் துயர நாட்களில் நீடித்த யுத்தம் மற்றும் வன்முறையின் போது மரணித்த எமது பெண்களின் நினைவின் விளைவாக உருவானது.

அனைவருக்கும் சமாதானம் மற்றும் ஆசிகளும் உரித்தாகட்டும்.

+டுலிப்
முன்னாள் கொழும்புப் பேராயர்

# பசுமையில் ஓர் புரட்சி

விடுதிக்குச் சென்று கல்வி கற்று வர வேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் ஒரு கனவாக சிறு வயதிலிருந்தே இருந்தது. நான் சுனாமி அனர்த்தம் காரணமாக கருணா நிலையத்தில் முதன்முதல் வந்து சேர்ந்த போது என் மனதில் ஒரு புதுவித சந்தோசத்தையும், நல்ல அனுபவத்தையும் பெற்றுக் கொண்டேன். பல அன்னையர்களின் அன்பும் ஆதரவும் கிடைத்தது. என் கண்களுக்கு வெளிச்சம் கிடைத்தது. அத்தோடு நட்பு என்ற சொல்லுக்கு இலக்கணம் வகுத்துத் தந்த என் அன்னை இல்லத்தை என் உடலில் உயிர் போனாலும் மறவேன். என்னை மேடை ஏற்றி அழகு பார்த்து என் இசையில் ஒரு அத்திவாரத்தை அமைத்து இன்று நான் நான்காம் வருட பட்டப்படிப்பை நிறைவு செய்யும் நாளை நெருங்கிய வண்ணம் என்னை உருவாக்கியது இந்த இல்லம்தான்.

கருணா நிலையம் ஒரு சரணாலயம் என்றே சொல்லலாம். ஏனென்றால் நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் கூட கடைசிவரை என்னைக் கலங்கவிடாது மின்னல் வேகத்தில் வந்த செல்களும், மழை போல் பொழிந்த குண்டுகளும், வானூர்திகளும் எம்மை இன்றோ அல்லது நாளையோ பறித்துச் சென்றுவிடும் என நிலை குலைந்து நின்ற வேளை என் குடும்பத்துடன் என்னைச் சேர்த்த பொன்னாலயம். யார் தான் வந்து ஆற்றினாலும் ஆறாத வடுக்களாய் என் அன்புத் தோழிகளை யுத்தத்தின் போது தொலைத்த நான் என் அன்புத் தோழிகளோடு கதை பேசி மகிழ்ந்த காலமெல்லாம் கனவாய்ப் போனதுவோ? என் ஆருயிர்த் தோழிகளான அனிதா மற்றும் சதாஞ்சனா என்னோடு கதை பேச வரமாட்டார்களா என ஏக்கம், எத்தனை எத்தனை உறவுகளைத் தொலைத்தோம்.

கருணா நிலையத்தில் நான் செய்த லீலைகள், பாடசாலை செல்லாமல் கட்டிலின் கீழே பதுங்கி இருப்பதும், மாணவர்கள் வந்தவுடன் வெளிப்படுவதும், களவாகப் பழங்கள் பறித்து உண்பதும், போதகரைக் கண்டால் ஒழிந்து மறைவதும் என தொடரும் இந்த நினைவுகளை எல்லாம் நினைத்துப் பார்க்கும் போது சிரிப்புத்தான் வருகிறது. ஆயிரம் ஆயிரம் வார்த்தைகளில் சொன்னாலும் என் அன்னை இல்லத்திற்கு ஈடேது. மீண்டும் சிறு பிள்ளையாய் மாறி என் அன்னை இல்லத்தில் என் கால்தடங்கள் பதிய வேண்டும் என்பதே என் ஆசை. இந்த இல்லத்தில் படிக்கும் மாணவர்கள் நல்ல பிள்ளைகளாக கல்வி கற்று பல விருட்சங்களாக மேலும் மேலும் வளர வேண்டும். என்னைப் பாதுகாத்து வளர்த்த கருணா நிலையத்திற்கும், நல்வழிப்படுத்திய ஒவ்வொரு அன்னையர்களுக்கும், போதகர்களுக்கும் எனது நன்றிகள்.

செல்வி. பாலசுந்தரம் வினோதா
இசைத்துறை
யாழ். பல்கலைக்கழகம்,யாழ்ப்பாணம்.

# "கருணையின் மழை பொழி தாயே!
# கருணை இல்லத்தின் மீது...."

இயற்கை அனர்த்தமாகிய "சுனாமி" என்னும் ஆழிப்பேரலையின் கொடூரத் தாண்டவத்தின் போது காவுகொள்ளப்பட்ட எம் உறவுகள் மற்றும் உடை, உறையுள், கல்வி அனைத்தையும் முற்றுமுழுதாக இழந்து நிர்க்கதியான நிலையிலே அனாதையாக எமது கல்வியைக் கைவிடுவதா? அல்லது தொடர்வதா? என்று மனக்குழப்பத்தில் இருந்த போது உடுத்துறையிலுள்ள கிறிஸ்தவ ஆலயத்திற்கு போதகராக வந்தவரே மதிப்பிற்குரிய மனோ போதகர் ஆவார். அங்கு அவர் எங்களை சந்தித்தபோது நீங்கள் உங்கள் கல்வியைக் கைவிட வேண்டாம்: உங்களை அரவணைத்து கல்வியைக் கற்றுத் தரத்தான் கருணாநிலையம் இருக்கிறது: அங்கு வாருங்கள் என்று கூறி எங்களை அழைத்துச் சென்றார். எங்கள் வாழ்க்கையின் ஆரம்பத்தின் முதல் அடியை எடுத்து வைக்க உதவியவர் அவரே ஆவார். அவரை என்றும் எங்கள் உள்ளங்கள் மறக்காது.

கருணாநிலையத்தில் அன்பான ஆசான்கள், அருமையான வழிகாட்டல்கள் மறக்குமா எம் உள்ளங்கள். அது மட்டுமா...கல்வி கற்க பாடப் புத்தகங்கள், உடுக்க உடைகள், சாப்பிட விதவிதமான உணவுகள், பொழுது போக்குவதற்கு விளையாட்டுக்கள், உடல் ஆரோக்கியத்திற்கு உடற்பயிற்சிகள், மனது தூய்மையடைய இறை பிரார்த்தனைகள், உறவினர்களை சந்திக்க பெற்றோர் சந்திப்புக்கள் என எண்ணிலடங்காத இன்ப அலைகளோடு உருண்டோடியது கருணாநிலையத்தில் எமது இனிய காலப் பொழுதுகள். இனியும் அந்த பசுமையான காலங்கள் திரும்பி எம் வாழ்வில் வராதா என ஏக்கத்தோடு ஏங்குகிறது எமது உள்ளங்கள்.

என்னதான் பொருளைக் கொட்டிக் கொடுத்தாலும் நாம் கருணாநிலையத்தில் வாழ்ந்த அந்த பொன்னான காலங்கள் இனி திரும்பி வராதா? செய்த புண்ணியத்தின் பயனே ஆகும். இந்த இனிய அழகான வாழ்க்கை கிடைத்ததையிட்டு எமது உள்ளங்கள் இன்ப வெள்ளத்தில் ஆழ்கின்றன.

எமது இல்லத்தின் தாயான ஹட்சின்ஸ் அம்மாவின் எதிர்பார்ப்புக்கள், அவரின் ஆசைகள் அனைத்தும் கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேறி வருகிறது. அம்மாவின் நோக்கங்களை நிறைவேற்ற அவரின் பிள்ளைகள் நாம் ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். இந்த சமூகத்தில் தலை நிமிர்ந்து தனியாக நடக்கக் கூடிய தன்நம்பிக்கையை எமது தாயானவள் தந்துள்ளார். அவரின் நோக்கங்களையும், கருணாநிலையத்தின் வளர்ச்சியையும் மென்மேலும் முன்னெடுத்துச் செல்வதே எமது கடமையாகும்.

செல்வி.இராமசாமி யசோதனா
இசைத்துறை.
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

# கருணா நிலையத்தின் கனிய நினைவுகள்

கருணாநிலையத்தின் கனிய நினைவுகளை
கவிவடிவில் வடிப்பதற்கு
வரிவடிகள் போதவில்லை இருந்தும்
மீட்டிப் பார்க்கின்றேன் என் இல்லத்தின்
மனது மறக்கா நினைவுகளை
இக் கவிதனிலே

என் கல்வி வாழ்வுதனை
இனிதே நிறைவு செய்து
பல்கலை வாசல்படிகளை நான் காண
எனக்கு வழிகாட்டிய
நல் ஆசான் என் கருணாநிலையம்
வாழ்க உம் பணி

சிட்டுக்குருவிகளாய் திக்கெல்லாம்
சிறகடித்த எமை எல்லாம்
ஒரு மரநிழலின் கீழ் ஒன்று சேர்த்து
மானிலத்தின் முதல் கவியாம்
அன்பையும் நட்பையும் எமக்கூட்டி
வாழவைத்த எம் இல்லமே வாழ்க நீ

இங்கிலாந்தின் பிரஜையாய்
இலங்கையில் கைவிடப்பட்ட பெண்களின்
வாழ்வில் நல் விடியல் காண
தன் உதிரத்தை வியர்வைத் துளிகளாக்கி
இன்னல்கள் பல பட்டு
உருவாக்கியவர் ஹட்சின்ஸ் அம்மையார் ஆவார்

கருணாநிலையத்திற்கு 2009ல்
புதுமுக மாணவியாய் உயர்தரக்
கல்வியைக் கற்பதற்காய்
அகதி முகாம் சிறை வாழ்விலிருந்து
விடுபட்டு ஆர்வத்துடன் வந்து சேர்ந்தேன்
என் கருணாநிலையத்திற்கு

ஆரம்பத்தில் ஒருவித பயமும்
அதன் பின்னர் என் மனதில்
அழியா இடம் பிடித்தது
என் வாழ்வில் மறக்க
முடியா பொக்கிஷமாகியது
என் இல்ல நினைவுகள்

தோழியரும் சோதரிகளும் ஒன்றாய்
சிரித்து விளையாடிய வெட்டைவெளிகள்
நான் அறியா ஈகிள் கோபுரமாய்
என் மனதில் இடம்பிடித்து
என் இல்லத்து இனிய
நினைவுகளானது

இல்லத்தின் ஒவ்வொரு மாமர நிழலும்
என் மனதினை இறுகப் புதைத்திருந்த
யுத்தத்தின் கொடூர நினைவுகளை
எடுத்தெறிந்து மனதிற்கு
இதம் அளிக்கும் நல்
உளவியலாளராய் மாறின என் வாழ்வில்

இதனைவிட எம் இல்லத்தின்
ஒவ்வொரு சகோதரிகளின் மனக் காயங்களுக்கும்
எம் இல்லத்தில் கிடைத்த
நட்புக்கள் தவம் செய்யாமல்
கிடைத்த மருந்துகளாயின
எம் இல்ல நண்பிகளின் காயங்களிற்கு

ஒரு சிலர் வீட்டில்
இருந்துவரும் ஒரு
பாசல் சோற்றை
ஒவ்வொரு பிடியாய்
நாம் அனைவரும் பகிர்ந்துண்ட காலங்கள்
எம் வாழ்வில் மீண்டும் வருமா

என் இல்லம் அறுபது அல்ல
இன்னும் பல் ஆயிரம்
ஆண்டுகள் மீள் எழுச்சி
பெற்று புதுப் பொலிவு பெற
உழைப்போம் ஹட்சின்ஸ் அன்னையின்
பிள்ளைகளாய்

செல்வி. கிங்ஸ்லி வில்பிரேட் கவிப்பிரியா
மொழியியல் மற்றும் ஆங்கிலத்துறை
(3ம் வருடம்)
யாழ். பல்கலைக்கழகம்.

# என் விடுதி வாழ்வு.....

உடுத்துறை சேர்ச்சில் போதகர் மனோரூபனால்
போதிக்கப்பட்ட ஆங்கில பாடத்தை
ஆனந்தமாய் பயின்ற வேளை
வந்தது எம் O/L றிசல்ட்டுமே
அதிதரத்தில் சித்தியெய்திய எம்மை
அரவணைக்கும் இல்லமாம் கருணா நிலையத்தில்
உயர்கல்விக்குச் செல்ல உரமளித்த போதகருக்கு எம் நன்றிகள்!

2006ல் புதிதாய் சிறகு முளைத்த சிட்டுக்களாய் வந்த எம்மை
நேசக்கரம் கொண்டு அழைத்தார் நிர்வாகி றெனிக்கா அக்கா
எம்மைப் போல் பல சிட்டுக்கள் சிறகடிக்கக் கண்டு
ஆரம்பத்தில் ரொம்பவே பயந்தாலும்
ஆறுதலான நட்புக்களால் தேறுதல் அடைந்ததால்
கனிஸ்ராவில் தொடர்ந்தோம் உயர்தரத்தை!

சேர்ச் மணியோசை தாலாட்டுடன்
சோர்வையெல்லாம் உதறியெழுந்து
காலை வழிபாட்டை முடித்தவுடன்
பார்வதி அம்மாவின் தித்திப்பான ரீயினால்
சுறுசுறுப்பாய் எமக்குரிய டியூட்டியினை
புறுபுறுப்பாய் முடித்துவிட்டு
தொட்டியடிச் சண்டையில்
காயமேதும் படாமல்
கனசிரத்தையுடன் குளித்து சென்றிடுவோம் பள்ளிக்கு......
சிலவேளை குறைவாய் பலவேளை நிறைவாய்
கிடைத்துவிடும் போசாக்கான உணவு.

நாங்கள் சில காங்ஸ்
எங்களுக்குள் சில கிங்ஸ்
அடாவடிகளுக்கும் அடங்காத திமிர்களுக்கும்
கட்டுப்பாடே இல்லை போல்
அலுப்பறை மாநாட்டை ஆனந்தமாய் தொடங்கிடுவோம்
அது தொடரும் படுக்கை வரை
அதனிடையே சில செல்ல சண்டைகளுமுண்டு.

சத்தம் போட வேண்டாம் என்று சொல்லியே
சத்தெல்லாம் தீர்ந்துவிடும்
எங்கள் கவுஸ் மதர்களுக்கு
இருந்தும் தொடரும் எம்மாநாடு.
இரவில் கள்வன் பயம் இடையிடையே வந்தாலும்
இன்பமாய் உறங்கிடுவோம்
கட்டை ஐயாவின் கலையாத தூக்கத்தால்...

கிறிஸ்மஸ் பண்டிகையால் கிடைத்துவிடும் புது உடுப்பு
விஷப்பின் வருகையால் வரிசையில் ரவுண் சென்று
பட்ஜெட்டுக்குள் பிடித்ததை வாங்கிய இனிய நினைவுகள்.....
பீஸ் டோமற்றி அக்காக்களின் பப்பாசிப் பழங்களினை

பலவிதமான ஆயுதங்களினால் பியத்துண்ட ஞாபகங்கள்....
களவாய்ப் பறித்த மாங்காய்களும்
திராட்சைப் பழங்களும் கூடவே பலாப்பழங்களும்
இன்றும் நாவில் நீரை உற்பவிக்கின்றன....
இப்படி எத்தனையோ ஞாபக அலைகள் திக்குமுக்காடுகின்றன..
இத்தனைக்குள்ளும் கழிந்ததுவே ஓராண்டு
இன்பமாய்...............

சிட்டுக்களாய் இருந்த எம்மை
சீர்குலைக்கத் தொடங்கியது இறுதி யுத்தம்
தொடங்கிற்று எம் சோதனைக்காலம்
காலத்தின் கட்டளையால் உந்தப்பட்டு
விருப்புடனும் வெறுப்புடனும்
விரைந்தனர் களமுனைக்கு எம் நண்பிகள்
அனலிலிட்ட புழுவாய்த் துடித்தோம்... இருந்தும்
சோகத்தை மறைத்துவிட்டு
சோத(தி)னைக்காய் தொடர்ந்தோம் எம் கல்வியை....

குண்டு மழை நடுவினிலும்
குருதி மழை நடுவினிலும்
பதுங்கு குழியில் பதுங்கிப் பதுங்கியே
படித்தோம் உயர்தரத்தை.
கொத்துக் குண்டுகள் ஒரு புறம்
ஆட்லறியின் ஆங்காரம் மறு புறம்
கிபிரின் கிலுகிலுப்பு எப்புறமுமாய் என
உயிரை இழுத்து வைத்திருந்த காலத்திலும்
சேட்டைகளை விடவில்லை எம் தோழிகள்.

பதுங்கு குழிக்குள்ளே ரெயில் விட்ட
பாங்கிகள் மத்தியில்
இரவில் லாம்புடனும் பதுங்குகுழி
தேடிய சேடிகளுமுண்டு.
இதனிடையே எம்மினிய உறவுகளின்
அகால மரணங்களின் அகலாத நினைவுகளில்
கனத்த மனதுடனே நடைப்பிணமாய் வாழ்ந்த போதும்
கைவிடவில்லை எம் சில்லுண்டித்தனங்களை
சின்னச்சின்ன வாக்குவாதங்களால்
டோமற்றிகள் பல மாறினாலும்
மாறவில்லை எம் சேட்டைகள்
பட்டப் பெயர் வைப்பதில் பட்டம் பெற்றனர் எம் நண்பிகள்...

உயர்தரத் தேர்வை நெருங்கி வந்த போது
உயர்தரமாய் பல சலுகைகள்...
அவற்றுள் ஒன்று இரவில் ரீ குடிக்கும் வாய்ப்பு.
ரீ குடித்து விடிய விடிய படிப்போருமுண்டு
விடியும் வரை தூங்குவோருமுண்டு
இப்படியே exam முடிந்தது... ஆனால்
தொடர்ந்தது சோதனைகள்....

இடியென விழுந்த ஆட்லறிக்குள்ளும்
மழையெனப் பொழிந்த கிபிர் குண்டுகள் மத்தியிலும்
தம் இன்னல் பாராது வழிநடத்தினார்
டானியல் பாதர் கூடவே மனோ பாதரும்.
யுத்தம் முடிந்தது.
இடைப்பட்ட காலத்தின் கசப்புகளை மறந்து
மீண்டும் புது வாழ்வு தொடங்கினோம்.
ஹட்சின்ஸ் அம்மாவின் தோன்றாக் கரத்தினால்
இன்று நாம் பட்டதாரிகளானோம்...

நன்றிகள் பலகோடி.....
ஆனாலும் நெருடுகிறது என் மனசாட்சி
நேற்றைய பொழுதுக்கும் இன்றைய பொழுதுக்கும்
மாறுபாடாய்ப் பல............

அன்புள்ள தங்கையரே!
நவநாகரிகத்தில் நீர் உழன்று
கல்வியைத் தொலைக்காதீர்
கருத்துடனே நீர் பயின்று
ஹட்சின்ஸ் அம்மாவின்
எண்ணத்தை வண்ணமாக்குவீர்
உமக்கு நாம் தோள் கொடுப்போம்.........

செல்வி. இராசதுரை நிறோஜினி
பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

# 08.02.2009 அதிகாலை இரண்டு மணி

அதிகாலைப் பொழுது முற்பகல் இரண்டு மணி.
அடுத்த நொடியில் வாழ்வா சாவா
புரியாத புதிராய் புறப்பட்ட கணம்.

ஊனற்ற வயிறு உறக்கமற்ற விழிகள்
நிலைகுலைந்த மனது
நிம்மதியற்று துடிக்கும் இதயம்

அம்மா அப்பா உறவுகள் அனைத்துமே
ஒரு உருவாய் எம்முன்னே
"நான் இருக்கும் வரை உங்களுக்கு எதுவுமே நடக்காது"
தவிக்கின்ற நாவுக்கு தண்ணீரை விட்டது போன்ற உணர்வு

கடவுள் பல வடிவங்களில் தோன்றுவாராம்
முன்னோர்கள் சொன்னார்கள்
எம்முன்னே பாதர் டானியல் வடிவில்

கால்கள் செல்ல மறுக்க
கணங்கள் யுகங்களாய் தெரிய
எறிகணை சத்தம் வழமைக்கு மாறாக
ஒருபடி அதிகமாகவே கேட்க

நாலா பக்கமும் குண்டு மழை பொழிய
சூறாவளியில் அகப்பட்ட துரும்புபோல
மரண வேதனையை வாழ்ந்து கொண்டே உணர்ந்த கணம்.
இருபது வருடங்கள் வாழ்ந்த காலத்தை விட்டு
ஒரு புதிய யுகத்தை நோக்கிய பயணம்
சின்ன சந்தோசம் நிறைய பயம்
எல்லாவற்றையும் தாண்டிய பயணம்

நெருஞ்சி முட்களும் இரும்புக்கம்பிகளும்
பாதணி இல்லாத பாதத்தை தைக்க
வெந்த கால்கள் வெறிகொண்டு நடந்த கணம்

பாதையின் முடிவு
இனம் புரியாத முகங்கள், புரியாத பாசைகள்
நான், ஜசிந்தினி இருவர் மட்டும்
தனித்துப்போன உலகம்

ஓ என்ற மனித அலறல்
காதை பிளக்கும் வெடிகுண்டுச் சத்தம்
எல்லாவற்றையும் தாண்டி எமது கதறல்
பாதர் பாதர் பாதர் பாதர்

தூரத்தில் ஓர் மெல்லிய குரல்
ஜசிந்தினி... ரேவதி...ஜசிந்தினி...ரேவதி...
துடிப்பிழந்து போன இதயம் மீண்டும் துடித்தது.

இதுவரை வாழ்ந்த கணம்
இனிமேல் வாழப்போகும் யுகம்
என்மனதில் என்றுமே அழியாத ஆறாத
உறங்காத அந்த நாள்...
08.02.2009

செல்வி. திருநாவுக்கரசு ரேவதி
வியாபாரமும் தகவல் முறமையும்
ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
கொழும்பு.

# என்னை வளர்த்தெடுத்த என் இல்லம்

24.02.2003 அன்று தான் நான் முதன்முதலாக எனது வீட்டை விட்டு என் உறவுகளை விட்டுப் பிரிந்து ஹட்சின்ஸ் அம்மையார் உருவாக்கி வழி நடாத்திய கருணா நிலையம் என்னும் பெண்கள் இல்லத்திற்கு வந்தேன். முற்றிலுமாக மாறுபட்ட ஓர் சூழல். என்னைப் போன்று அனேக பிள்ளைகள் அங்கே இருந்தார்கள். ஒரு பக்கம் வீட்டை விட்டு வந்து விட்டோம் என்ற கவலை இருந்தாலும் மறுபக்கம் புதிய நண்பர்கள், புதிய பாடசாலை, புதிய சூழல் என்பவற்றால் மகிழ்ந்து போனேன்.

கல்வி என்பது மட்டுமல்ல அனைத்துக் கலைகளையும் கற்றுத் தந்தது கருணா நிலையம் தான். ஏனெனில் எனது பதின்மூன்றாவது வயதில் இல்லத்திற்கு வந்தேன். பத்தொன்பதாவது வயதில் இல்லத்தை விட்டு வெளியேறினேன். நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இருந்த போதும் எனது அந்த ஏழு வருட விடுதி வாழ்க்கையானது எந்தவிதமான கவலைகள் அற்ற சுதந்திரப் பறவை போன்ற வாழ்வைத் தந்தது. எல்லோரும் கூறுவார்கள் விடுதி வாழ்க்கை என்பது கட்டுப்பாடுகள் நிறைந்த கஸ்ரமான வாழ்க்கை என்று ஆனால் நான் வளர்ந்த எனது இல்லமானது அப்படியல்ல. ஏனெனில் கல்வி, கலை, விளையாட்டு, குறும்புத்தனங்கள் நிறைந்த குழப்படிகள் என அனைத்திலுமே சுதந்திரத்தன்மையைத் தந்து வளர கற்றுத் தந்தது.

அத்துடன் நண்பர்கள் வட்டம் இறைவனுக்கே கிடைக்காத வரம் தான். அது எனக்குக் கிடைத்தது. அந்த நட்பு மூச்சுக்குள் அனைவரும் ஒன்றாக சங்கமித்தோம். அக்கணங்களில் இல்லத்தில் செய்த குறும்புத்தனங்களும், குழப்படிகளும் எண்ணிலடங்காதவை. அவை இன்றும் நினைவில் மறக்காதவை. சின்னச் சின்னச் சண்டைகள், செல்லக் கோபங்கள் அடுத்த கணமே உணவிற்கு ஒன்றாய் நிற்கும் தருணங்கள், மாம்பழம், பப்பாப்பழம், பலாப்பழம் எல்லாம் களவாகப் பறித்து உண்டது என்பன மறக்க முடியாத நினைவுகள். குழப்படியும் நிறைவாய் கல்வியும் நிறைவாய்க் கொண்ட நாம் இல்லத்திற்கேற்ற பிள்ளைகளாய் வளர்ந்தோம். அனைத்துக் கவலைகளும் மறந்து சந்தோச வானில் சிறகடித்துப் பறந்த நேரம் தான் வந்தது போர் மேகம். இதனால் நிலை குலைந்து போனது இல்லம். பிரிந்து போனது நட்பு வட்டம். உயிருக்குயிராய் நேசித்த தோழிகளை இழந்தது இந்தப் போரிலே தான். அவை இன்றும் மனதில் ஆறாத ரணங்களாய் இருந்து கொண்டே இருக்கிறது. இருந்த போதும் அவ்வளவு வேதனைக்குள்ளும் சோதனைக்குள்ளும் முகாம் வாழ்க்கையும் இடைவிடாத கல்வியினால் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானேன். போர் முடிவுற்று இடிபாடுகளுக்குள் மீண்டும் இல்லம் புத்துயிர் பெறத் தொடங்கியதும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய எனக்கு துவிச்சக்கர வண்டியும் தொடர்ந்து உயர் கல்வியை முடிப்பதற்கு ஒவ்வொரு மாதமும் நிதியுதவியும் தந்து கல்வியை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு பெரும் உதவியைச் செய்தது எனது இல்லமாகும். அதற்காக எனது ஆயுள் முழுவதும் எனது இல்லத்திற்கு கடமைப்பட்டவளாக இருப்பேன்.

இவ்வாறாக இல்லத்தில் கிடைத்த இறைவனின் வரங்களினால் இன்று பட்டதாரி மாணவியாக வெளியேறியுள்ளேன். எனவே என்னை வளர்த்தெடுத்த என் இல்லத்திற்கு கோடான கோடி நன்றிகள்.

செல்வி. அழகையா ஜெனோபா
தொல்லியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

# என் இஷ்ட தேவதை

வன்னிக்கு வந்த தேவதையே - இம்
மண்ணில் உம் கருணையை
அள்ளித் தந்தாய் - உன்
கருணையின் வடிவமாய் உருவானதே
அழகியதோர் கருணா நிலையம்

ஹட்சின்ஸ் அம்மையாய் வந்த தேவதையே
இவ்வுலகில் அளவிட முடியுமோ
உம் நிகரற்ற பணிதனை
வானுயர்ந்த சேவைகளால் இன்றும் - நீ
உயர்ந்து நிற்கின்றாய் மக்கள் மனங்களில்

இலங்கைக்கு வந்திறங்கிய இங்கிலாந்து தேவதை தான்
இஷ்டத்துடன் செய்திட்ட
சேவைகள் எத்தனை?
பிறர் நலம் எண்ணி தன்னலம் மறந்த
மகத்தான கன்னித் தேவதை நீயம்மா

தள்ளாத வயதினிலும் தளராத
உம் தியாகங்களோ
எம் வாழ்வில் என்றும் ஒளி வீசி நின்றிடும்
காலத்தால் அழியாத உம் பணிகளோ – அழகிய
கருணா நிலையமாய் பிரகாசித்திடும்

சொந்தங்கள் பல இருந்தும் - எனக்கென
சொல்லிக் கொள்ள யாருமின்றி
சோர்ந்து நின்ற வேளைகளில் - அன்புக்
கரம் கொண்டு அணைத்திட்ட
சொர்க்க பூமியாம் இவ்வில்லம்

அழகியதோர் இக் குருவிக் கூட்டில்
அன்புக்கோ பஞ்சமிருக்கவில்லை – ஆனாலும்
அடிபாடுகளும் அரட்டைகளும்
அளவற்ற ஆனந்தங்களும்
குறைந்துதான் போனதுண்டோ?

கல்வியுடன் கலை பயின்றோம்
பாசத்தில் எமை மறந்தோம்
இத்தனை மட்டுமா?
மாணவ மன்றங்களுடன் பாசறைக் கொண்டாட்டங்கள் – என
நிகழ்வுகள் பலவற்றில் வளர்ந்திட்டோம் ஆளுமையாய்
அழகிய இவ்வுலகில்
ஆறுதலும் ஆனந்தமும் ஆலய பரிபாலனங்களும் - என
எத்தனை ரகங்கள் எத்தனை சுகங்கள்
அத்தனை அன்பு காட்டிய – அழகிய
உறவுகளால் ஆனதே எம்மில்லம்

கண்களில் கனவுகளுடனும்
நெஞ்சில் ஏக்கங்களுடனும்
தோல்வியெனும் படிதாண்டி – என்
இலட்சியத்தில் வெற்றி காண
வாய்ப்பினைத் தந்திட்ட – என்
இனிய தேவதையே
கால ஓட்டத்தில் - பல
கலையும் கற்று - இன்று
பார் போற்ற நான் வாழ
பல பாதைகள் காட்டி நின்ற – என்
இஷ்ட தேவதையே ஹட்சின்ஸ் அம்மையே!

திருமதி. ருஷாந்தன் ஆன்றெஷ்மியா
சமூகவியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

## Unforgettable experiences during my stay at Karuna Nilayam

Due to Tsunami disaster of 26th Dec, 2004, I Joined Karuna Nilayam Girl's Home in Kilinochchi on the 09th January, 2015. When I Went to this home with my father, I felt very sad and tension. but the Warden Ms.Mary Renika Warmly Welcome me. After hearing from me about my family story she advised me and guided me to the house mother Ms.Sharmini. Even though I started this home life with sorrow and fear, I became happy of my friendship with the home mates.

I was ready to sit for the G.C.E. O/L examination During that period Nestomalt was served to the girls who studied late in the night. But for unknown reason I was not served with Nestomalt. But I came to know that this is due to my early bedding without studying in the late night. Despite of this practice my friends used to awake me and served tea for me. A-9 High way was closed three months before the G.C.E. O/L examination and war symptoms were seen. Anyhow We sat for the G.C.E. O/L examination in December, 2006 and the results were released in April, 2007 and I was qualified to follow the G.C.E. A/L class. We who were happily enjoyed our home life, had to make bunkers inside our home for our self security. Some of our home mates forcefully joined the civil war. We all felt very sorry and frustrated to hear the untimely deaths of such friends durind the war. Due to frequent bombing and shellattacks we displaced from Kilinochchi to Tharmapuram and from there to Visuvamadu and Udayarkaddu.

Where ever we displaced with hardship we transported our furniture and utensils. In the new displaced locations too we made bunkers ourselves for our security. On 09th February, 2009, after facing bitter war experience from Udayarkaddu, we entered with severe barriers to the Sri lanka Security forces controlled region in Vavuniya. I sat for the G.C.E. (A/L) Examination in Menik Camp (Arunachchalam Welfare Center) and we came to know our results from another welfare center away from three welfare centers In our Karuna Nilayam Girl's Home it is difficult to forget the plucking and eating of papaw fruits at mid night 12.00 o'clock. We made mango sambol too. One day while we climbed the jak fruit tree to pluck jak fruit, Fr.Daniel came. We all were silently hided on the tree and came down after fathers departure from that location. I could not forget this incident.

We used to fight friendly with each other but now we are longing to see our friends who were disappeared, we are worried whether they are alive or died? today I am an old student of Karuna Nilayam.

I wish our Karuna Nilayam for long life to serve the girls in education and discipline.

**Miss. Regipriya- Kingsleyvilpiread**
**4th year,**
**Department of economics,**
**University of Jaffna, Sri Lanka.**

யாழ்ப்பாணத்தில் வடமராட்சி கிழக்கில் அமைந்துள்ள இயற்கையால் சூழப்பட்ட இடமாம் வெற்றிலைக்கேணி எனும் கிராமமே எனது சொந்த ஊராகும். நான் 2004ம் ஆண்டுக் காலப்பகுதியில் கருணா நிலையத்தில் உயர்தரக் கல்வியைப் பயிலுவதற்காக வடமாகாண குருமுதல்வர் வணபிதா நேசகுமார் மற்றும் கருணா நிலைய காப்பாளர் றெனிக்கா ஆகியோரின் அனுமதியுடன் இவ்வில்லத்தில் சேர்ந்து கொண்டேன்.

அக்காலப்பகுதியில் எனக்கு இவ்வில்லத்தில் படிப்பதற்கு கிடைத்த வசதி வாய்புக்களை பயன்படுத்தி சிறப்பான முறையில் கல்வி பயின்றேன். அதனால் எனக்கு 2006ம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கான அனுமதி கிடைத்தது. ஆனால் அக்காலப் போர்ச்சூழல் பல்கலை செல்வதற்கு இடமளிக்கவில்லை. இதனால் யுத்தம் முடிவடைந்ததன் பிற்பாடு 2009ம் ஆண்டு நான் பல்கலைக்கழகத்தில் எனது கல்வியைத் தொடர்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் யாழ் பல்கலைக்கழகத்தில் நான்கு வருடங்கள் பொருளியலை சிறப்பாகக் கற்று 11.08.2014 அன்று பல்கலைக் கல்வியை நிறைவு செய்தேன். இவ்வாறு இன்று எனது எதிர்கால வாழ்வு சிறக்க பல்வேறு வழிகளிலும் உதவிக்கரம் தந்த ஹட்சின்ஸ் அம்மாவினுடைய இல்லத்திற்கு என்றும் நன்றிக் கடன் உடையவளாக இருப்பேன்.

மென்மேலும் இவ்வில்லமானது பல்வேறு வழிகளில் பல்லாண்டு காலம் உயர்ந்து வியாபித்திருக்க என்னுடைய வாழ்த்துக்களும் நல்லாசிகளும் உரித்தாகுக. இன்று அகவை அறுபதில் காலடி எடுத்து வைக்கும் கருணா நிலையம் பற்றிய விடயங்களை பின்வரும் கவிகளில் வடிக்கின்றேன்.

## பிறப்பெடுத்து வாரும் அம்மா எங்கள் ஹட்சின்ஸ் அம்மா

நான் பிறந்தது
எனக்கும் உதவிட என்பதே
இன்றைய தாரக மந்திரம் - இருந்தும்
இங்கிலாந்தில் பிறந்து
Oxford பல்கலையில் கல்வி பயின்று
யாருமே கண்டிராத
வறுமையின் பிடிக்குள்
ஒதுக்கப்பட்ட மக்கள் வாழும்
கீழைத்தேசமதில் கால்பதித்து
இலங்கைத்தீவில் ஒதுக்கப்பட்ட
நம் கிளிநொச்சி மண்ணில்
சேவை புரிந்தீர்கள் அம்மா - இன்று
உம் பண்பான உள்ளம் போல்
தேடுகின்றேன்.......காணவே முடியல
பிறப்பெடுத்து வாரும் அம்மா
எங்கள் ஹட்சின்ஸ் அம்மா

மேலைத்தேச ஆடம்பர
வாழ்க்கை நோக்கி ஓடும்
நம்மவர் வாழ்வில்
நீர் கீழைத்தேசத்தில்
கைவிடப்பட்ட மக்களுக்காய்
உம் இதயக்கதவுகளை
திறந்துவிட்டீர்கள் அம்மா - இன்று
ஏழை என்றால்
ஒதுக்கி விட வேண்டியது தான்
எம்மவர் நிலை
ஏழையைக் கரம் பிடித்து
வாழ்வில் ஒளியேற்றிய
உம் மனம் போல தேடுகின்றேன்

காணவே..... முடியல.......
பிறப்பெடுத்து வாரும் அம்மா
எங்கள் ஹட்சின்ஸ் அம்மா

வாழ்ந்தாலும் மண்ணாசை
இறந்தாலும் மண்ணாசை
பயன் பல
பெற வேண்டிய மண்ணில்
பாரிய இடம் பிடித்து
தூபி நினைவுக்கல் என்று
பேதமைப்படுவது நீண்டு கொண்டே
செல்கிறது.............
ஆனால் நீங்களோ அஸ்தியைக் கூட
இரணைமடு குளநீரில் கரைத்து
உமக்கென
மண்ணில் இடம் பிடிக்காது
வாழ்ந்த உம் எண்ணம் போல
தேடுகின்றேன் காணவே......முடியல
மறு பிறப்பெடுத்து வாரும் அம்மா

இன்று எம்மவர்களின்
சேவையின் அர்த்தம் தேடுகின்றேன்
காணவே......... முடியல
பண்பின் குணம் தேடுகின்றேன்
பண்பாளன் யாருமில்லை
நாமென வாழ்வோரைத் தேடுகின்றேன்
நாமென யாருமில்லை
கூட்டை அமைக்கும் குருவிகளைத்
தேடுகின்றேன்
குரங்குகளைத் தான் காண முடிகிறது
பிறப்பென உண்டென்றால்
இலங்கையில் வந்து பிறந்திடு அம்மா

அம்மா நீங்கள்
உருவாக்கிய இல்லத்துக்கு
இன்று அகவை அறுபது
உம் பிள்ளைகள் நாம்
இன்று பல்துறை வல்லுனராய்
கல்வியிலும் ஒழுக்கத்திலும்
அறிவிலும் உயர்ந்தோங்கி
கருணை இல்லமாம்
கருணா நிலையப் புகழ்
வியாபித்து நிற்கிறது அம்மா

திருமதி. நிரோசன் குரூஸ் ஜெயப்பிரியா
பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

# நினைவுகள்

காலத்தின் கட்டளையால்
கண்களில் நீருடனே
கனவுகள் கேள்வியாக
கதிகலங்கி நின்ற நேரம்
கனிவுடனே எனையேற்று
கல்வி ஒளி தந்த தீபம்....

பல்கலை நான் சென்று
பட்டம் ஒன்று பெற்றிட
பண்போடு எனை வளர்த்த
பவித்திரமான அன்னை.....

இளமையின் துடிப்பினால்
இனிய பல குறும்புகள்
இதயத்தில் இப்போதும்
இனிக்கிறதே நினைக்கையில்

மாங்கனிகள் பிடுங்கி
மறைவாய்த் தின்று
மறுநாள் தண்டனை பெற்றது
மறக்குமா என்றேனும்?

எத்தனை யுகங்கள் நான்
என் வாழ்வில் கடந்தாலும்
என்றும் என் இதயத்தில்
எரியும் தீபமாய்
என் இல்லத்து நினைவுகள்........

செல்வி. மோசேஸ் தாசிஸியஸ் தர்சினி
வணிகத் துறை
தென்கிழக்கு பல்கலைக்கழகம்,
ஒலுவில்.

# காவியம் பேசிடும் ஓர் தாய்மை

இவள் மீது யார் கொண்ட காதல்? எம்
இதயத்தில் வாழ்கிறாள் பேசிடும் ஓவியமாய்......
அன்னைக்கே அடையாளமான காதலால்
தன்னையே உருக்கிவிட்டாள் மெழுகுவர்த்தியாய்

பெண்மையின் இலக்கணமாய் அன்பின் இலக்கியமாய்
உண்மைக்காவியமாய் உயிருள்ள ஓவியமாய் வாழுகிறாள்......
இங்கிலாந்தின் இளவரசியென்ன? இவள்
எங்கள் இதயங்களைத் தாண்டி வாழும் அழகிய தேவதை

இங்கிலாந்து மண்ணில் இவள் ஜனனம் இங்கு
மங்கையாய் மலர்ந்தது இவள் வதனம்.....
கைவிடப்பட்ட பெண்கள் இவளுக்கு கைக்கடிகாரம்
கண்ணீர் விட்டவர்கள் அதன் மணித்துளிகள்......

பசித்தவர்கள் இவளின் பாலூட்டும் குழந்தைகள்
ரசித்திருந்தாள் தமிழ் பண்பாட்டுடன் தன் வாழ்க்கையையும்
அள்ளி அணைத்துக் கொண்டாள் அழகிய காதலுடன்
கள்ளமேதுமில்லாக் குருவிக் கூட்டமொன்றை....

அவள் காதலின் சின்னமாய் செதுக்கிவிட்டாள்....
புகழ் கொண்ட கருணையின் இல்லமொன்றை
நீ ஒரு பெண்ணல்ல அதையும் தாண்டி எம் இதயத்தில்
நீ உயிருள்ள ஓவியமாய் காவியம் பேசிடும் தாய்மை நீ......

திருமதி. தயாபரன் விமலினி
பொருளியல் துறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

## "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
## செய்ந் நன்றி கொன்ற மகற்கு"

காலமெனும் ஏட்டில் பதியப்பட்ட அச்சுக்களாய் எம் கிராமத்திலே பல இன்னல்களை எதிர்கொண்டு சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்திய போதும் உயர் தரத்தை எவ்வாறு எங்கு கற்றுக் கொள்வது என திக்குத் திணறிய வேளையிலே கடவுளின் உருவில் கரம் கொடுத்தது தான் இக் கருணா நிலையம்.

அறிமுகமில்லா முகங்களும் அனுபவமில்லா விடுதி வாழ்க்கையுடனும் உள் நுழைந்த நான் சில நாட்களிலேயே ஆனந்தமாக வாழத் தொடங்கிவிட்டேன். கல்வியிலே ஒரு புறமும் விடுதி குறும்புகளிலே மறு புறமும் ஈடுபட்டு நிலைய பொறுப்பாளரினதும் பராமரிப்பாளர்களினதும் கரிசனையான கண்டிப்பை எதிர்கொண்ட போதும் சற்றும் கலங்காத நம் நட்பு வட்டாரத்துடனும் உறவுகள் கூடி இனிதே வாழ்ந்த காலமது.

எம் விடுதியில் இன்பங்கள் நிலைத்திருந்த வேளையிலும் யுத்த சூழல் எம் வாழ்க்கையில் அச்சத்தை உரமாக்கியது. எம் நிலையத்திற்கு வெளியிலே வசிக்கும் என் போன்றோர் எவ்வளவோ துன்பத்தை எதிர்கொண்டனர். ஆனால் தனிப்பட்ட ரீதியாக யுத்த சூழலில் இருந்து முற்று முழுதாக பாதுகாத்து உயர்தரப் பரீட்சை எழுத வழிகோலி பல்கலைக்கழகத்திற்கு அனுப்பியது இந்தக் கருணா நிலையந்தான்.

கருணா நிலையம் என்போன்ற எத்தனையோ மாணவர்களுக்கு வாழ்வளித்தது என்பது மறுக்க முடியாத உண்மை நான் மூன்று வருட காலமாக இங்கு நின்று கல்வி பயின்றேன். இக் காலம் என் வாழ்வில் கிடைத்த பொக்கிஷமாக கருதுகிறேன்.

இன்று நான் எனது வாழ்வில் ஒரு உன்னத நிலையை அடைவதற்கு காரணமாக இருந்த இவ் நிலையத்திற்கும் இவ் நிலையம் சார்ந்த அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றிகளை கூறுவதோடு என் வாழ்நாள் முழுவதும் நான் கருணா நிலையத்திற்கு கடமைப்பட்டவளாக இருப்பேன் எனக் கூறிக் கொள்வதில் பூரிப்படைகிறேன்.

திருமதி. லோகநாதன் சிறீசுபாசினி
திட்டமிடல் துறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

# இன்றைய கருணா நிலையம்

கருணா நிலையமானது இற்றைக்கு அறுபது ஆண்டுகளை கடந்து விட்ட போதிலும் போரின் பின்னரான இன்றைய கருணாநிலையமானது பௌதீக ரீதியாக பல சேதங்களை எதிர் கொண்டாலும் மீளவும் தன்னைப் புதுப்பித்து தன்னை நாடி வருவோர்க்கெல்லாம் ஆறுதலளித்து குன்றின் மேலிட்ட தீபமாய் ஒளி வீசி பிரகாசிக்கின்றது.

கல்வி கற்கும் சிறார்களுக்கு ஆதரவளித்து அவர்களுக்குத் தேவையான கல்வி வசதிகளை வழங்கி அவர்களின் எதிர்கால வாழ்வின் நலனை நோக்காகக் கொண்டு செயற்படுகிறது. உடல் உள நலன் குன்றிய பெண்களை தன்னகத்தே கொண்டு நிர்க்கதியான அவர்களின் வாழ்வில் நம்பிக்கை ஒளி ஊட்டுகிறது.

தோட்டச் செய்கை மூலமும் பண்ணை வளர்ப்பின் மூலமும் தனக்கான சுய வருமானத்தை பெற்றுக் கொள்கிறது. அத்துடன் திராட்சைப் பயிர்ச் செய்கையும் திராட்சை இரச உற்பத்தியும் மேற்கொள்ளப்படுகிறது.

சமூகச் சிறார்களுக்கு சிறந்த ஒழுக்கத்துடனான கல்வியை வழங்குவதற்காக பாலர் பாடசாலையையும் நடத்தி வருகிறது. அத்துடன் இளையோருக்கான தொழில் வாய்ப்பை பெற்றுக்கொடுக்கும் முகமாக கணிணிப் பயிற்சி நெறியும் தையற் பயிற்சி நெறியும் வழங்கப்படுகிறது.

ஊரின் நடுவே அமைந்திருக்கும் பொய்கையானது  தன்னை நாடி வருவோருக்கு குளிர்ச்சியையும் நன்னீரையும் வழங்கி காப்பது போல கருணா நிலையமானது நகரத்தின் மத்தியில் அமைந்திருந்து தன்னை நாடி வருவோர்க்கு ஆதரவளித்து இறை அன்பின் வழியே கருணை உள்ளத்தோடு வழிநடத்துகிறது.

அறுபது ஆண்டுகளாய் கருணை ஒளி பரப்பும் இக்கருணை இல்லத்தின் கருணை ஒளியானது இன்னும் பல தலைமுறைக்கும் சென்றடைய இறையாசி வேண்டி நிற்போம்.

செல்வி. கிருஸ்ணா விதுஜா
க.பொ.த. (உயர்தரம் - 2015)
உயிரியல் தொழிநுட்பப் பிரிவு

# சமாதான இல்லத்தில் அன்னையின் நினைவுகள்

இந்துமகா சமுத்திரத்தின் முத்தெனப் போற்றப்படும் இலங்கைத் தீவிலே சுமார் அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இருள் சூழ்ந்திருந்த போது கறுப்பான எம் பெண்களின் வாழ்வை வண்ணமாக்க வந்த வெள்ளைத் தூரிகையே எம் தாய் செல்வி மியூரியல் வயலட் ஹட்சின்ஸ் என்றால் அது மிகையல்ல.

அவள் விதையிட்டு வளர்த்து இன்று பெருவிருட்சமாய் கிளை பரப்பி நிற்கும் இவ் இல்லத்தின் இன்னொரு உட்கிளையான சமாதான இல்லத்தின் வெள்ளையுள்ளங்களில் பதிந்த அவளது நினைவுத் தடங்களை கோர்க்க எண்ணி அவ் இல்லச் சகோதரிகளான செல்வி. திரேசா மைக்கல் அன்ரனி, செல்வி சவுதாமணி அழகரட்ணம் ஆகியோரைச் சந்தித்த போது அவர்களிடமிருந்து பெற்ற தகவல்கள் நெஞ்சை நெகிழ வைத்தன.

இங்கிலாந்து தேசத்திலிருந்து வந்திருந்த போதும் அன்னை தந்தை உறவுகளின் ஆதரவை இழந்து நின்ற எங்களை அன்போடு அணைத்து வாழ்வளித்த அந்தத் தாய் ஒரு தமிழ்ப் பெண்ணாகவே எங்களில் ஒருவராக வாழ்ந்தார். தன்னுடைய மழலைத் தமிழால் எங்களின் மனக்காயமாற்றினார். நன்றாகப் பாடினார். அவ்வப்போது கதைகள் பல கூறி எம்மை ஆற்றுப்படுத்தினார். எல்லோருடனும் அன்பாகப் பழகுவதுடன் குழந்தைகளைக் கண்டால் அரவணைத்துப் பராமரிப்பார்.

மனிதர்களை மாத்திரமன்றி குருவிகள், பிராணிகளையும் நேசித்தார். தோட்ட வேலைகள், தையற்பயிற்சிகள், தும்புக் கைத்தொழில் என்பவற்றை எமக்குப் போதித்து வாழ வழி காட்டினார். எங்களிடையே சமத்துவத்தைப் பேணவேண்டும் என்ற நோக்கில் கலாசார விழுமியங்களுக்கமைய எம்மை உடையணியச் செய்து ஒரு தாயாகவே எம்மை வளர்த்த அந்த அன்னை மறைந்தாலும் அவள் எங்களுக்குள்ளே வாழ்கிறாள். என்று தங்கள் இயலாமை கலந்த குரலில் தழுதழுக்க அவர்கள் கூறிய போது என் கண்களும் பனிக்கத் தவறவில்லை.

ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் என்று வாழும் எம் மத்தியிலே எங்கேயோ தோன்றி வளர்ந்த ஒரு பெண் தாய்மையின் சின்னமாய்த் தன்னைத் தாழ்த்தி தன் கனவிலே கருவானதை உருவாக்கி இன்று அறுபதாம் ஆண்டில் காலடி பதிக்கும் நிஜமான இறையன்பின் இல்லமான இவ் இல்லத்தின் ஒவ்வொரு அங்கமும் அவள் கனவுகளின் நனவாய் என்றும் வளமுடன் வாழ்க.

தொகுத்தவர்
செல்வி. மோசேஸ் தாசிஸியஸ் டிலோயினி
உயர்தரம் (2016)
கலைப்பிரிவு

## "In as much as you did for one of the least of these brothers of mine, you did for me"

As the president of the Chundikuli Trust Fund (CTF) UK, I am very happy to send this message to commemorate the 60th Anniversary of the Karuna Nilayam. CTF is a registered charity formed by the UK resident Alumni of St John's and Chundikuli Girls' College in 1984. CTF has been supporting improvement of educational facilities and providing opportunities for the education of those in need, through scholarships and bursaries.

The "Eagle Nest" project was established by CTF in 2009. This project provides long term educational support for the internally displaced children through the support of national and international donors and sponsors. In this regard, CTF has been fortunate in working closely with the Karuna Nilayam since 2009. Karuna Nilayam, along with St. John 's College and Chundikui Girls' College took in many displaced children from the refugee camps in the aftermath of the war and provided them with educational and other facilities, with the help of sponsorships through CTF. We are grateful to Fr. Nesakumar, Rev. Gnanaponrajah and Mrs.D. Thuseetharan for coming forward to help the needy children at a crucial time. We are also thankful to Ms. Renika, the young and energetic warden of Karuna Nilayam, for her care and concern towards the children placed under her care, in spite of being affected by the war herself.



The children, who were living at the IDP camp for six months until they were released, were admitted to Karuna Nilayam, SJC and CGC in late 2009. The children from Kauna Nilayam were housed in a rented house in Jaffna from 2009 until they were able to go back to Kilinochchi. We are very thankful to Fr. Nesakumar and Ms. Renika for undertaking the responsibility of these children ranging from age 3 – 20 years, and also for housing the girls from CGC during weekends when the CGC hostel was closed. The glowing testimonies of the sponsors, who have visited these children from time to time, bear ample witness to how well the children are looked after at Karuna Nilayam. The visitors have always brought back fond memories of their time spent at Karuna Nilayam, where they have been made very welcome by the staff and children. True to the Ms. Hutchins', the founder's vision, Kauna Nilayam has always been a haven for the underprivileged girls and women, and it has been our privilege to be associated with Karuna Nilayam in their service since 2009.







We wish them all success in the future and pray that their selfless service would continue for many more years to come.
May God bless you all.

T. Chrishanthan,
President,
Chundikuli Trust Fund ( CTF )
Registered Charity in England & Wales ® no: 1009205
Email@ tharma.chrish@gmail.com

# என் இல்லம்

கல்விக்கடலில் பயணித்த கப்பலொன்று
கடலில் தடம் புரள முற்பட்ட வேளை
கரம் கொடுத்த எம் கருணை இல்லமாம்
கருணா நிலையமே!

குடலைப் பருவத்தில் கதிராக
நீரின்றி வாடுவேன் என்றிருக்க – வானவர்
நீர் பொழிந்து காப்பாற்றுவது போல் எம்மை
காத்த கருணை இல்லமே.

அன்னை தந்தை அரவணைப்பும்
உடன் பிறந்தோர் ஆறுதலையும் விட்டு
தனிமரமாய் நாம் தவிக்கையிலே

எம்மை அரவணைத்து
கருணை உள்ளத்தோடு கல்வியைப் போதித்தாய்.
கொடூர யுத்தத்தால் இழப்புக்கள் பல ஏற்று
நம்பிக்கை இழந்த நாம் இயல்பு வாழ்வு வாழ
இல்லத்தில் அரவணைத்து நம்பிக்கை
ஒளி ஊட்டினாய்.

உன் தயவால் நாம் பல்கலையும்
பெற்று பல்கலைக்கழகம் சென்றோம்
எங்கு சென்றாலும் உன்
அரவணைப்புக்கு ஈடாகுமா!

செல்வி. செல்வரட்ணம் துர்க்கா
வணிகப் பிரிவு(3ம் வருடம்)
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

# ஆழிப்பெரு வெள்ளத்தில் உறவிழந்து....

ஆழிப்பெரு வெள்ளத்தில் உறவிழந்து
உயிர் துடித்த நேரத்தில் தான்
உயர் கல்விக்காய் வந்து சேர்ந்தேன்
அன்று முதல் கருணா நிலையம் எனக்கு
கருணை இல்லமானது.
கால ஓட்டத்தில் தடுக்கி விழும் மானிடத்தை
கரம் பற்றி மனிதம் வளர்த்திடும்
அமைதி இல்லம் கருணா நிலையம்
மூன்றாண்டு விடுதி வாழ்வின் நினைவுகளோ ஏராளம்
ஒவ்வொரு பொழுதுகளும் பல நினைவுகளால்
நிறைந்தவை........அன்று
வெடிகுண்டு ஓசையோடு மரண ஓலங்கள்
தினம் கேட்க காதுகளை மூடிக் கொண்டு
பாடம் படித்த நாட்களும்
கண்ணீரோடு கவிதைகளாய் போன தோழியரும்
இடப்பெயர்வு இன்னலுக்குள்
தினம் தினம் நாம் திணறியதும்
உயிரைக் கையில் சுமந்த படி அன்று
யுத்தத்தின் சுவடுகளை நாம் கடந்த
இராப் பொழுதில்.........
வெடியோசை மரண ஓலம் கேட்டு கதறி ஓடிய
அந்த நிமிடம் கையில் பிடித்த
உயிரை கை விடாமல் பிடித்திருந்த நிமிடம் வரைக்கும்
புலராத பொழுதோடு மந்தைக் கூட்டமாய்
மனிதக் கூட்டம் அலைமோதிய தருணத்தில்
முக்காடு விலக்காமல் முழங்காலில் தலை பதித்த பொழுதையும்
நெடுநாளாய் விலகாத துன்பியல்
முள் வேலிக்குள்ளும் தொடர்ந்த அகதி முகாம் வாழ்வு
மறக்கவா முடியும் - விடுதி வாழ்வில்
தொலைந்து போன நட்பின் வலிகளும் இன்றும்
என் நினைவுகளோடு
வலி சுமக்கும் நெஞ்சங்களின்
பிணி தீர்க்கும் இல்லத்தின் சேவைகள்
கிளி நகர் எங்கும் தொடர வாழ்த்தி
காரிருள் வேளை எல்லாம் எம்மை
கரம் பிடித்து வழி நடத்திய இறை கரங்களுக்காக
என் நன்றியை சமர்ப்பிக்கின்றேன்.

திருமதி. டொனால்ட் ஜசிந்தினி
திட்டமிடல் துறை
யாழ். பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.

# ஏக்கம்

கர்த்தரே காப்பாற்றும்
எப்போது உன்னிடத்தில்
நான் வந்து இளைப்பாறுவேன்
எப்போது என் இதயம்
கலங்காதிருக்க வழி செய்வேன்
இறைஞ்சுகிறேன் இறைவா
ஆறுதல் தருவாயா
உன் கருணை இல்லத்தில்....

தாயின்றி தந்தையின்றி
உற்றாரின்றி உறவின்றி
இருந்தோம் நாம் அன்று
சீராட்டி பாராட்டி
பார் போற்றும் மனிதராக
ஆக்கினாய் இன்று
வியக்கின்றோம் நாம்
உன் கருணை கண்டு

பார்த்திருந்தோம்
காத்திருந்தோம்
பசித்திருந்தோம்
துயருற்றிருந்தோம்

குருதியில் கிடந்தோம்
உடுப்புக்கள் இழந்தும்
உறுதியாய் விம்மினோம்
விசும்பினோம் உன் இல்லத்தில்

நம்பிக்கை இழந்த எமக்கு
தும்பிக்கை நம்பிக்கை நீ கொடுத்தாய்
ஆறுதல் என்ற வார்த்தைக்கு அருகதையாய்
நீ தந்த ஆறுதல் வார்த்தை எங்கே
உன் நம்பிக்கையின் விளைவால்
நாம் பல்கலையும் பெற்றோம்
எங்கு சென்றாலும் உன்
அரவணைப்புக்கு ஈடாகுமா!!!

செல்வராசா அனுஷா
இசைத்துறை
(2ம் வருடம்)
கிழக்கு பல்கலைக்கழகம்.

# என் வாழ்வின் ஏணிப்படிகள்

வையகம் தனில் - நான்
பிறந்த நாள் முதல்
பிரிவையும் பிரியத்தையும்
பிரியவே நேரிட்டது

உற்ற உறவுகள் தடுமாற
பிரிந்த வலிதனில் - பெரிதாக
யுத்தமெனும் முழக்கத்தில்
எத்தனையோ இழந்தவர்களில்
என்பெயரும் இடம்பெற்றதே

தட்டுத்தடுமாறி நீர்மேல் இலைபோல
சில கரங்கள் உதவிட என் வாழ்வில்
மாற்றம் தந்தது கருணாலய ஒளிதீபம்
அன்று தொட்டு பேறு:று பேறெண்றெண்ணி
நானும் காலத்திற்கு பாதைவிட்டு
உதவிய கரம் கொண்டு - புதிய
பயணத்தை தொடர்கின்றேன்

என் செவிலித் தாயன்னை இன்று
தன் அறப்பணியில் அறுபது காண்கின்றாள்
வாழ்த்துகிறேன் அம்மையாரை
நன்றியுரைக்கின்றேன் என் மனமார
வாழ்க கருணாலயம் வளர்க அறப்பணி.

செல்வி.க.விஜித்தா
பது/ரொசட் தமிழ் வித்தியாலயம்
பதுளை

# மியூரியல் வயலட் ஹட்சின்ஸ் அம்மா உம்பணி இறைபணி:

- என் நினைவில் கருணாநிலையம்.....

எனக்கு ஐந்து அல்லது ஆறு வயது இருக்குமென நினைக்கிறேன் (1964/65)
கற்பாறை மீது கட்டினவன் புத்தியுள்ளவன் (3)
பெருமழை பெய்தது
பெருமழை பெய்து நீர் உயர்ந்தது (3)
அந்த வீடோ நிலைத்து நின்றது.

என்றபாடல் வரிகளை பரி.மத்திய ஆலய முன்றலிலே இரவு நேரம் பெற்றோல்மக்ஸ் வெளிச்சத்தில் நின்று சைகையோடு பாடி எங்களை மகிழ்வித்தார் ஒரு வெள்ளை நிற பெண். அன்றுதான் அவரைக் கண்டேன். அவர்தான் மியூரியல் ஹட்சின்ஸ் அம்மா என்றார்கள். எனது தாயார் அவரிடம் கோப்பாயில் கல்வி கற்றது பற்றி எமக்கு கூறிய வார்த்தைகள் அம்மையாரை நன்றியுடன் நினைவுகூர வைக்கிறது. ஏழுவயது இருக்குமெனநினைக்கிறேன். எனது தந்தையாரோடு கிளிநொச்சி கருணா நிலையத்திற்குச் சென்று ஹட்சின்ஸ் அம்மாவைச் சந்தித்தது ஞாபகம் வருகிறது. கடவுளிடம் அன்பு கூருபவர்கள் பிறரிடமும் அன்பு கூரவேண்டும் என்ற இறைகட்டளையை தலைமேற் கொண்டுதன் ஓய்வு காலத்தில் தமிழ்ப் பெண்களின் வாழ்க்கைத் தரம் உயர, அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி பூத்துக்குலுங்க பெண்களுக்கென ஓர் புதிய அத்தியாயம் படைக்க தன்னை அர்ப்பணித்தார் மியூரியல் ஹட்சின்ஸ் அம்மையார்.

அவர் அர்ப்பணிப்பில் உருவானதுதான் "கருணா நிலையம்" என்கின்ற பெண்கள் இல்லம். வளம் கொழிக்கும் நாடென எம்மவர் ஓடி தஞ்சமடையும் இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், தான் மிஷனரிப் பணிபுரிந்த இந்நாடே இறைவன் தனக்களித்த பிறப்பிடமாகத் தேர்ந்தெடுத்துதன் அர்ப்பணிப்பின் பணியில் அர்ப்பணமானவர். இறைபற்றில், விசுவாசத்தில், நம்பிக்கையில் வளர்ந்த அம்மா, தனது நேரங்களை ஜெபத்திலும், இறைவார்த்தையிலும் செலவிட்டு, இறைவனை எம் தமிழ் கலாசாரத்தில் கண்டு தம்பணி தொடரலானார். அம்மாவின் கைவண்ணத்தில் வளர்ந்த பெண்கள் இல்லம் ஆண்களாகிய எமக்கும் ஆறுதல் தந்தது என்பதுதான் கருணா நிலையத்தின் வரலாற்று உண்மை.

1987ல் எனது தந்தையார் இந்திய இராணுவத்தால் சுடப்பட்டு மரணமடைந்தார் எனச்செய்தி கேட்டு தந்தையார் உடலைக்கூட காணமுடியாதவனாகி முல்லைத்தீவில் இருந்து கொழும்பு திரும்பும் வழியில் மாமரத்தின் கீழ் அருட்பணி ஐசக் செல்வரட்ணம் போதகரின் மடியில் கத்தி ஓவென்று அழும்போது ஆறுதல் தந்தது இக் கருணா நிலையமே.

1988இல் தாயாருடன் கொழும்பில் இருந்து யாழ்நோக்கி வருகையிலே இந்திய இராணுவ நடவடிக்கைகளால் பயணம் கிளிநொச்சியில் தடைப்பட அன்றும் புகலிடம் தந்தது கருணா நிலையமே.

1990, 19991, 1992களில் பாதைப் போக்குவரத்துகள் தடைப்பட்டகாலம் பாடசாலை விடுமுறையில் யாழில் இருந்து முல்லைத்தீவிற்கும் விடுமுறை முடிய முல்லைத்தீவில் இருந்து யாழிற்கும் துவிச்சக்கர வண்டியில் எனது மருமக்களோடு பயணித்த வேளைகளில் எல்லாம் ஓர் இரவு தங்கி இளைப்பாற கருணை உள்ளம் கொண்டவள் தான் கருணா நிலையம்.

மறக்க முடியா மீண்டும் ஓர் ஞாபகம். 1995 கார்த்திகை மாதம் 14ம் திகதி நள்ளிரவு நேரம் கருணா நிலையம் கேற் ஏறி, காவலாளியை எழுப்பி கதவைத் திறப்பித்து, எம்மோடு பயணித்த சகோதர சகோதரிகளை, "அகதிகள்" எனும் நாமம் தரிக்கப்பட்ட நமக்கு புகலிடம் தந்த இந்த கருணா நிலையத்தை மறக்கமுடியுமா? 1996இல் மரங்களின் கீழ் சென்.ஜோண்ஸ் கல்லூரியின் வகுப்பறைகளுமாக பிரதான மண்டபமே எங்கள் இருப்பிடமும் படுக்கை அறையுமாக மாறியது. தான் வளர்த்த யாழ் மக்கள் ஒருநாள் தன் அன்புக்கரம் நாடிஓடி வருவார்கள் என தீர்க்கதரிசியாக ஆயத்தப்படுத்திய இடம்போல் நன்றியோடு எமக்குத் தோன்றினார் எங்கள் அம்மா.

என் நன்றிக்கடன் நான் செலுத்த இறைவன் தந்தஓர் சந்தர்ப்பம். கருணா நிலையம் ஜெயபுரத்தில் தஞ்சமடைந்த வேளை 1996/1997ல் மாதமொருமுறை சென்று ஊழியரைப், பிள்ளைகளை ஊக்கப்படுத்தி

நற்கருணை வழிபாட்டை நடாத்தி இறையாசிபெற, இறைவன் தந்த வழி நடத்தல்களை நன்றியோடு நினைக்கின்றேன். மீண்டும் மிகப் பெரிய யுத்தம் நடந்த பூமி. கட்டிட இடிபாடுகளுக்குள்ளே வெறிச்சோடிய கருணா நிலைய வளாகம் 2009 மாபெரும் இடப்பெயர்வின் பின் 2010 பிற்பகுதியில் மக்கள் மீளகுடியேற ஆரம்பித்தவேளை இடப்பெயர்வின் பின் முதலாம் திருப்பலி, நத்தார் வழிபாட்டை நிறைவேற்றி, துயருற்ற மக்களுக்கு துயருற்று வெற்றி பெற்ற வேந்தன் எம் இயேசுவின் ஆறுதலைக் கண்டுகொண்டேன்.

தன்பணி மேலும் தொடர இறைவன் அடியாரை ஆயத்தப்படுத்தியுள்ளார் என்ற தன்னிறைவோடு தன்னுயிரை பங்குனி 1996இல் இறைவனிடம் அர்ப்பணித்தார் மியூரியல் வயலட் ஹட்சின்ஸ். தான் உயிரோடு இருந்தபோது மக்கள் எவ்வாறு பயன்பெற உழைத்தாரோ தான் இறந்த பின்பும் கிளிநொச்சி வாழ் மக்கள் பயன்பெற வேண்டும் என்கின்ற தியாகத்தில் தன் உடலின் சாம்பலை இரணைமடுக் குளத்தில் கரைத்து நின்றார் எம்மியூரியல் அம்மா. அவர் உடலின் நுயே அழியாது இரணைமடுக் குளத்திலும், நீர் பாயும் நெல் வயல்களிலும், நாம் உண்ணும் சோற்றிலும் கலந்து அழியா வாழ்வாக எம் முன்னே நிற்கின்றார்.

அம்மா உம் பணி இறைபணி. உம் பணிதொடர 1997ல் இறைவன் எனக்குத் தந்த பெண் குழந்தைக்கு மியூரியல் என உம் பெயரைச் சூட்டி உங்களையே நாள் தோறும் நினைக்கின்றோம் எம் இறைவாழ்வில்.

அருட்பணி. N.J.ஞானப்பொன்ராஜா
அதிபர்
சென்.ஜோன்ஸ் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

# கருணா நிலையமும் நானும் ஒன்றாக இருப்பதாக உணர்கின்றேன்...

"உங்களில் மிகச்சிறியோராகிய சகோதர சகோதரிகளுக்கு நீங்கள் எதையெல்லாம் செய்தீர்களோ! அதை எனக்கே செய்தீர்கள்"

1958இல் இலங்கையில் நடைபெற்ற முதலாவது வன்செயலில் பிறந்து. வாழ்ந்த மண்ணைவிட்டு நிர்க்கதியாக நாம் அறியாத பிரதேசமாகிய தர்மபுரம் முகாமில் அரசாங்கத்தினூடாகத் தஞ்சமடைந்தோம்.

செல்வி மியூரியல் வயலட் ஹட்சின்ஸ் என்ற தேவதை எமைத்தேடிவந்த அந்தநாளை நினைவு கூறுகின்றேன். எங்களிடம் கேட்ட வினா "இங்கே யாராவது கிறிஸ்தவர்கள் உள்ளார்களா?" என்பதாகும்.அன்றைய தினமே என் பெற்றோர் தமக்குள் கலந்தாலோசித்து என்னையும் இரண்டு சகோதரர்களையும் அவருடன் அனுப்பிவைத்தனர்.

ஹட்சின்ஸ் அம்மையாரின் சிந்தனையில் அவர் கருணா நிலையம் அமைத்ததன் நோக்கம் சமுதாயத்தில் பாதிப்படைந்த பெண்களை மீட்டெடுத்து சமுதாயத்தில் நற்பிரஜைகளாக வாழவைத்த பெருமை அவருக்குரியது. அதையே அவர் தன் நோக்கமாகக் கொண்டிருந்தபோதும் 1958இல் வன்செயல் அவரை வேறொரு கோணத்தில் சிந்திக்கவைத்தது. சிதறடிக்கப்பட்ட கிறிஸ்தவ மந்தையை சேர்க்கவேண்டும் என்ற எண்ணம் அவரது உள்ளத்தில் தோன்றியிருக்க வேண்டும் என்று எண்ணுகின்றேன். அக்காலங்கள் பொன்னான காலங்கள் என்றுதான் கூறவேண்டும்.

"வருத்தப்பட்டு பாரங்கள் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லோரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்ற வாக்கியம் கருணாநிலைய நுழைவாயிலில் எப்போதும் பதிக்கப்பட்டிருந்தது. வந்தவர்கள் நம்பிக்கையோடு வந்தனர். காரணம் அன்னையில் இருந்த அசைக்க முடியாத நம்பிக்கை. அம்மா உருவாக்கிய இந்த நிலையத்தில் பல அபலைகள் தங்களுடைய சீரழிந்த வாழ்க்கையை சிறப்பாக மாற்றி இன்று கூட குடும்பமாக வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் சிறப்பாக வாழ்ந்து வருகின்றனர். இதற்கு அம்மாவின் பணியே காரணம்.

நாம் சிறுவர்களாக இருக்கும்போது எனது தந்தை குடும்பமாகக் கருணா நிலையத்தில் இணைந்தார். எமக்கு வயது அதிகரிக்க எமக்கெனத் தனியான இருப்பிடம் அமைக்கப்பட்டு, கருணா நிலைய வளர்ச்சிக்கு நாம் அனைவரும் பாடுபட்டு உதவினோம். அன்னையின் அசைக்க முடியாத நம்பிக்கையும், செபமும் இல்லத்தின் வளர்ச்சிக்கு காரணமாகியது. அம்மாவிடம் மற்றவர் குற்றம் காணமுடியாத சிறந்த பண்புகள் காணப்பட்டன. அவை கடவுளால் அருளப்பட்ட வரம் என்றுதான் கூறவேண்டும்.

இவ்இல்லத்தில் வளர்ந்தவன், வளர்த்தெடுக்கப்பட்டவன் என்ற அடிப்படையில் நான் பெருமையடைகின்றேன். இன்றுவரை இல்லமானது வளர்ச்சி அடைய வேண்டும் என்பதில் அக்கறை கொண்டு இதனை நேசித்து வருகின்றேன். அன்னையின் வளர்ப்பு மகன்கள் றொபேட் ஜே.றொக்சன் மட்டக்களப்பு, மகேந்திரன், மகாலிங்கம் யாழ்ப்பாணம், சுவாமிநாதன் செம்பியன்பற்று, நான் மற்றும் என்னுடன் இரு சகோதரர்களான சாமுவேல், ராஜதாஸ், ஆமோஸ் தர்மபுரம். பிற்பட்ட காலங்களில் இராஜதுரை, சத்தியராஜா ஆகியோருடன் இவ் இல்லத்தில் ஆண்கள் குழுவாக வாழ்ந்தோம்.

அன்னை ஹட்சின்ஸ் எமக்கு வருடாவருடம் கிறிஸ்மஸ் மற்றும் உயிர்ப்பு விழா நாடகங்களை எழுதி நடிப்பித்து அதனை ஒரு விழாவாகச் செய்த பெருமை அவருக்குரியது. அக்காலங்களில் இங்கு மின்சாரம் இருக்கவில்லை. அரிக்கன் விளக்கு ஒளியில் கலைகளை அரங்கேற்ற அவர் எடுத்த முயற்சி இன்றும் பாராட்டத்தக்கது.

கிளிநொச்சி வரலாற்றில் சிறுகைத்தொழில்கள் சுய வேலைவாய்ப்பு பயிற்சிகள் இல்லாதிருந்த காலங்களில் சமூகத்தில் வேண்டாதவர்களாய் கருதப்பட்ட வாய்பேசமுடியாதோர், கண்பார்வையற்றோர், நல்ல சிந்தனைகளுள்ள, வாழ்வைத் தொலைத்த பேதையர் ஆகியோரைக் கொண்டு கால்மிதி, தையல், தும்புத்தடி போன்றவற்றைச் செய்வித்து அதனை சுமந்து தனக்குத் தெரிந்த உடுவில், சுண்டுக்குளி,

மருதனார்மடம், வேம்படி பாடசாலைகளுக்கு விற்று அதனைக் கொண்டு இந்த நிலையத்தை நடாத்திய பெருமை அம்மையாருக்கு உண்டு.

எனக்குத் தெரிந்த அந்தக்காலங்களில் ரூபா.15 முதல் ரூபா.20 வரை இருந்ததால் இந்த இல்லத்தை நடத்த போதுமானதாய் இருந்தது. ஒருமுறை ஒரு வெள்ளிக்கிழமை அன்று சனிக்கிழமை சந்தைக்குச் செல்லப் பணம் இல்லாத சூழமைவில் கிளிநொச்சியில் எங்குமே சென்று வாங்கமுடியாத நிலையில் அம்மையார் கதவைமூடி முழந்தாள்படியிட்டு கடவுளிடம் கேட்டதற்கு அவளுக்குப் பதில் கிடைத்த விதம் இன்று எமக்கு பெருமிதமாய் உள்ளது. மறுநாள் காலையில் முல்லைத்தீவிலிருந்து பொன்னையா மாஸ்ரர் கோயில் வாயிலில் ½ மூட்டை அரிசி, சுவையான பலாப்பழம், தேங்காய்கள், வாழைக்குலை முதலானவற்றை வைத்துவிட்டுச் சென்றுவிட்டார். அன்று முதல் இன்றுவரை 03 வேளையும் ஆலயமணி அடிப்பது வழமையானது. அந்தப் பொருட்களைக் கண்டதும் அம்மையார் அளவற்ற மகிழ்ச்சியோடு சொன்ன வார்த்தை "கடவுள் எனக்கு பதிலளித்தார்" என்ற வார்த்தைகள் இன்றும் எனக்குப் பெருமைப்பட வைக்கின்றன.

அம்மாவின் எளிய நடையும் பெருமிதமில்லா வாழ்க்கையும் நினைக்கும் பொழுது இன்றுகூட என்னைச் சிந்திக்கத் தூண்டுகின்றது. என் வாழ்வில் அண்ணளவாக 16 ஆண்டுகள் இந்நிலையத்தில் வாழ்ந்திருக்கின்றேன். இன்று நான் கௌரவமாக வாழ்கிறேன் என்றால் அப்பெருமை அம்மாவுக்குரியது அவரே என்னைப் படிப்பித்தார். அந்தக் கல்விக்குரிய பணமாக St.John's கல்லூரிக்கு ஒரு தவணை 400/= வீதம் செலவு செய்தார் அவரது நோக்கத்தை இன்று என்னால் நிறைவேற்றமுடியாவிட்டாலும்கூட மற்றவர்களுக்குப் பணி செய்து வாழ்வதில் நான் பெருமைப்படுகின்றேன். ஒன்றுமில்லாத கிளிநொச்சியில் சிறுவர்களாகிய எங்களை அழைத்து Sunday walking ஒன்று செல்வோம். கருணாநிலைய வாயிலில் புறப்பட்டு வடக்குப் புறமாகப் புறப்பட்டு டிப்போ சந்தியைச் சுற்றி மீண்டும் கருணாநிலையம் வருவோம். இந்த சொற்ப தூரத்தை நடக்க எமக்கு இரண்டு மணித்தியாலங்கள் தேவைப்படும். காரணம் நாம் செல்வது காட்டுப்பிரதேசம். பல கனிகளை பிடுங்கி உண்போம். சூரைப்பழம், வீரைப்பழம், பாலைப்பழம், விளாத்திப்பழம், நாவற்பழம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். அந்தச் சுற்றுலா எம்மை எவ்வளவு சந்தோசப்படுத்தியது என்பதை நினைக்கும் போது எமக்குப் பெருமையாக இருக்கும். அதே நேரம் இன்று எந்தப்பெற்றோருக்கும் இத்தகைய சிந்தனை இல்லாமையை நினைக்கும் போது கவலையளிக்கிறது.

இதனைவிட கிறிஸ்மஸ் இன்னிசை உலாக்களுக்கு நான் செல்வது வழக்கம். கிளிநொச்சியில் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில கிறிஸ்தவ குடும்பங்களே இருந்தன. இன்று நாம் வருவோம் என்று அம்மா போய் அவர்களுக்குக் கூறிவிட்டு வருவார். அதில் எமக்கு இன்றுவரை நினைவிருப்போர் திருமதி.யோகலிங்கம், லக்கி ஸ்ரோர்ஸ் புடைவையகம். அன்ரஸன், அருளப்பு ஆகியோரே. இது எமக்கு மகிழ்ச்சியாகவும் பெருமிதமாகவும் இருக்கும். இதேபோல் உயிர்த்த ஞாயிறு அதிகாலை 04 மணிக்கு மெழுகுவர்த்திகள் ஏந்திய வண்ணம் உயிர்ப்பின் வல்லமையான பாடுகளுடன் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் வரை சென்று வந்தோம். அதேபோல் குருத்தோலை ஞாயிறும் குருத்தோலைகள் ஏந்தி பொலிஸ் நிலையம் வரை சென்று வருவோம். கருணா நிலையத்தில் தன் கிறிஸ்தவ கடமைகளைப் பெருமிதத்தோடு செய்த விதம் எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது. பெந்தகோஸ்தே நாட்களில் இங்கிருந்து நாங்கள் அம்மாவுடன் ஆச்சிரமம் சென்று மூன்று நாட்கள் நடைபெறும் அந்த விழாவிலே எமது வாலிப வயதில் புழுங்கலரிசி, உழுத்தங்கஞ்சியை மறக்கமுடியாது. இன்று அப்படியில்லையே என்று அம்மாவை நினைத்து ஏங்குகின்றோம்.

அம்மா கர்நாடக சங்கீதத்தில் மிகத் தேர்ச்சி பெற்றவர். எப்படியாவது திரு.திருமதி ஆனந்தன் தம்பதியினரை வரவழைத்து எமக்குச் சந்தர்ப்பங்களை உருவாக்கித் தந்தார். அவளது சேவையில் நான் ஒரு தூசு. அவருடைய இறுதிக் காலங்களில் அவர் வாழ்ந்தபோது நானும் இருந்தேன். மிக மோசமான அந்தக்காலங்களில் அவர் எம்மைவிட்டுப் பிரிந்து செல்ல நேரிட்டது. அவளது உடலை சுமந்து செல்ல எமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும்பேறாகக் கருதுகின்றேன். இன்றுகூட அம்மாவுடைய ஆலய ஓசைமணி என் வீட்டுக்குக் கேட்கக் கூடிய அளவில் வாழ்கின்றேன். ஆகவே நகமும் சதையும் போல கருணா நிலையமும் நானும் ஒன்றாக இருப்பதாக உணர்கின்றேன். வாழ்க அவருடைய சேவைகள் வளர்க கருணா நிலையம்.

திரு.சாமுவேல் வேதமாணிக்கம் ஜேம்ஸ்
இல.477, திருநகர்,
கிளிநொச்சி.

## Incarnated Humanization of a Missionary: Ms. M. V. Hutchins in Wanni, Sri Lanka

### Introduction:

During the missionary era many missionaries both men and women, lay and clergy traveled to new locations feeling that they are called by God to engage in evangelization. Many of them came to these lands once colonized by super powers in the world with a colonial mentality. However, there were some who thought differently. They felt that while being faithful to God who has called them, they should take a new approach. They took the incarnational model. One such person who adopted the incaranational model visited Sri Lanka and spent a great deal of her life in Wanni. In this paper we examine her model that is relevant and challenges us in the 21st cent. Her model as we find is the role of facilitation of the people towards upliftment of the underprivileged in society. She engaged in this creative, meaningful and powerful mission with trust in God and the powerless humanity. This missionary is late Ms. Muriel Violet Hutchins who spent years of dedicated service in Kilinochchi, in Wanni, Sri Lanka. Her life and ministry is still adored by many who have a memory of her dedicated service. Interviews are used to write this paper. It shows the livid memory people have of Ms. Hutchins. That is the witness she had left for the people to cherish even to date.

### Humanization through education:

Ms. M. V. Hutchins arrived as a missionary in Sri Lanka (then known as Ceylon) and she was sent by the C M S and engaged in teaching in the following educational institutions in Sri Lanka:

**01.** Ladies College, Colombo
**02.** Chundikully Girls' College, Jaffna
**03.** Kopay Vernacular Boarding School & Orphanage (Bilingual Girls' Boarding School & Tamils Mixed School)
**04.** Kopay Christian College
**05.** Uduvil Women's Training College
**06.** Nallur United Christian Tamil Training College

Her life and work reveals that she was much more than a teacher who didn't confine her ministry to teaching syllabi. Through her interaction in and outside the class room, she facilitated the children to experience humanness with values such as equality, fellowship and simplicity. It is worth to note that when she taught Tamil in Kaithady Mission School on Sunday evenings she had shared sweets among children and teachers soon after classes and enabled them to have a time of fellowship that led to establishing relationships crossing/ transcending all barriers which existed in the community. Her life style attracted many students in Kopay Christian College who came from Uduthurai, Aaliyavalai, Thalayady, Palai, Chavakachcheri, Kaithady and Navatuli. She disapproved the caste discrimination and treated all the same. She had staged a drama to raise awareness among the people of the ill-effects of caste system. After serving almost seven years in schools she retired in 1954.

### Humanization through living:

Ms. Hutchins felt that the women in general and particularly mentally retired and abused along with poor (women, men and children) were looked down in society and they have lost humanness. She facilitated programmes to create space for them and for them to have a life with humanness. She opted to serve this underprivileged segment in society; impoverished, homeless, orphans, neglected, blind, mentally retarded, young girls and mothers that were abused and exploited.

She set up a place of service and care to these poorest of the poor called 'Karuna Nilayam' (Mercy Seat) in 1955 at Kilinochchi. It began with 15 young girls and a helper Bavani Acca. The capital for this home came from her pension. A caring simple home gave hope to the inmates at this home. They had a very simple life with hurricane lanterns to light up the place in the nights.

Rt. Revd. Archibald Graham Campbell, the Bishop of Colombo and Ven. John Navaratnam, the Archdeacon of Jaffna encouraged and supported Ms. Hutchins. She had received the support for the Jaffna Christian Missionary Society.

The community life of Karuna Nilayam inspired all to struggle and come up in life. The young girls attended school; the young women were facilitated to engage in needle work, knitting, weaving, growing vegetables and in animal husbandry. Further they were guided to keep basic accounts. The produce of Karuna Nilayam community namely broom sticks, pillow cases etc. were taken to Kilinochchi, Jaffna and other places for sale/ marketing. Karuna Nilayam gradually developed.

Karuna Nilayam has a Chapel with indigenous architecture. The Chapel is at the very entrance. Further a workshop, a weaving centre, a hostel, a play ground, farm, pipe bourn water and electricity is available now. That is the growth and development of the place. Every inmate is motivated to use the resources with responsibility. These values were taught by the words and actions of Ms. Hutchins. The facilities really helped the community to come up in life beyond any doubt.

There is no doubt that she struggled to encounter the financial crisis and hardships in the maintenance of Karuna Nilayam. Financial crisis was one of such. Once Ms. Christine, the Director of **Kindernothilfe** (KNH), Germany was happy to assist but requested to keep students and sent elders out. Ms. Hutchins' commitment for each and all in the community was such that she did not agree to loose any member of the Karuna Nilayam community in order to get funds. However, the KNH sponsored the construction of a hall and that was opened/ dedicated on June 29, 1980.

Like all over Wanni, Karuna Nilayam also had to face the war and displacements constantly. Day to day life in Karuna Nilayam was always an ongoing struggle as well as a refreshing experience to Ms. Hutchins and everyone in the community who were in and out.

The following stories testify & reveal a glimpse of the story:

**01.** Life in the beginning of Karuna Nilayam Community:

One night in 1955, as usual Ms. Hutchins and children with Ms. Bavani acca were sleeping. There was a thundering noise which awoke them in midnight. They listened to and observed elephants in their yard. They hurriedly lit a fire and made big sound to scare and scatter the elephants. Elephants went away. Then they went to sleep.

**02.** Service of Installation of Ms. Hutchins:

On October 29, 1955 there was a service of installation held in Karuna Nilayam. On that occasion Archdeacon Ven. J A R Navratnam and CMS representative Revd. R C Luckraft officiated and installed Ms Hutchins as a missionary to Kilinochchi. Since many Christians from Jaffna presented they congratulated, greeted and wished her and the community with the assurance of their prayers. Ms. Hutchins, Mrs. Harriet Ponniah, a companion and gardener officially went in to residence.

**03.** Motherhood:

One day there was a misunderstanding and a quarrel between the matron and a girl. That girl ran out from the premises to the main road (A-9) and refused to return. Ms. Hutchins tried her best to persuade her to get back. But girl did not get back and continued standing outside Karuna Nilayam. In night around 10.30 p.m., that girl came to the St. Paul's Church which is at the very entrance of Karuna Nilayam and slept there. Ms. Hutchins spent whole night with this young girl as a mother.

**04.** Acceptance of Unwanted:

One day a pregnant lady came to the premises of Karuna Nilayam. She was very thin and looked sick with frustration. She seemed to be worried about her future. Ms. Hutchins noticed her and came very closer and said 'Acca, you returned to deliver baby' with a smile. That mother who came with lot of worries was grateful to Ms. Hutchins.

**05.** Decisiveness:

One day a man came to Ms. Hutchins and said that he was on his way to Jaffna from Hill country to get a job and he lost his purse, suitcase and everything. He pleaded that he will be happy if she could support him in that situation of crisis to return home. She felt very sorry for that unfortunate situation and offered money, food, clothes and a prayer for his betterment with compassion. Later she learnt that he was a fraud who deceived her. Ms. Hutchins loudly said 'he has not deceived me but deceived God'.

**06.** Retirement:

Ms. Hutchins handed over the administration and retired due to her old age, but continued to reside in Karuna Nilayam. She got sick due to cancer and was in a wheel chair. She found very happy through listening to the little ones. She used to insist and spend little time from 4 p.m. every day to listen and watch the children play and their laughter. She also spent much time in prayer.

**07.** Purpose of Karuna Nilayam:

One day there was a pregnant girl went to the new warden and pleaded for the support to be there and deliver her baby. New warden said, 'No' to her and reminded that once before also she came for the same and this was the second time. Refusal really hurt her and she went to Ms. Hutchins and cried much. Ms. Hutchins understood her vulnerable situation and assured her support and sent her and was in prayer. The priest who served at Karuna Nilayam came to know about the sadness of Ms. Hutchins when she asked him to arrange a place for her to reside. She said, 'If there is no place in the Karuna NIlayam founded by God for such unwanted mothers, I too have no place here'. The Priest listened to her and promised to do the needful and tried his best to facilitate her to be in peace. He went and spoke to the warden and found that pregnant girl and admitted her to Karuna Nilayam. He was able to do whatever she needed for the safe delivery of the baby according to Ms. Hutchins' wishes and informed that good news.

**Incarnation of Ms. M. V. Hutchins in her humanization**

**Life & History**

Ms. Muriel Violet Hutchins was born in Hay, Breconshire, Wales on March 07, 1899. In 1926 she obtained her Master of Arts Degree from the University of Oxford and taught in Stovebridge for 3 years. Though she belonged to the Methodist Church under the nurture of wealthy well-off parents she joined Anglican Church and became as a missionary of the CMS. She came to Sri Lanka on November 10, 1927 and engaged in teaching English and Latin to the senior classes at Ladies' College, Colombo for a few months.

She learnt Tamil language and Carnatic Music in South India and became a teacher at Chundikully Girls' College at Jaffna. Later she moved to Kopay in 1931. In 1942 she was made the Principal of Nallur Training College for Women. She retired in 1954 from teaching and went to her mother land and felt that she was 'out of place' because her heart and soul were in Wanni. She returned to Sri Lanka and opted to serve poorest of the poor particularly 'women' as a CMS missionary in Kilinochchi in 1955.

She passed away peacefully after making a lasting impression by becoming and living as a Sri Lankan, a Tamil, a preacher, a teacher, an ecumenist, and women liberator and as a person who lived the

Good news of the Reign of God. Ms. Hutchins was one of the incarnated persons beyond any doubt. Factually she became as one of the community wherever she worked and lived. Responded to God's call within the call through her incarnation model was the peak. It was very clear that she had an inner search and a call within the call which could be seen in one of her poems titled, 'The Lament of a disappointed School Mistress (Missionary)' and her actions. That poem reads:

I once was a teacher away in the west
Teaching English and Latin and doing my best
For girls of all ages from ten to eighteen
To make their wits sharp and their intellects keen
And fit for the Senior Locals.

I said I am weary of teaching Macbeth
And Julius Caesar bores me to death
No language is duller than Latin I am sure
I shall really go mad, if I teach any more
Fore these horrible Senior Locals.

So I thought I won't stay here in England to teach
But I'll go to Ceylon and do nothing but preach
I'll in a hut in a jungle place
Where no one has ever seen a white face
Where lions look in at the window at night
And snakes come to visit and probably bite.
And there are no Senior Locals.

But I came and found a prosperous town
Where motors go up and buses go down
Where never a snake or a lion came by
And the people I met were as clever as I
And had all passed the Senior Locals.

So still I am teacher and working away
At English and Latin the whole weary day
With girls of all ages from ten to eighteen
To make their wits sharp and their intellects keen
And fit for the Senior Locals.

I retired after teaching for years and
A transfer at last to a jungly spot I got
Where an elephant came to the garden at night
And pigs ate manioc roots with delight
Where the monkeys came stealing the fruit from a tree
And a little green snake paid a visit to me
And there were no Senior Locals.

This poem was written by her in 1930 except last verse which was added in December 1977. (Here 'Senior Locals' refers to school leaving examinations). According to her own reflection and from her incarnation at Kilinochchi it was very clear that she was able to get inner satisfaction through responding to her special call of God at Karuna Nilayam community life.

She was very much touched by Tamil. She loved Tamil language, Carnatic music, traditional oriental architecture and Tamil customs like hospitality except the evil system called caste which brought divisions in the community, hate and resistance. The structure of Chunnakam Christu Seva Ashram attracted her and she took that as the model for the Chapel at Karuna Nilayam (St. Paul's Church, Kilinochchi) which was design by engineer Mr. Canagarajah. She sang Tamil songs with lily flute and violin, which drew her closer and closer to the people and experience inner peace. It is remarkable to note that she had travelled to the extent of translating Tamil songs to English. In addition to this she engaged in staging many dramas. Though she had an English accent, she spoke good grammatical Tamil in ordinary conversations as well as in preaching and teaching. She wanted all to speak good standard Tamil. Once at the Kopay Christian College when a student asked her for a stamp and an envelope she instructed him to ask that in pure Tamil. She enjoyed eating with her fingers instead of folk and spoon. Rice and curry was her simple food with the Karuna Nilayam community. Her basic mode of transport was cycling. When she cycled she used to sing Tamil songs in Jaffna, Kopay and Kilinochchi. Generally she used to take broom sticks, pillow cases and other items which Karuna Nilayam produced with her when she cycled and sold them. She had carried cement bags in her bicycle even when she was 70 years. She got Sri Lankan citizenship in 1951 when Sinhala only Act was passed. She identified as one in the community of Karuna Nilayam after 1955. She encouraged and facilitated everyone with whom she came in to contact to come up in life.

Identification with needy and poor was very much consistence throughout the life of Ms. Hutchins. When she was in Kopay she treated the down trodden with human dignity. Her leadership was in the spirit of servanthood. In the Karuna Nilayam community she became a servant at times when there was a need. Once she took one from the Karuna Nilayam Community to the hospital at Jaffna. On that occasion, she carried her bag and had provided necessary care to the patient with Mother-Servant hood model. It is also worth to note that when she was at the Maharagama Cancer Hospital for treatment, the doctors provided a bed with necessary medicines in a ward where many patients were lying on mats. When the doctors came to the ward the next day, they found that Ms. Hutchins had given the bed to a more vulnerable person and was using a mat and sleeping with other patients.

For Ms. Hutchins, 'Response to God was Response to the need'. She was keen to provide timely responses to the emerging need. She said, 'None of it was my planning. We just had to deal with needs as they arose. We just carried on, until new demands were made which required new decisions'. In the 1958 riots many got displaced. Tharumapuram was the first settlement for a few victims at Kilinochchi. With the initiation of Archdeacon Navaratnam an Anglican community emerged. Ms. Hutchins understood the needs of the victims and responded very positively. She invited Christian children to Karuna Nilayam and arranged schooling. She facilitated young women to come to Karuna Nilayam and undergo training in sewing. She often visited St. Luke's Church, Tharumapuram and shared the good news. It is worthy to note that she helped few victims who came to Karuna Nilayam due to 1977 riots. She understood responding to the need as responding to God.

Ms. Hutchins had a wider ecumenical heart, which was evident throughout her life. When she was engaged in teaching she had good links with Revd. Bicknell of Jaffna College, Revd.Peto of St. John's College, Jaffna, Ms. Book Walker of Uduvil and Ms. Northway of Chundikully. They used to get-together with Ms. Hutchins and discuss various matters related to the proclamation of the Good news. After coming to Kilinochchi she had ecumenical relationship with Navajeevanam where Revd. Thambirajah of Church of South India and Ms. Elizebeth Baker of Wesleyan Mission. They engaged in wiping out the tears of the poor with genuine commitment to God. She understood the religiosity of Hindus and respected that. Once in a casual conversation she said that those who believed in rebirth might be reborn till they reached perfection. She tried her best to have a temple in indigenous form of people than western culture.

Upliftment of women who were not accepted and nurtured with human dignity got preferential care of Ms. Hutchins. Once a mother came to Karuna Nilayam with two children and cried for a safe place to stay and support. She shared with tears that her husband was beating her and she was not able to tolerate him anymore. That woman felt that the only thing she had was to commit suicide. After listening to her story Ms. Hutchins accepted her along with the two children to the Karuna Nilayam community. Her drunked husband used to shout and scold Ms. Hutchins often from the road. Generally Ms. Hutchins ignored and once she commented to that poor lady, 'your husband is scolding me' with a smile. It is worth to state a story of a mentally retarded girl of Karuna Nilayam who often scold Ms. Hutchins. There was a girl who was admitted to Karuna Nilayam who generally scolded and used to shout at fellow inmates, matron and all other children. Some time she scolded Ms. Hutchins as well. Ms. Hutchins always tolerated and ignore because she had a motherly heart. There was another woman who was also mentally retarded and used to fight and go to the police station and make complaints. When this woman goes out Ms. Hutchins always went after her and got her back to Karuna Nilayam. If she was at the Police station Ms. Hutchins went there and encouraged her to return by showing love and concern. Ms. Hutchins always encouraged women to study well and get trained to come up in the midst of challenges and patriarchal structures.

**Conclusion**

An old trader of Kilinochchi said, 'The people of Vanni were able to see God in Ms.Hutchins. Her life reflects incarnation in the spirit of God.

By Revd.Fr.S.D.P.Selvan,
St. Andrew's Church, Palai.

## கருணா நிலையத்தில் பணியாற்றிய காப்பாளர்களது விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | **செல்வி. மியூரியல் வயலட் ஹட்சின்ஸ்** | | |
| | **- தோற்றுனர்** | 1955 | - 1983 |
| 2. | திருமதி. ராணி அரசகுலசிங்கம் | 1984 | - 1986 |
| 3. | திருமதி. லீலா எமேசன் | 1987 | - 1990 |
| 4. | செல்வி. ஜீவா முருகேஸ் | 1991 | - 1994 செப்டம்பர் |
| 5. | திருமதி. தயா ரெறன்ஸ் மோகன் | 1994 ஒக்டோபர் | - 1999 டிசம்பர் |
| 6. | செல்வி. கிளாடிஸ் ஜெயரட்ணம் | 2000 | - 2002 |
| 7. | செல்வி. கேதீஸ்வரி இராஜரட்னம் | 2003 ஜனவரி | - 2003 ஆகஸ்ட் |
| 8. | செல்வி. செ.மேரி றெனிக்கா | 2003 செப்டம்பர் | - இன்று வரை |

## கருணா நிலையத்தில் பணியாற்றிய பொறுப்பமைக் குருவானவர்களின் விபரம்

| | | |
|---|---|---|
| 1. | அருட்பணி ஐசக் செல்வரட்ணம் | 1975 |
| 2. | அருட்பணி ஜோசுவா இரத்தினம் | 1976 |
| 3. | அருட்பணி ஜுபிலி பொன்னையா | 1976 |
| 4. | | 1978 - 1982 |
| 5. | அருட்பணி ஐசக் செல்வரட்ணம் | 1983 |
| 6. | அருட்பணி ஜே.நோ.ஜெயச்சந்திரன் | 1988 |
| 7. | அருட்பணி எ.ஆ.ஜெயராஜ் | 1993 |
| 8. | அருட்பணி ச.ஐ.பாலகுமார் | 1994 |
| 9. | அருட்பணி ந.ஜே.ஞானப்பொன்ராஜா | 1996 |
| 10. | அருட்பணி செ.பி.நேசகுமார் | 1997 |
| 11. | அருட்பணி செ.டே.பரிமள செல்வன் | 1999 |
| 12. | அருட்பணி சிறில் ரோஜ் | 2001 |
| 13. | அருட்பணி து.ஒ.திருக்குமார் (உதவித்திருப்பணியாளர்) | 2003 |
| 14. | அருட்பணி சார்ள்ஸ் டேவிற் | 2004 |
| 15. | அருட்பணி சி.கி.டானியல் | 2007 |
| 16. | அருட்பணி நா.பிரபாகர் | 2010 |
| 17. | அருட்பணி சி.கி.டானியல் | 2012 |

## கருணா நிலைய நிர்வாகக் குழு - 2015

**Board of Karuna Nilayam-2015**



Mr.V.S.Mahendran, Revd. N.J.Gnanakaruniyan, Revd.J.N.Gnaponrajah, Ven.S.J.Jeyaveerasingan (Director) Mr.T.Gurukularajah, Mr.S.V.James, Miss. S.Mary Renika (Warden), Mrs.Dhusy Thuseetharan, Revd.S.K.Daniel (Treasurer).

## கருணா நிலைய உத்தியோகத்தர்கள் - 2015

**Staff of Karuna Nilayam-2015**



01st Row from left Miss.R.Puspam, Miss.N.Yasitha, Miss. Esther Seenithamby, Miss. S.MaryRenika, VenS.J.Jeyaveerasingan, Rev. S.K.Daniel, Miss. M.Suganya,

02nd Row from left Mrs.L.Navamani, Mrs.L.Subani, Mr. T.Sowndararajah, Mr. M.Kumar, Mr. S.Sivalingam, Mrs.R.Mary Pilomina, Mrs.Aruna

03rd Row from left Miss.T.Jency, Mrs.N.Daniel, Miss.N.Tharmini, Mrs.S.Sivaneswary, Mrs.R.Sarveswary.

# கருணா நிலைய உத்தியோகத்தர்கள் - 2014

**Staff of Karuna Nilayam-2014**



01st Row from left Miss.R.Shanthy, Miss. Esther Seenithamby, Miss. S.MaryRenika, VenS.J.Jeyaveerasingan, Rev. S.K.Daniel, Miss.R.Puspam, Miss. M.Suganya,
02nd Row from left Mrs.Pathmawathy, Mr. S.Paranthaman, Mr.Sivanathan, Mr. M.Kumar, Mr. S.Sivalingam, Mr. T.Sowndararajah, Mrs.Mary, Mrs. N.Daniel.



Students - 2014





தோற்றுனரின் நினைவுகளோடு....



கருணா நிலையம், கிளிநொச்சி - 1986



கருணா நிலையம், கிளிநொச்சி: தொழிற்பயிற்சி - தையல் - 1986



தோற்றுனர் தருமபுரத்தில் - 1986




94வது பிறந்த நாளில் - 07.03.1993



அம்மையாரின் இறுதிச் சடங்கின் போது.... - 04.03.1996



அம்மையாரின் இறுதிச் சடங்கின் போது.... - 04.03.1996



பாண்ட் வாத்திய குழுவினர் பயிற்சி - 2008



பாண்ட் வாத்திய குழுவினர் பயிற்சி - 2008



இடப்பெயர்வில் கருணா நிலையம்: சமாதான இல்லத்தினருக்கான
தங்குமிடத்தை அமைக்கும் பணியில் மாணவர்கள் - ஜெயபுரம் - 20.01.2008



இடப்பெயர்வில் கருணா நிலையம்:
சமாதான இல்லத்தினருக்கான தங்குமிடம் - ஜெயபுரம் - 01.03.2008



இடப்பெயர்வில் கருணா நிலையம்: சமாதான இல்லம் - ஜெயபுரம் - 07.03.2008



இடப்பெயர்வில் கருணா நிலையம்: சமாதான இல்லம் - ஜெயபுரம் - 07.03.2008




பேராயர் உயர்அருட்பணி ஜே.ஜே.ஞானப்பிரகாசம் அவர்களுடன் கருணா நிலைய சமூகம்.



பேராயர் உயர்அருட்பணி டுலிப் சிக்கேரா அவர்களுடன் கருணா நிலைய சமூகம்.



கருணா நிலையம், கிளிநொச்சி :
2009 போரினால் சிதைவடைந்துள்ள பிரதான மண்டபம்



கருணா நிலையம், கிளிநொச்சி :
2009 போரினால் சிதைவடைந்துள்ள விடுதி



கருணா நிலையம், கிளிநொச்சி: கற்றல் செயற்பாடு - 2015



நூலகத்தில் மாணவர்கள் - 2015



கருணா நிலைய மாணவர்கள் - 2015



கற்றல் செயற்பாடு - 2015



Learning English through Skype - 2014



ஆண்டிறுதி மகிழ்வூட்டல் - 2014



கருணா நிலையம், கிளிநொச்சி: துப்பரவு பணிகளில் மாணவர்கள் - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி: மாலை நேர விளையாட்டு - 2015



கருணா நிலையம், புனித பவுல் ஆலயம், கிளிநொச்சி:
தோற்றுனர் நினைவு வழிபாடு - 2015




கருணா நிலையம், கிளிநொச்சி: உழவர் திருநாள் வழிபாடு - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : சமாதான இல்லம் - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : சமாதான இல்லம் - தையல் - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : சமாதான இல்லம் - கோழி வளர்ப்பு - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : சமாதான இல்லம் - தோட்டம் - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : மியூரியல் முன்பள்ளி - 2014



கருணா நிலையம், கிளிநொச்சி : மியூரியல் முன்பள்ளி - 2014




கருணா நிலையம், கிளிநொச்சி : மியூரியல் முன்பள்ளி - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : மியூரியல் முன்பள்ளி - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி: தொழிற்பயிற்சி - கணனி - 2014



கருணா நிலையம், கிளிநொச்சி: தொழிற்பயிற்சி - கணனி - 2014



கருணா நிலையம், கிளிநொச்சி: தொழிற்பயிற்சி - தையல் - 2014




கருணா நிலையம், கிளிநொச்சி: தொழிற்பயிற்சி - தையல் - 2014




கருணா நிலையம், கிளிநொச்சி : பேராயர் லக்ஸ்மன் மண்டப திறப்புவிழா - 2013




கருணா நிலையம், கிளிநொச்சி : பேராயர் லக்ஸ்மன் மண்டப திறப்புவிழா - 2013



கருணா நிலையம், கிளிநொச்சி: மாடு வளர்ப்பு - 2014



கருணா நிலையம், கிளிநொச்சி: மாடு வளர்ப்பு - 2014



கருணா நிலையம், கிளிநொச்சி: திராட்சைத்தோட்டம் - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி: திராட்சை இரச உற்பத்தி - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : பொன்விழா மலர் வெளியீடு - 19.11.2011



கருணா நிலையம், கிளிநொச்சி : பொன்விழா மலர் வெளியீடு - 19.11.2011



கருணா நிலையம், கிளிநொச்சி : பழைய மாணவர்கள் சந்திப்பு - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : பழைய மாணவர்கள் சந்திப்பு - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : இரத்ததான முகாம் - 2015



கருணா நிலையம், கிளிநொச்சி : இரத்ததான முகாம் - 2015

# கருணா நிலைய வைரவிழா பாடல்

வைர விழாக்காணும் கருணா நிலையம்
வாழ்க வாழ்க வாழ்க
வசந்தம் பெருக வாழ்வும் மலர
வாழ்க வாழ்க வாழ்க

கருணா நிலையம் ஹட்சின்ஸின் கருவே
கருணையும் அன்பும் அவரது கொடையே
இல்லாரை ஏற்கும் ஏழையைத் தூக்கும்
இவ்வில்லம் வாழ்க இறையருள் பெருக
– வைர விழாக்காணும்...

மனங்கள் மகிழ உறவுகள் வளர
இயலாமை நீக்கும் கருணா நிலையம்
மனக்காயம் அகற்றும் கல்வியை ஊட்டும்
இவ்வில்லம் வாழ்க மனிதம் மலர்க
– வைர விழாக்காணும்...

இழந்தோரின் இருப்பே கருணா நிலையம்
இதயங்கள் மகிழ்வே இன்னலை அகற்றும்
வன்னியில் உயிர்ப்பு சமூகத்தில் விழிப்பு
இவ்வில்லம் வளர இணைவோம் நீர்வாரீர்
– வைர விழாக்காணும்...

பாடல் வரிகள்: அருட்பணி S.D.P.செல்வன்
மெட்டு: அருட்பணி ப.குணவதனி










On Line Printers, Vavuniya. T.P. 077-6169456